# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28

சுடர் 31 | கதிர் 252 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 20, வியாழக்கிழமை 04.08.2016


நல்லது செய்திருந்தால் ஏன் இந்த நடை?



பக். 12-13

# தாஜுதீன் கொலை வழக்கில் திருப்பம்

### ஜனாதிபதி செயலகத்திலிருந்து உத்தரவா?
### பொலிஸ் அதிகாரியின் தொலைபேசிக்கு அழைப்புக்கள்

கொழும்பு, ஓக. 4

பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுதீன் கொடூரமான முறையில் சித்திர வதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டபோது, நாரஹேறன் பிட்டிய பொலிஸ் நிலையத்தின் முன்னாள் குற்றப்பிரிவு பொறுப் பதிகாரிக்கு ஜனாதிபதி செயலகத் திலிருந்து சில அழைப்புக்கள் வந் துள்ளமை உறுதிசெய்யப்பட் டுள்ளதாக நீதிமன்றில் நேற்று தகவல் வெளியிடப்பட்டது. இந்த வழக்கு நேற்று கோட்டை மேல திக நீதிவான் மொஹமட் மிஹால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தாஜு தீன் கொலைசெய்யப்பட்ட வேளை, நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு வந்த அழைப்புக்கள் பரிசோதிக் கப்பட்டதாக அரச தரப்பு வழக் கறிஞர் கூறினார். பக். 23

## கொக்கிளாயில் முற்றுகிறது சர்ச்சை

# நீதிமன்றம் சென்றது மீன்வாடிப் பிரச்சினை

### கடற்றொழில் திணைக்களம் ஓர் இனத்துக்குச் சார்பாகச் செயற்படுகிறது என மன்றில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 4

முல்லைத்தீவு மாவட்டம் கொக்கி ளாயில் தமிழ் மீனவர்கள் வாடி அமைத்ததுக்கு எதிராகக் கடற் றொழில் நீரியல்வளத் திணைக் களத்தினால் நீதிமன்றில் வழக் குத்தாக்கல் செய்யப்பட்டது. அதன் மீதான வழக்கு விசாரணை நேற்று ஆரம்பமானது.

சிங்கள மீனவர்கள் வசப்படுத்தி வைத்திருந்த பகுதியில் தமிழ் மீனவருக்குப் பாரம்பரியமாக இருந்து வந்த உரிமை பிரதேச செயலகத்தால் மீளப் பெற்றுக் கொடுக்கப்பட்டதை அடுத்தே கொழும்பில் இருந்து வந்த உத் தரவின் அடிப்படையில் முல்லைத் தீவு மாவட்ட மீனவர்களுக்கு எதி ராக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

இவ்வாறு திணைக் பக். 23

# ஒளிப்படப் பத்திரிகையாளர் ரட்ணம் நேற்றுக் காலமானார்

### இன்று காலை அவரது இறுதிக்கிரியை



யாழ்ப்பாணம், ஓக. 4

உதயன் பத்திரிகையின் ஒளிப்பட பத்தி ரிகையாளர் கந்தையா ரட்ணம் (வயது 68) நேற்று அதிகாலை சாவைச் சந்தி த்தார். விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த அவர் அதிகாலை 3 மணியளவில் யாழ்.போதனா வைத்தி யசாலையில் உயிரிழந்தார்.

அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவ ரது குடும்பத்தினருக்கு உதயன் குழுமத் தலைவர் மற்றும் உதயன் குழுமப் பணியாளர்கள் ஆழ்ந்த அனு தாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்துள்ளனர். பக். 23

# எங்கும் முகாம் அமைக்க அரசுக்கு உரிமை உண்டு

### முள்ளிவாய்க்கால் மக்களின் எதிர்ப்புத் தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கருத்து

கொழும்பு, ஓக. 4

தேசியப் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு எந்தவொரு இடத்திலும் முகாம் அமைக்கும் உரிமை அர சுக்கு உண்டு. அந்த வகையில் கடற்படை முகாம் அமைக்கவே முள்ளிவாய்க்கால், வட்டுவாக லில் காணி சுவீகரிக்கப்படவுள் ளது.

இவ்வாறு தெரிவித்தார் பாது காப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன.

காணி சுவீகரிப்புத் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயல ரின் அறிக்கை கிடைத்த பின் னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் பக். 25

## ஒக்டோபரில் 400 இடங்களில் கூகுள் பலூன் மூலம் வைபை

கொழும்பு, ஓக. 4

கூகுள் பலூன் திட்டத்தின் மூலம் ஒக்டோபர் மாத ஆரம்பத்தில் நாடு முழு வதும் 400 இடங்களில் வைபை இணைய சேவையை வழங்க எதிர் பார்ப்பதாக தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட் டல் உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர் னாண்டோ தெரிவித்தார்.

இந்த வைபை இணைய சேவையானது தற் போதுள்ளதைவிட இரு மடங்கு வேகத்தில் செயற் படும் என்றும், இதற்காக அதிக கட்டணம் அற விடப்படமாட்டாது பக். 24

## கடற்படைக்கு முள்ளிவாய்க்காலில் காணி பறிக்க மக்கள் கடும் எதிர்ப்பு

### அளவீட்டுப் பணிகளைக் கைவிட்டனர் அதிகாரிகள்



முல்லைத்தீவு, ஓக. 4

கடற்படைக்கு முகாம் அமைப்பதற்காக 617 ஏக்கர் காணியைக் கையகப்படுத்துவதற்கு, முள்ளிவாய்க்கால் மக்கள் நேற்றுக் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். காணியை அளவீடு செய்ய எடுக்கப்பட்ட முயற்சி மக்களின் போராட்டத்தால் கைவிடப் பட்டது. வட்டுவாகல் பாலத்தில் அமர்ந்து மக்கள் போராட்டம் நடத்தினர்.

அங்கு கூடிய 36 காணிகளின் உரிமையாளர்களும், முல் லைத்தீவு மக்களும் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தினர். அவர்களுக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பவற்றின் அரசியல்வாதிகளும் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (விரிவு பக்கம் 07)

## ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் நாளை கோலாகல ஆரம்பம்

பக். 14-15

# மாந்தை மர்மக் கிணற்றை தோண்டும் பணி நிறைவு

### அகழப்பட்ட மண்ணை ஆராய நீதிமன்று உத்தரவு





மன்னார், ஓக. 4

மன்னார் – திருக்கேதீஸ்வரம் பகுதியில் மனி தப் புதைகுழிக்கு அண்மையில் கண்டறி யப்பட்ட மர்மக் கிணற்றை அகழும் பணி நேற்று நிறைவுக்கு வந்தது. அகழப்பட்ட மண்ணில் ஏதாவது தடயங்கள் உள்ள னவா என்று ஆராயுமாறு மன்னார் நீதி வான் உத்தரவிட்டார்.

அந்தப் பணி இன்று வியாழக்கிழமை இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை காலை ஆரம்பித்த கிணற்றை அகழும் பணி 3ஆவது நாளான நேற்று நிறைவடைந்தது. கிணற்றின் ஆழம்வரை அகழ்வு மேற் பக். 25

## முச்சந்தி முரளி



அப்ப மக்களுக்கு உரிமை இல்லை என்றியளோ...

# கொன்று கொள்ளையிட்ட மூன்று பேருக்குத் தூக்கு

### வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக. 4

கொலை மற்றும் கொள்ளை யில் ஈடுபட்ட மூவருக்கு வவு னியா மேல் நீதிமன்று நேற் றுத் தூக்குத்தண்டனை விதித் துத் தீர்ப்பளித்தது.

வவுனியா – பாவற்குளம் பகுதி யில் 2004ஆம் ஆண்டு கொள்ளையடிப்பதற்காகக் கொலை செய்தார்கள் என்று 6 பேர் மீது சட்டமா அதிபரால் வவுனியா மேல் பக். 25


கம நலம்

Govisetha

அதிக கோடீஸ்வரர்களை உருவாக்கும் கொவிசெத

இன்றைய சுப்பர் பரிசு

ரூ. 46,386,709.60

நம்பிக்கையுடன் வாங்குங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் குடியிருப்புக்கு 250 நிரந்தர வீடுகள்

## மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டத்தில்

கிளிநொச்சி, ஓக.4
போரால் பாதிக்கப்பட்டு கடந்த 7 ஆண்டுகளாக தற்காலிக வீடுகளில் வசித்த கிளிநொச்சி, சிவபுரம் மாவீரர் குடியிருப்பைச் சேர்ந்த 250 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிவபுரம் கிராமத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பால் உருவாக்கப்பட்டது மாவீரர் குடியிருப்பு. அதில் 250 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்தன. அந்தக் குடும்பங்கள் இதுவரை தற்காலிக வீடுகளிலும், கொட்டில்களிலும் தமது வாழ்வை நடத்தி வந்தன. வீட்டு வசதி , வீதிகள் புனரமைப்பு போன்றவை இல்லாது அங்குள்ளவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ள இடர்களாலும் இந்தக் கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இடம்பெயர்ந்து அந்தப் பகுதியில் உள்ள மண்டபம் ஒன்றில் தங்கியிருந்தனர். அது தொடர்பாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகளுக்கு இந்த மக்களில் அவலம் தெரியப்படுத்தப்பட்டது.

தற்போது மாவீரர் குடியிருப்பைச் சேர்ந்த 290 குடும்பங்களில் 250 குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சு மூலம் வீடுகள் வழங்கப்படுள்ளன. 8 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைக்கும் நடவடிக்கைகளில் அந்தப் பகுதி மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஏழு ஆண்டுகளாக நாங்கள் தற்காலிக கொட்டில்களிலேயே வாழ்ந்தோம். அனைத்து அதிகாரிகளுக்கும் எமது கஷ்டங்களைத் தெரியப்படுத்தினோம். நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை. அப்போது அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடம் கூட வீட்டுத் திட்டத்துக்கான கோரிக்கையை முன்வைத்தோம். எங்களை மாவீரர் குடும்பங்கள் என்றும், விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர் என்றும் தெரிவித்து ஒதுக்கி விட்டார்.

கடந்த ஆண்டுகளில் மூன்று தடவைகள் எங்களுக்கான வீட்டுத் திட்டங்கள் வந்துள்ளன என்று கிராம அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டு பெயர், விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. ஆனால் ஒவ்வொரு முறையும் நாம் ஏமாற்றப்பட்டோம். தற்போது வீடுகள் கிடைத்துள்ளன. மகிழ்ச்சியாக இருக்கின்றது.

எங்களில் சிலர் வீட்டுத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படவில்லை. அவர்களுக்கும் வீட்டுத் திட்டங்கள் விரைவில் கிடைக்க வேண்டும். அதிகாரிகள் அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கோருகின்றோம். - இவ்வாறு மாவீரர் குடியிருப்பைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டத்தின் கீழ் 8 லட்சம் ரூபா பெறுமதியான 250 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு மாதங்களாக மக்கள் வீடுகளை அமைக்கின்றனர். ஒரு சிலர் லிண்டர் மட்டம் வரை கட்டி முடித்துள்ளார்கள். அந்தக் காணிகள் மக்களின் காணி இல்லை. மக்களுடைய நிலையை கருத்திற்கொண்டு அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க அந்தக் காணிகளில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சிவபுரம் கிராமத்தில் 290 குடும்பங்களின் பதிவுகளே உள்ளன. ஆனால் தற்போது அதன் எண்ணிக்கை 350 ஆக உயர்ந்துள்ளது. அவர்களில் 250 குடும்பங்களுக்கே தற்போது வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.- என்று கண்டாவளை பிரதேச செயலாளர் முகுந்தன் தெரிவித்தார். (ற-21,426,ரி3)

# போலி உறுதியைத் தயாரித்து காணி ஒன்றை விற்ற பெண்

*கைதாகிப் பிணையில் விடுவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக.4
போலியான காணி உறுதிப் பத்திரத்தைத் தயாரித்து காணியொன்றை விற்பனை செய்த குற்றச்சாட்டில் மானிப்பாய் றாஜி என அழைக்கப்படும் பெண் யாழ்ப்பாண சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

பணத்தைத் திருப்பிச் செலுத்துவதாக அவர் மன்றில் கூறியதனையடுத்து அவரை பிணையில் விடுவிக்க நீதிவான் மன்றம் அனுமதி வழங்கியது.

மானிப்பாய் பகுதியில் அமைந்துள்ள காணியொன்றை விற்பனை செய்வதற்காக குறித்த பெண் 2015ஆம் ஆண்டில் அந்தப் பகுதியை சேர்ந்த வேறொரு பெண்ணிடம் 23 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டு உறுதிப் பத்திரத்தை முடித்து கொடுத்தார். குறித்த உறுதியை பெற்றுக் கொண்டவர்கள் அதனை பரிசோதித்த போது, அது மோசடியான முறையில் தயாரிக்கப்பட்டமை தெரிய வந்தது. அந்தக்காணி முன்னாள் அரசியல்வாதியும் பிரபல சட்டத்தரணியுமான ஒருவரின் உறவினரின் காணியெனவும், அவர் 40 வருடங்களுக்கு முன்னரே இறந்தமையும் தெரிய வந்தது.

அதனைத் தொடர்ந்து காணி வாங்கியவர்கள் குறித்த பெண்ணிடம் கேட்ட போது, பணத்தை திரும்பவும் தருவதாக தெரிவித்திருந்தார். எனினும் நீண்ட காலமாக பணத்தை மீளக் கொடுக்காமல் ஏமாற்றியமையால், இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடந்த ஜூன் மாதம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் அந்தப் பெண்ணை கைது செய்த பொலிஸார், நேற்று அவரை யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தினர். பெற்றுக் கொண்ட முழுப் பணத்தையும் அடுத்த தவணையில் செலுத்துவதாக அவர் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, அவரை 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் செல்ல நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

குறித்த பெண் தொடர்பாக ஏற்கனவே பல முறைப்பாடுகள் கிடைத்த சந்தர்ப்பத்தில் அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-103)

# யாழ். கலாசார நிலைய நிர்மாண பணிகள் அடுத்த மாதம் ஆரம்பம்

**ஒப்பந்த நிறுவனத்திடம் நேற்று காணி கையளிப்பு**

யாழ்ப்பாணம், ஓக. 4
இந்திய அரசின் 1.2 பில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள கலாசார மையத்திற்கான நிலம் நேற்றைய தினம் கட்டிட ஒப்பந்த நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டது .

இதனைக் கையளிக்கும் நிகழ்வு யாழ். நூலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலாசார மையத்துக்கான கட்டுமானப் பணிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு, இரண்டு வருடங்களில் நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் நடராஜன், யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன், மற்றும் இந்தியாவிலிருந்து வந்த கலாசார மத்திய நிலையம் அமைப்பது தொடர்பான கட்டட நிர்மாணத் துறை நிபுணர்கள், கட்டட வடிவமைப்புக் கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-105)

# லாண்ட்மாஸ்டர் டிஸ் வெட்டியதில் காலை இழந்தார் குடும்பத்தலைவர்

யாழ்ப்பாணம், ஓக. 4
லாண்ட்மாஸ்டர் மூலமாகத் தோட்டக் காணியை உழுத குடும்பத்தலைவர் ஒருவர் கால் தடம்புரண்டு விழுந்ததனால் உழவு டிஸ் கால் பகுதியை வெட்டியது. சிகிச்சை பயனளிக்காது முழங்காலுடன் கால் அகற்றப்பட்டது.

தெல்லிப்பழை துர்க்காபுரம் பகுதியிலுள்ள தோட்டக் காணியில் நேற்றுக்காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கதிரன் தவபாலரத்தினம் (வயது-50) என்பவரே இவ்வாறு கால் துண்டிக்கப்பட்டார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

காணியின் மூலைப் பகுதியில் லாண்ட் மாஸ்டரை திருப்ப முற்பட்ட வேளையில், கால் தடம்புரண்டு வீழந்தார். டிஸ்ஸுக்குள் அவரின் கால் அகப்பட்டது. டிஸ் அவரின் வலது காலை அரிந்து படுகாயமடைந்தார். அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சத்திர சிகிச்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் அவரின் வலது கால் முழங்காலுடன் துண்டிக்கப்பட்டது. அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (வ-4,36)

## அருணலு கௌரவிப்பு நிகழ்வு இன்று

கொமர்சல்வங்கியின் அருணலு கௌரவிப்பு நிகழ்வு இன்று மாலை 4.00 மணிக்குவங்கியின் மானிப்பாய் கிளையில் இடம் பெறுகிறது.

அருணலுக் கணக்கை பேணிய மாணவர்களில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களே கௌரவிக்கப்படுகிறார்கள். (வ)

# மாவை. அலுமினிய ஆலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 4
மாவிட்டபுரத்தில் போருக்கு முன்னர் இயங்கிய அலுமினியத் தொழிற்சாலையை மீளவும் இயக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

மாவிட்டபுரம் சந்திப் பகுதியில், இடப்பெயர்வுக்கு முன்னர் அலுமினியத் தொழிற்சாலை இயங்கி வந்தது. அலுமினிய உற்பத்திகள் பலவும் இங்கு தயாரிக்கப்பட்டன. போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் 2011ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். அலுமினியத் தொழிற்சாலை முழுமையாக உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது.

மக்கள் மீள்குடியமர்ந்து 5 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், அந்தத் தொழிற்சாலையை மீள இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. வேலை வாய்ப்பு இல்லாத நிலையில் பலர் இருக்கின்றமை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றே இதனை மீளவும் இயக்குவதற்கு முன்வந்துள்ளது. இதன் சீரமைப்புப் பணிகள் விரைவில் நடைபெற்று தொழிற்சாலை மீள இயங்க ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5-101)

# மாணவர்களின் கற்றலுக்கு இடையூறாக ஒலிபெருக்கி இயக்கினால் சட்டம் பாயும்

*நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்து*

யாழ்ப்பாணம், ஓக. 4
பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குத் தொல்லை கொடுக்கும் வகையில் ஒலிபெருக்கிகளை ஒலிக்கவிடும் நபர்களுக்கு எதிராகப் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கினார் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன்.

நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் முதல் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெற்று வருகிறது. எனவே கோவில்களில் ஒலிக்கவிடும் ஒலிபெருக்கிகளால் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்ளுக்குத் தொல்லை ஏற்படுகிறது. கோயில்களில் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகளை ஒலிக்கவிட்டால், அந்த ஆலய நிர்வாகத்துக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அமைதியான முறையில் பாடங்களை ஆயத்தம் செய்வதற்கு ஆலயங்களின் ஒலிபெருக்கிகள் இடையூறாக இருந்து தொடர்ச்சியாகத் தொல்லை கொடுத்து வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பொதுமக்களுக்குத் தொல்லை கொடுக்கும் ஒலிபெருக்கிகள் தொடர்பான பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 81 ஆம் பிரிவின் கீழும், வணக்கத்தலங்களில் ஒலிபெருக்கிகள் பயன்படுத்துவது தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் ஆசிக் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரமும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும். எனினும் வணக்கத்தலங்கள் தொடர்ந்து நீதிமன்றப் பணிப்புரைகளை மீறிச் செயற்பட்டு வருகின்றன. இது சட்ட மீறல் நடவடிக்கை. அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தும் ஒலிபெருக்கிப் பாவனையாளர்களை உடனடியாகக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கைது செய்யப்படுபவர்களுக்கு எதிராக அந்தந்த நீதிவான் மன்றங்களில் வழக்கு தாக்கல் செய்து குற்றவியல் நடவடிக்கை முறை கோவையின் 98ஆம் பிரிவின் கீழ் ஒலிபெருக்கியே பாவிக்கக்கூடாது என்ற தடை உத்தரவுகளைப் பெற்று சட்டத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிபதி பணிப்புரை விடுத்தார். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 450 மழை நீர்த் தொட்டிகள் அடுத்த வாரம் கையளிப்பு

*வடக்குக்கு வருகிறார் சந்திரிகா*

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அமைக்கப்பட்ட மழை நீர்த் தொட்டிகளை தேசிய நல்லிணக்க ஒருங்கிணைப்பு செயலகத்தின் பணிப்பாளரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அடுத்த வாரம் கையளிக்கின்றார்.

இதில் யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 400 மழை நீர்த் தொட்டிகள் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்படுகிறது. கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட 50 தொட்டிகளைக் கையளிக்கும் நிகழ்வு மறுநாள் 12ஆம் திகதி பூநகரிப் பிரதேசத்தில் இடம்பெறவுள்ளதாக மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்தனர். (வ-101)

## தரம் 5 மாணவர்களுக்கு வழிகாட்டல் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஓக. 4

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கொக்குவில் பொதுநூலகத்தால் தரம் 5 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டல் பரீட்சைகள் நேற்று முதல் ஆரம்பிக் கப்பட்டதாக நல்லூர் பிரதேச சபைச் செயலர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையானது எதிர்வரும் 10 ஆம் திகதிவரையும் கொக்குவில் பொது நூலகத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை நடைபெறுகிறது.

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வதிவிட மாணவர்களாகவும், நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாடசாலையில்கல்வி பயிலும் மாணவர்களாகவும், கொக்குவில் பொது நூலகத்தில் சிறுவர் வாசகர் வட்ட மாணவர்களாகவும், அங்கத்தவர்களாகப் பதிவுகளை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களுமே இந்தப் பரீட்சையில் கலந்து கொள்ளமுடியும் என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்தப் பரீட்சையில் பங்குபற்றும் மாணவர்கள் எதிர்வரும் 12ஆம் திகதி பி.ப.2.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும் கருத்தரங்கிலும் பங்குபற்றமுடியும் என பிரதேச சபைச் செயலர் தெரிவித்தார். (வ-ரீ)

---

### ஐயாவை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



சர்வமத இந்துக் குருமார் ஒன்றியத்தின் 26ஆவது பாராட்டு விழாவின் போது (23.07.2016)
எமது ஆலய குரு
"கிரியா ரத்னம்", "யாகசம்ரட்சக சிரோமணி", "சிவநெறிச் செம்மல்"
**பிரம்மஸ்ரீ ப.சோமஸ்கந்த சர்மா**
அவர்கட்கு "யாக சம்ரஷ்யகர் விபூஷன்" எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**ஆலய பரிபாலன சபை,**
**கான்றைச்சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் தேவஸ்தானம்.**
**(கலட்டிப் பிள்ளையார்)**
**மீசாலை வடக்கு. வேம்பிராய்.**

---

### மணிவிழா வாழ்த்துக்களும் சேவைநலன் பாராட்டும்



திருமதி **கலாநிதி தெட்சணாமூர்த்தி**
(அதிபர் ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம் - நெடுந்தீவு)

26 வருட கல்விச் சேவையை நிறைவு செய்த அதிபர் அவர்களை சீரும்சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள்.
நெடுந்தீவுக் கோட்டம்.

---

### கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
24 . 01 . 1947



இறப்பு
03 . 08 . 2016

## கந்தையா ரட்ணம்

(ஒளிப்பட ஊடகவியலாளர்)

ஓராயிரம் வார்த்தைகளை ஒளிப்படம்தனில் மெருகூட்டியவன்....
நிகழ்வுகள் பலநாடி நாழிகைகளின் பல கோடியை கருத்துருவாய் உருவகித்தவன்....
புகைப்படக்கருவியை தன்னூடு ஊடாடிக் கொண்டோடி மக்கள் மனங்களில்
நிஜங்களை நிதர்சனமாய் தந்தவன்....
உதயனின் உறவுகளோடு புன்னகைப் பதிகம்பாடி அன்பானவன்...
எங்கள் உளமதில் நீக்கமற உறிறைந்தவன்...!

யார் இந்த புகைப்பட உரைஞன்...
எந்தையர் முத்தாய்ப் பெற்றெடுத்த ரத்தினமே அவன்...
கந்தையா ரட்ணம் எனும் கருத்தின் ராட்டின உ(சா)லவலே இவன்...
அனுதினம் உதயமாகும் உதயச் சூரியோதயங்களிடை முகம்புதைக்கும்
பொன்னகைச் செண்டானவன்....
காலனின் மடியில் நீள உறங்கியபடி இப்போதும் கருத்துரைக்கிறான்...
எம்முள்ளாய் உலவியிருக்கும் சங்கதி சொல்கிறான்...
சோகமுகச் சீரோடு ஆத்ம சாந்தம் உரைக்கிறோம்...
உந்தன் ஆன்மா அமைதிபெற பிரார்த்திக்கிறோம்...!!

ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...!! ஓம் சாந்தி...!!!

உதயன் குழுமத் தலைவர் மற்றும் பணியாளர்கள்

---

**Galaxy Star** வெற்றி வாரம் 80 திகதி 03.08.2016

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
01 06 25 42 45

அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,721,120/-

---

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்: 2788 திகதி 03.08.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
22 26 44 63 C 69
ரூ.10,615,800/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

---

## HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE

**உதவி தாதி பயிற்சி நெறி (Nursing Assistance)**
**பயிற்சிநெறிக் காலம் -ஒரு வருடம்**
**பயிற்சி நேர வகுப்புகள் - திங்கள்-வெள்ளி**
**விண்ணப்ப முடிவு திகதி: 22.08.2016**

க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப் பங்களை திருச்சிலுவை சுகாதார விஞ்ஞான பாடசாலை இல. 767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம், என்னும் விலாசத்துக்கு சுய விலாசமிடப் பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும்.

**Mobile:- 077 1159391, Telephone:- 021 300 1102**

---

### 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
**சுப்பிரமணியம் கந்தசாமி**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.08.2016) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளைமறுதினம் (06.08.2016) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 29.06.1936 — மறைவு 07.07.2016

**குடும்பத்தினர்**
**ஆஸ்பத்திரியடி,**
**கோப்பாய் மத்தி.**

(ஜே.3459) (13.18)

---

## பதவி வெற்றிடம்

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள UNION ENTERPRISE ஸ்தாபனத்திற்கு GARDEN HOSE,AGRO COIL சந்தைப் படுத்தலுக்கான விற்பனைப் பிரதிநிதி SALES REPRESENTATIVE வேண்டப்படுகின்றனர்.

**வயதெல்லை: 20 தொடக்கம் 30 வரை**

**கல்வித்தகைமை:** க.பொ.த உயர்தர தகைமையும் / மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரமும் உடையவராய் இருத்தல் அவசியம்.

விண்ணப்பதாரி யாழ் மாவட்டத்தை வதிவிடமாக கொண்டிருத்தல் கட்டயமான தேவையாகும்.

**விண்ணப்ப முடிவுதிகதி : 20.08.2016**

**இயந்திர இயக்குனர் "MACHINE OPERATORS"**

**வயதெல்லை: 20-30 வரை**

**கல்வித்தகைமை:** க.பொ.த உயர்தரத்துடன் கூடிய யாழ் தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் கற்கை நெறி சான்றிதழ் பெற்றவராகவோ அல்லது இயந்திரம் சம்பந்தமாக வேறு தொழில்நுட்ப கற்கை நெறி சான்றிதழ் பெற்றவராகவும் இருத்தல் இன்றியமையாதது.

சுயவிவரம், தொடர்பு எண்ணுடன் கூடியதாக மே/பா நாராயணா கட்டடப் பொருள் வர்த்தகம் இல92$^{C}$ ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உடனடியாக விண்ணப் பிக்கவும்.

**விண்ணப்ப முடிவுதிகதி 20.08.2016 ஆகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

01.நாவலர் வீதி Dr. சந்திரகுமாரின் கண்கிளினிக் இற்கு முன்பாகவுள்ள முத்துத்தம்பி ஒழுங்கையிலுள்ள 2½ பரப்புக்காணி

02. K.K.S. வீதியிலிருந்து மூன்றாவது காணி கோண்டாவில் மேற்கு K.R.S.மில் வீதியில் (கமலேஸ்வரி Building இற்கு முன்பாக உள்ள வீதி) 2 பரப்புக்காணி.

03.A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி மாங்குளத்திலிருந்து செல்கையில் கனகராயன் குளம் பெயர்ப்பலகைக்கு எதிர்ப்பக்கமாக உள்ள வீதியில் 2 ஏக்கர் காணி, கோழிப்பண்ணைக் கான கட்டடம், வற்றாத நன்னீர்க்கிணறு, மின் சார வசதி, சிறுகுடியிருப்பு உள்ளது. 100 வரையி லான தென்னங்கன்றுகளும் நடப்பட்டுள்ளன.

"தரகர்கள் தொடர்புகொள்ளவேண்டாம்"

தொ.பே. 076 973 4422

(ஜே.3474) (13.18) 077 393 4340

## விற்பனைப் பிரதிநிதி தேவை

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு
இலங்கையில் முன்னணி வகிக்கும் Panasonic battery & Bulps
ஆகிய பொருள்களை விற்பனை செய்வதற்கு
விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.
நேர்முகப் பரீட்சை இன்று(04.08.2016) முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை. குமரன் களஞ்சியம், ஆடியபாதம், கொக்குவிலுக்கு உங்கள் சுயவிவரக்கோவையுடன் (CV) நேரில் சமுகம் தரவும்.

மேலதிக விவரங்களுக்கு:
077 229 9566/ 077 150 0854

## வீட்டிலிருந்த வண்ணம் உழைக்க விரும்பும் பெண்களுக்கான விஷேட கருத்தரங்கு

"முற்றிலும் இலவசம்"

* பாடசாலை விடுமுறையில் உள்ளவர்கள்
* மேற்படிப்பு பயில்வோர்
* வேலைக்கு செல்பவர்கள்

பகுதிநேரமாக உழைக்க விரும்பும் பெண்களுக்கான ஆலோசனைகளுடன் கூடிய இலவச கருத்தரங்கு

காலம் : 06.08.2016 சனிக்கிழமை
நேரம் : முற்பகல் 10.00
இடம் : E- CITY ஆங்கிலக் கல்லூரி, 372D பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (வீரகாளியம்மன் கோயில் அருகில்)

தொடர்பு: 077 117 8176 (ஜே.3480) (13.18)


## மேலதிக கட்டணம் அறவிடும் பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஓக. 4
புதிய பஸ் கட்டண திருத்தத்துக்கு மேலதிகமாக கட்டணங்களை அறவிடும் பஸ்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
இவ்வாறு போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் எம்.ஏ.பி.ஹேமச் சந்திர தெரிவித்தார்.
பஸ் கட்டணம் தொடர்பான சோதனை நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப் பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.
கட்டணங்கள் அதிகமாக அறவிடப்படும் பஸ்களுக்கு எதிராக தண்டப்பணம் அறவிடப்படவுள்ளது என்றும் தெரி வித்தார். (ந-5)

## வீட்டில் கள் வைத்திருந்த 20 பேருக்கு தண்டம்

தென்மராட்சி, ஓக.4
வீடுகளில் அனுமதியின்றி அதிக அளவு கள் வைத்திருந்த 20 சீவல் தொழிலாளர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் கடந்த வாரம் 15 வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு 15 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.
நேற்று 5 வழக்குகள் பதில் நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 5 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (ந-9)


## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, சத்திரச் சந்தியில் இருந்து கொட்டடிப் பாதையில் அகலம் 11½ நீளம் 70அடி கீழ்தளம், மேற்தளம் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.
071 560 4213

## பணியாளர்கள் தேவை

விற்பனையாளர் } ஆண், பெண்
சிட்டை எழுதுநர் } இருபாலாரும்.
காசாளர்
கணக்காளர் (2வருட அனுபவம்)
மேற்படி பணியாளர்கள் உடன் தேவை.
தொடர்பு: பேப்பர் கவுஸ்,
300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## பெயர் மாற்றம்

தம்பாட்டி, ஊர்காவற்றுறையில் வசிக்கும் சிங்கராசா சந்திரலேகா ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் சிங்கராசா சாயாதேவி என பெயர் மாற்றம் செய்ய உள்ளதை இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன், இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் சிங்கராசா சாயாதேவி என கையொப்பம் இடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.
(ஜே.3486) (13.18.17)
சி.சாயாதேவி

## வீட்டுப்பணிப்பெண் தேவை

வடலியடைப்பு, காலையடி பண்டத்தரிப்பிலுள்ள வீடொன்றிற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. தங்கியிருந்து வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.
076 618 7074

## ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

ஒருநாள், ஒருவார, ஒருமாத ஊர்க்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு
077 245 3673


## நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்
### பெறுகைக்கான அழைப்பு

நந்தவனம் பாதுகாப்பு இல்லம் கிளிநொச்சிக்கான புதிய உலர் உணவுப் பொருள்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருள்கள் விநியோகமும் - 2016/2017

1. வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகை குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவுப் பொருள்கள், சமைத்த உணவு மற்றும் தொற்று நீக்கிப்பொருள்கள் விநியோகித்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வரும் நிறுவனங்களுக்குக் கோருகின்றார்.

| தொடர் இல. | பெறுகை இல. | நிறுவனங்கள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| -01. | NP/30/02/Acc-05/Food/-2016-03 | நந்தவனம் பாதுகாப்பு இல்லம் - கிளிநொச்சி | 50,000 |

2. விலைக் கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கான வியாபார பதிவுடைய ஒருநபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பிப்பவருக்கு ஆகக் குறைந்தது ஒருவருடம் அரசாங்க நிறுவனத்திற்கு இடையீடின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்
4. பொருத்தமான உத்தரவாதமுறி பெறப்பட்டு பெறுகையுடன் இணைக்கப்படல் வேண்டும். உத்தரவாத முறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
5. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்ற படிவத்தினை பூர்த்தி செய்துபெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக **ரூபா.500/=** இனை காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் **08.08.2016** தொடக்கம் **16.08.2016** வரையான காலப்பகுதியில் **09.00** மணி தொடக்கம் **15.00** மணிவரை பெற்றுக்கொள்ளலாம். மேலும் **10.08.2016** காலை **10.00** மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக் கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்துகொள்ளலாம்.
6. விலைக் கேள்விகள் **22.08.2016** ஆந்திகதி **14.00** மணிக்கு முன்பதாகபதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் ஆணையாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (**தொ.பே.இல.** 021 222 8321)
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகள் நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லதுஇப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தி.விஸ்வரூபன்**
தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,
மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை,
யாழ்ப்பாணம்.
**தொலைபேசி** :- 021-205-7102 **தொலைநகல்** 021-205-7103
(சி.24513)(13.18.17)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினரின்
# விசேட அறிவித்தல்

இவ்வருடம் 05.08.2016 வெள்ளிக்கிழமை அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் விஷேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து அம்பாளின் வீதியுலாவும் நடைபெற உள்ளதால் இதற்கு வருகைதரும் பல்லாயிரக்கணக்கான அடியார்களின் அன்னதானப் பணியினை வழமைபோல் அமுதசுரபி மண்டபத்தில் நடத்த சகல ஏற்பாடுகளையும் சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வந்து அம்பாளைத் தரிசித்து அன்னதானத்திலும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அமுதசுரபி
அன்னதான சபை, நிர்வாகம், நயினாதீவு - 02.
021 321 3575
(J.3473)(13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொக்குவில் வீரமாபிடாரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர்

## 04.08.2016

### தல வரலாறு

திருக்கோயில்களாக சிறப்புப்பெற்றது நமது ஈழவளநாடு இந்த நாட்டைச் சிவாலயங்கள் விஸ்ணு ஆலயங்கள் சக்தி ஆலயங்கள் என்பன பெரிதும் அழகுபடுத்துகின்றன அந்தவகையில் சக்தி ஆலயங்களில் மிகவும் சிறப்புவாய்ந்த புராதன ஆலயமாக யாழ். நகரை அண்மித்த ஆனைக்கோட்டை கொக்குவில் பகுதி எல்லையில் வீரமாபிடாரி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. பொதுவாக கிராமத்தின் எல்லைத்தெய்வமாக விளங்கும் அம்பிகைக்கு பிடாரி என்றும் ஒரு பெயர் உண்டு. இந்த பெயர் கேட்பதற்கு ஒரு மாதிரி யாக இருந்தாலும் உண்மையில் இயற்பெயர் பீடைஹாரி என்பதாகும். அதாவது பீடை- தீவினை அல்லது துன்பங்கள். ஹாரி - விரட்டுபவள் அதாவது பீடைகளை - துன்பங்களை, தீவினைகளை நெருங்காமல் விரட்டுபவள் என்ற பெயரே பீடைகாரி என்று மருவி விட்டது என்பதுதான் உண்மை. இந்த ஆலய மூர்த்தி வழிபாடு மிகவும் தொன்மைவாய்ந்ததாக காணப்படுகிறது. கி.பி 1475 இல் சிங்கை பரராசசேகரன் நல்லூரை தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்த போது பல ஆலயங்களை புனரமைத்தான் என்று அறியமுடிகின்றது. ஆட்சிமாற்றத்தினால் அந்நியர்களான பறங்கியர் நம் மக்களின் மனதை புண்பட செய்யும் வகையில் யாழ்ப்பாணத்தில் பெரிதும் சிறிதுமாக 500 ஆலயங்களை இடுப்பித்தார்கள் என்றும் அதில் ஒரு ஆலய அம்மன் விக்கிரகத்தை சிவன் கோயில் குளத்திலேயே இட்டுச்சென்றனர் என்றும் அறிய முடிகிறது. இங்கிருந்து வழிபடும் அடியவர் ஒருவரின் கனவில் அம்மன் தோன்றி தான் இருக்கும் இடத்தை உணர்த்தி அந்த அடியவரும் அம்பிகை உணர்த்திய இடத்தை சென்று பார்க்கையில் அம்பிகையின் உருவம் கிடைக்க அவர் அகமகிழ்ந்து அதனை ஒரு மாட்டுவண்டியில் ஏற்றிக்கொண்டு வந்து தற்போது உள்ள இடத்தில் வைத்து வழிபட்டார் என்றும் கூறுவர்.

1975 ஆம் ஆண்டில் இந்த ஊர்ப்பெரியவர்களின் முயற்சியால் பலிஇடும் வழக்கம் நிறுத்தப்பட்டு கொட்டிலுடன் கூடிய ஆலயமாக ஆகம விதிக்கமைய கருவறையுடன் கூடிய ஆலயமாக மாற்றப்பட்டது காலப்போக்கில் அன்பர்கள் அடியவர்கள் அனைவரின் ஒத்துழைப்பு விடாமுயற்சி என்பவற்றின் காரணமாக உன்னத வளர்ச்சியடைந்து பெரிய தேர் ஓடும் ஆலயமாக மாறி தற்போது அழகிய பஞ்சதள ராஜ கோபுரத்துடன் காட்சியளிக்கின்றது. என்று உணருகயில் இந்த வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை மனம் நிறைந்து பாராட்டாமல் இருக்க இயலாது. இந்த ஆலயத்திற்கு இந்த கிராமத்தை சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல் அயற் கிராமங்களில் இருந்தும் பல்வேறு இடங்களில் இருந்தும் அன்னையை தேடி நாடி ஓடி வருபவர்கள் ஏராளம் ஏராளம்.

#### இந்து இளைஞர் மன்றத்தின் ஆசிச்செய்தி

வேண்டுவோர் வேண்டும் வரங்களைக்கொடுக்கும் பிடாரித்தாயே ஆடித்தேரேறி அடியார்களின் குறைகளை நீக்கி உலகெல்லாம் வாழும் அடியவர்கள் இன்புற்று ஆனந்தப்பெருவாழ்வு வாழ வேண்டுகின்றோம்.

இந்து இளைஞர் மன்றம் பிடாரி
அம்மன் ஆலயம்.



#### பிரதம குருவின் ஆசிச்செய்தி

அம்பிகையின் பத்து தின மகோற்சவத்தில் ஒன்பதாவது தினமான இன்று திருத்தேர் ஆகும். இது அழித்தல் தொழிலை குறிக்கும். அதாவது நான் என்ற அகங்காரம் எனது என்ற மமதை போன்ற ஆணவ குணமுள்ளவர்களது மனதினை அழித்து தூய்மையாக மாற்றுதல் என்பது இந்த திருத்தேர் நாளில் சிறப்பு. வண்ணை வீரமா பிடாரியின் அருட்பார்வை பட்டால் தூய்மையும் நல்ல சிந்தனையும் நல்ல எண்ணங்களும் தோன்றி எம் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். எல்லா வளங்களும் கிட்டும் மனச்சஞ்சலங்கள் நீங்கி எம் வாழ்வில் சாந்தி நிலவட்டும்.

பிரம்மஸ்ரீ சோ. முரளீதரசர்மா
தேவஸ்தான குரு தாவடி.

#### மகேஸ்வரக்குருக்களின் ஆசிச்செய்தி

எங்கும் நிறைந்திருக்கும் சக்தியானவள் காளியாய் மாரியாய் பிடாரியாய் பார்வதியாய் அவரவர் நினைக்கும் வடிவத்திலே உருவாமாகி திருவருள் புரிந்து கொண்டிருக்கிறாள் அந்த வகையில் இந்த ஆனைக்கோட்டைப் பதியிலே ஸ்ரீவீரமாபிடாரி அம்பிகையாக வடிவம் தாங்கி தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு நல்லருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறாள். பீடா ஹரி என்பதே பிடாரியாக மருவியது அதாவது பீடைகளை அழிப்பவள் எமது துன்பங்கள் துயரங்களை அழிப்பவள் அத்தகைய மகத்துவமிக்க வரலாற்றுப் பெருமை மிகு இவ்வாலயத்தில் இன்று இரதோற்சவம் நிகழ்கின்றது. தேரேறி வரும் அன்னையின் தெய்வீகப் பொலிவை அகக்கண்களாலும் மனக்கண்களாலும் காணும் அனைத்து அடியார்களுக்கும் அவர்களது துன்பங்களும் துயரங்களும் நீங்கி நித்திய மங்கல வாழ்வு வாழ அன்னையின் திருவருள் கிடைக்கப்படும். இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

சிவாகம கிரியா தத்துவநிதி
ஸ்ரீவத்ய வ. இராஜேஸ்வரக்குருக்கள்


**கன்னிஹா**
ஜீவல்ஸ்
99 E கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம். 021 222 4448

**அம்ச மஹால்**
திருமண மண்டபம்
Aadiyapaatham Road, kokuvil west , 021 2213488 077 7030418

**பிடாரி அம்பாள்**
சனசமூகநிலையமும்
இந்து இளைஞர் மன்றமும்
கொக்குவில் மேற்கு கொக்குவில்

**அம்பாள் வர்த்தக நிலையம்**
பிடாரி கோயிலடி சுபாஸ்

**திசானன் ஸ்ரோர்ஸ் அன் கௌதமி ரவல்ஸ்**
கொக்குவில் மேற்கு கொக்குவில்
கேணியடி.
தொ.பே. 077 6611764

**அம்பாள் சைவ உணவகம்**
பிடாரி கோயிலடி
கொக்குவில் மேற்கு

**சிறி அம்பாள் வெல்டிங் வேக்ஸ்**
கே.கே.எஸ் வீதி
நாச்சிமார் கோயிலடி

**பிடாரி களஞ்சியம்**
கொக்குவில் மேற்கு கொக்குவில்

**மணி ஸ்ரோர்ஸ்**
பிடாரி கோயிலடி
கொக்குவில் மேற்கு

**தயாளினி வீடியோ அன் பான்சி கவுஸ்**
பிடாரி கோயிலடி
கொக்குவில் மேற்கு

**கொழும்பு எசன்ஸ் ஹவுஸ்**
133/7 கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்

**ஏசியன் அக்கடமி**
கேணியடி கொக்குவில் மேற்கு
தரம் 1 முதல் O/L வரை A/L குழுவகுப்புக்கள் கணினி வகுப்புக்கள்
இலவச கணினி வகுப்புக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன

**மகாநதி ஜீவல்றி**
72 A கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**விநாயகா ஸ்ரோர்ஸ்**
ஆனைக்கோட்டை வீதி
கொக்குவில்

**செல்வி நகையகம்**
1/3 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**அம்பிகை ஸ்ரோர்ஸ்**
பிடாரி கோயிலடி கொக்குவில் மேற்கு

**யாழ். கல்லூரி**
3ஆம் தவணையில் புதிதாக இணையும்
மாணவர்களுக்கு 500/= பணப்பரிசு
(தேர்சிறப்பு மலருடன் வரும்
மாணவர்களுக்கு மட்டும்

**வானவில் இன்டஸ்ரீஸ்**
பிடாரி கோயிலடி ஆனைக்கோட்டை
077 4598247

**எரிக்கனேஸ் மூக்குக்கண்ணாடி அகம்**
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
கிளை-கே.கே. எஸ் வீதி சுன்னாகம்
கே.கே. எஸ் வீதி கொக்குவில்

**பூரணி நகை மாடம்**
1/4 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**வெஸ்ரா நெல்லிக்கிரஸ்**
ஆனைக்கோட்டை

**இலங்கைராசா ஸ்ரோர்ஸ்**
V.N.T
67 மேற்கு மார்க்கட்
பெரியகடை யாழ்ப்பாணம்

**சக்தி பியூட்டி பார்**
பிடாரி கோயிலடி
கொக்குவில் மேற்கு

**கணேசா களஞ்சியம்**
( சந்துரு தேயிலை)
59, முருகமூர்த்தி வீதி, யாழ்ப்பாணம்

**சிறி சிவராம் றேடர்ஸ்**
48 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
021 2228629, 077 7560760


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**ஆசெயன் பரமூர்த்தி**

தோற்றம்
13.07.1946

மறைவு
17.07.2015

ஆண்டாண்டு காலம் அழுதாலும்
தீருமோ? அப்பா! உங்கள்
இறப்பு ஓராண்டு காலம்
ஓடி மறைந்துவிட்டது! ஆனால்
உங்கள் நினைவு எம் நெஞ்சில்
நீக்கமறக் கலந்துள்ளது.
காலங்கள் மறையலாம் எம் கனவுகளைச் சுமந்த எம்
அப்பாவின் நினைவுகள் மாறாது

குடத்தனை மேற்கு,
குடத்தனை. (N 102) (12,18)

உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

## நீங்கா நினைவில் ஓராண்டு!




திருமதி **சிந்தாமணி (தவம்) கோபாலசிங்கம்**

தவம் செய்து பெற்ற அன்புத் தெய்வமே!
ஆண்டொன்று கடந்தாலும் ஆறாது நின் நினைவு

29/1, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
077 146 7050

நின் பிரிவால்
நிலைதளம்பி நிற்கும்
சு.கோபாலசிங்கம்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




**சந்திரலிங்கம் சுதர்சன்**

திதி: துதியை (04.08.2016)

நிஜமாக நீங்கள் மறைந்து ஓராண்டானதோ
நீங்கள் இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைத்துத் தினம் தினம் ஏங்கித் தவிக்கின்றோம்,
காலங்கள் ஓடிக்கடந்தாலும் உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூஜிப்போம்

பக்கஸ் லேன்,
உடுவில் வீதி, மானிப்பாய்.

**குடும்பத்தினர்.**

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





செல்வி **அ.இந்துமதி**
தோற்றம் 05.05.1968
மறைவு 25.07.1998

திருமதி **கி.சிவகெங்கா**
தோற்றம் 11.04.1950
மறைவு 25.07.1998

திதி: துதியை (04.08.2016)

ஆழியிலே இரு வீரும் ஆராத்துயிலில் மூழ்கியிந்நாள்
ஆண்டுகள் பதினெட்டு அகன்றது நம்பமுடியவில்லை
ஏழ் ஜென்மம் எடுத்தாலும் இனிய முகம் காண்போமோ
மீண்டும் ஒரு தடவை வந்துதிக்க மாட்டீரோ
ஏங்குகின்றோம் யாது செய்வோம்

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

அன்பு நயகுரும்
ஆ.கி.அருணகிரிராசாவும்
குடும்பத்தினரும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**சிரோன்மணி சந்திரசேகரம்**

தோற்றம்
21.04.1927

மறைவு
05.07.2016

நோய் வந்து என் உடலை
உருக்கி எடுத்தாலும்
தீயினால் வெந்து உடல்
உருவழிந்து போனாலும்
தாயுன்னை மறப்போமோ
தந்தைதனை வெறுப்போமோ
எம்முயிரை நின்னுயிராய் நினைப்பவளும் நீதானே

நாமகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. (j 3484) (12,18)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
26
06
1956



மறைவு
05
07
2016

அமரர் **நாராயணலிங்கம் சந்திரமோகன்**

தந்தையாய் இருந்தாய், நண்பனாயும்
இருந்தாய் இறுதியில் தாயுமாகி
வழி நடத்திய அன்புக்குரிய அப்பா,

உங்கள் நினைவலைகள்
எங்களை வாட்டி வதைக்கின்றன
இன்று நீங்கள் எங்களோடு
இல்லாத நாட்களை சோகத்தோடு
கழிக்கின்றோம்

இன்று மட்டும் அல்ல என்றென்றும்
எங்கள் நினைவுகளுடன் கலந்தும், எங்களால்
நீங்கள் ஊற்றெடுத்தும், நாங்கள் உங்கள்
வாழ்வியலை தொடர்வோம்

26- 2/2, மயூரா கோட், பீற்றர்சன் வீதி
கொழும்பு-06.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மகன், மகள்


# தீவக வலயத்தில் அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக. 4

தீவக வலயக் கல்வித் திணைக்களத்துக்குட்பட்ட 13 பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கான வெற்றிடம் காணப்படுகின்றது. அவற்றுக்குத் தீவக வலயத்தில் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன எனத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தெரிவித்தார்.

தரம் II பிரிவைச் சேர்ந்த புங்குதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம், மண்டைதீவு மகா வித்தியாலயம், சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம், தரம் III பிரிவைச் சேர்ந்த நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம், நெடுந்தீவு மாவலித்துறை றோ.க. வித்தியாலயம், காரை.ஊரி.அ.மி.த.க. பாடசாலை, அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை, சரவணை சின்னமடு றோ.க.வித்தியாலயம் என்பவற்றுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

தரம் II பாடசாலைகளுக்கு வகுப்பு 2 அதிபர்களும், வகுப்பு 2 அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் பதில் அதிபர்களாக ஏற்கனவே சேவையிலுள்ள தற்போது அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நியமனத்தை ஏற்றுக்கொண்ட அதிபர் வகுப்பு 3 இணைச் சேர்ந்தவர்களும், தரம் III பாடசாலைகளுக்கு தற்போது அதிபர் சேவை 3 போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று நியமனத்தை ஏற்றுக்கொண்ட அதிபர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று முழுமை செய்து எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்தார். (ற-ரி)

# நல்லூர் மகோற்சவம் 8ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக 2

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 27 நாள்கள் திருவிழா நடைபெறும்.

17ஆம் திகதி புதன்கிழமை மஞ்சத் திருவிழா மாலை 5 மணிக்கு இடம்பெறும். 23ஆம் திகதி மாலை 6 மணிக்கு அருணகிரிநாதர் உற்சவம், 24ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு கார்த்திகைத் திருவிழா, 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு சூரியோற்சவம், 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு சந்தான கோபாலர் உற்சவம், அன்றைய தினம் மாலை 5 மணிக்கு கைலாசவாகன திருவிழாவும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கஜவல்லி, மஹாவல்லி, அன்றைய தினம் மாலை 5 மணிக்கு வேல் விமான திருவிழா, 29 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தண்டாயுதபாணி உற்சவம் அன்றைய தினம் மாலை 5 மணிக்கு ஒரு முகத்திருவிழா, 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறம், 31 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திரு விழாவும், செப்ரெம்பர் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

தொடர்ந்து செப்ரெம்பர் 2ஆம் திகதி மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும், 3ஆம்திகதி சனிக்கிழமை மாலை 5மணிக்கு வைரவர் உற்சவத்துடன் நல்லூர்க்கந்தனின் பெருந்திருவிழா இனிதே நிறைவுபெறும். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி பிடுங்கும் கடற்படையின் முயற்சிக்கு முள்ளிவாய்க்கால் மக்கள் கடும் எதிர்ப்பு

## வட்டுவாகல் பாலத்தை இடைமறித்துப் போராட்டம்





முல்லைத்தீவு, ஓக. 4
கடற்படைக்கு முகாம் அமைப்பதற்காக முள்ளிவாய்க்காலில் 617 ஏக்கர் காணியைக் கையகப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிக்கு பொது மக்கள் - அரசியல்வாதிகள் இணைந்து எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தினர்.

வட்டுவாகல் பாலத்தில் அமர்ந்து மக்கள் முன்னெடுத்த போராட்டத்தால் போக்குவரத்து தடைப்பட்டது.

இதனால் காணி அளக்க வந்த நில அளவைத் திணைக்களத்தினர் தமது நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது பின்வாங்கினர்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு வட்டுவாகல் கிராம அலுவலர் பிரிவில் தனியாருக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணியில் கடற்படை முகாமிட்டுள்ளது. அந்தக் காணியை சட்டரீதியாக தமக்கு உடைமையாக்கும் நடவடிக்கைகளை கடற்படை ஆரம்பித்துள்ளது. அதற்கான முன்னோடி நடவடிக்கையாக காணியை அளவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

காணியை அளவீடு செய்ய வருவோம் என்று நில அளவைத் திணைக்களத்தினர் காணிகளின் உரிமையாளர்களுக்கு அறிவித்திருந்தனர். நேற்று மு.ப. 9 மணியளவில் நில அளவைத் திணைக்களத்தினர் வந்தனர். காணி உரிமையாளர்கள் தமது காணிகளை எக்காரணம் கொண்டும் அளவீடு செய்ய விடமாட்டோம் என்று உறுதியாக நின்றனர். நில அளவைத் திணைக்களத்தினர் கடற்படை முகாமுக்குச் செல்லாதவாறு வழிமறித்துக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். காணிகளின் உரிமையாளர்களான 36 பேர் நில அளவைத் திணைக்களத்தினரிடம் மனு ஒன்றையும் கொடுத்தனர். அதில் காணிகளை அளவீடு செய்ய அனுமதிக்க மாட்டோம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் மக்கள் காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படாது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் உறுதிமொழி வழங்கவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வற்புறுத்தினர். இல்லாவிட்டால் இந்த இடத்தை விட்டு நகரமாட்டோம் என்று அவர்கள் உறுதியாகத் தெரிவித்தனர்.

போராட்டம் வலுவடைந்ததால் நில அளவைத் திணைக்களத்தினர் தமது திட்டத்தைக் கைவிட்டுத் திரும்பினர். இதனால் சுமார் அரைமணித்தியாலம் வட்டுவாகல் பாலத்தினூடான போக்குவரத்துகள் தடைப்பட்டன.

மாவட்டச் செயலாளரின் பணிப்பின்பேரில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகக் கணக்காளரும், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளரும், மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகத்தரும் சம்பவ இடத்துக்கு வந்தனர். போராட்டம் நடத்திய மக்கள் கொடுத்த மனுவைப் பெற்றுக் கொண்டனர். மக்களின் காணிப் பிரச்சினையை மாவட்டச் செயலாளர் ஊடாக அரசுக்குத் தெரியப்படுத்துவோம் என்று மாவட்டச் செயலகக் கணக்காளர் தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டு மீள்குடியமர்த்தப்பட்டு நாங்கள் இங்கு வரும்போது தோட்டக் காணி, வயல் காணிகளுக்குள் இராணுவத்தினர் முகாமிட்டு இருந்தனர். எங்களுடைய காணிகளுக்குள் போக முடியாதிருந்தது. இது வறுமைப்பட்ட எங்களுக்கு மேலும் பாதிப்பாக அமைந்தது. கமக்காரர்களுக்கும், மீனவர்களுக்கும் அவர்களுடைய வாழ்வாதாரத்துக்காக கையேந்த வேண்டிய நிலையில் இருக்கின்றனர். பாதுகாப்புத் தரப்பினர் இருப்பதால் நந்திக் கடலில் சுதந்திரமாக தொழில் செய்ய முடியவில்லை. இதற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஜனாதிபதியும் நல்ல தீர்வை வழங்க வேண்டும். நல்லெண்ண அரசு என்று பத்திரிகைகளிலும், வெளி நாட்டு தூதுவர்களுக்கும் கூறிக்கொண்டு இருக்காமல் நல்லெண்ணத்தை செயலில் காட்ட வேண்டும் - என்று காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

மாவட்டச் செயலகக் கணக்காளரிடம் உரையாடிய பின்னர் போராட்டத்தை முடித்து மக்கள் கலைந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், செல்வம் அடைக்கலநாதன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோகராதலிங்கம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணித் தலைவர்.செயலாளர் கஜேந்திரன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோரும் மக்கள் நடத்திய போராட்டத்தில் இணைந்து ஆதரவு வழங்கினர்.

(ற-5-21-ரி7)

# வலி. கிழக்குப் பிரதேசத்தில் திட்டமிட்டு கால்நடை திருட்டு

அச்சுவேலி, ஓக.4
வலி. கிழக்குப்பிரதேசசெயலகப் பிரிவில் ஆடு, மாடுகள் திட்டமிட்ட வகையில் திருடப்படுகின்றன. நல்லின ஆடு, மாடுகளுக்கு பற்றாக்குறை நிலவுவதோடு ஆடு, மாடு வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் பெரும் பொருளாதார இழப்புக்கு உள்ளாகின்றனர் என்று கவலை தெரிவிக்கப்பட்டது.

வலி. கிழக்கு விவசாயப் பிரதேசமாக இருப்பதால் விவசாயத்துக்கான பசளையின் நிமித்தமும், பாலுக்காகவும் கணிசமான அளவில் ஆடு, மாடுகள் வளர்க்கப்படுகின்றன. விவசாயிகள் தாம் வளர்க்கும் ஆடு, மாடுகளை மரபு வழியாக தோட்ட நிலங்கள் மற்றும் வெட்டைக் காணிகளில் மேய்வதற்குக் கட்டிவிடுகின்றனர். மாடுகளை மேய்ச்சல் தரவைகளில் மேயவிட்டு மாலையில் வீட்டுக்குக் கொண்டு செல்வது வழமை.

இவற்றை அவதானித்து வரும் திருடர்கள் படி ரக சிறிய வாகனத்தை வீதியோரத்தில் நிறுத்திவிட்டு மேயக் கட்டியிருக்கும் ஆடு, மாடுகளை திருடி வாகனத்தில் ஏற்றிச் செல்கின்றனர். நண்பகல் வேளையிலும், மாலை வேளையிலும் கால்நடை கள் திருடப்படுகின்றன.

மேய்ச்சல் தரவைகளில் மேயவிடப்படும் மாடுகளை நண்பகல் மற்றும் மாலை வேளைகளில் உரிமையாளர் போல நடித்து மறைவான இடங்களுக்கு அழைத்துச் சென்று திருடிச் செல்கின்றனர்.

நல்லின ஆடு, மாடுகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவும் இந்தவேளையில் ஆடு, மாடுகள் திட்டமிட்ட வகையில் களவாடப்படுவது கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்களை பெரும் பொருளாதார இழப்புக்கு உள்ளாக்குகின்றது. மன முறிவுக்கும் உள்ளாக்குகின்றது.

ஆடு, மாடு திருட்டுத் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்தபோதிலும் பொருத்தமான தடயங்கள் மற்றும் ஆதாரங்கள் இல்லாத நிலையில் அவற்றை கண்டுபிடிப்பதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை என விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

# பாதயாத்திரையில் பங்கேற்ற சு.க. உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை

***மைத்திரியிடம் மூத்த உறுப்பினர்கள் வலியுறுத்து***

கொழும்பு, ஓக. 4
மகிந்த அணியின் பாதயாத்திரையில் களமிறங்கிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் கேட்டனர் அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி இல்லத்தில் நடைபெற்றது.

இரவு 8 மணி முதல் மூன்று மணி நேரம் நடைபெற்ற சந்திப்பில், கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகியன பற்றியும் ஆராயப்பட்டுள்ளன என்று அறியமுடிகின்றது.

தேசிய அரசுக்கு எதிராக மகிந்தவின் சகாக்கள் முன்னெடுத்த பாதயாத்திரை சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்துக்கு முன்னால் வந்தபோது, 'ஊ' சத்தம் எழுப்பப்பட்டதுடன், தலைமைத்துவம் மீதும் கடும் விமர்சனம் முன்வைக்கப்பட்டது.

இந்த விடயம் பற்றியும் மேற்படி சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக கட்சிக்கு களங்கத்தை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதற்கு மூத்த உறுப்பினர்கள் கட்சித் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதிக்கு அங்கீகாரம் வழங்கினர்.

'கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எனினும், அது தனிநபரின் முடிவாக இருக்கக்கூடாது. எத்தகைய நடவடிக்கை என்பதை மத்திய செயற்குழுவை கூட்டித்தீர்மானமொன்றை எடுப்போம்' என்று ஜனாதிபதி இதன்போது குறிப்பிட் டார்.

இதன்படி, சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு விரைவில் கூடி இது பற்றி தீர்க்கமானதொரு முடிவை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (வ-5)

# வழிகாட்டல் கருத்தரங்கு

கரணவாய், ஓக. 4
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இந்து இறுதி நிலைப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 8.30 மணி முதல் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குருகுல மண்டபத்தில் இடம்பெறும்.

பரீட்சைக்கு விண்ணப்பித்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு திணைக்கள உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ற-5-108)

# *ரயில் வாயிலில் அமர்ந்ததால் விபத்து*

ரயில் வாயிலில் அமர்ந்திருந்து பயணித்தவரின் கால் பாலத்தில் மோதியதில் முழங்கால் எலும்பு சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை மாங்குளத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையே நடைபெற்றது.

காயமடைந்தவர் மிருசுவில் ரயில் நிலையத்தில் இறக்கப்பட்டு அங்கிருந்து வாகனம் மூலம் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அடையாளமான பனையை பேணிப் பாதுகாப்பது மிக அவசியம்

## பனை அபிவிருத்தி சபையின் புதிய தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 4

பனை தமிழர்களின் அடையாளமாகத் திகழ்கிறது. பனை வளம் தேசிய சொத்து. தமிழர்களது வளத்தை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும். எங்களுடைய வளத்தை பேணிப் பாதுகாப்பதன் மூலம்தான் எமது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தமுடியும்.

இவ்வாறு தெரிவித்தார் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் இராசலிங்கம் சிவசங்கர்.

பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராகப் பதவியேற்ற இராசலிங்கம் சிவசங்கருக்கு வரவேற்பு நிகழ்வு நேற்று பனை அபிவிருத்தி சபையில் நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போராலும் பல்வேறு இடராலும் பாதிக்கப்பட்டுள்ள எமது இனத்தின் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், ஆராய்வதற்கும் எமது அரசு முன்னின்று செயற்படுகின்றது. பனை அபிவிருத்திச் சபைக்கு இந்த வருடம் 160 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறைகளை வழி நடத்துவதற்கு புதிய திட்டங்கள், புதிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பனைவளத்தை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் முக்கிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஒரு தனிமனித சிந்தனை மூலமாக இந்த விடயங்களைச் செயற்படுத்த முடியாது. அதேநேரம் கூட்டுச் செயற்பாட்டின் மூலமே இந்த விடயங்களை திறம்படச் செயற்படுத்தமுடியும். பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராகப் பதவியேற்றுள்ளேன். உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பு எனக்கு அவசியம்- என்றார்.

விரிவாக்கல் திட்ட முகாமையாளர் கோபாலகிருஷ்ணன் தெரிவித்ததாவது:

போரால் கணவனை இழந்த பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், கணவனை இழந்த பெண்கள் என பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான உதவித் திட்டங்களை இந்த சபை மூலம் நிறைவேற்றவேண்டும். இந்தச் சபையால் மாதிரிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இன்னும் அதிகமாக உருவாக்கப்பட்டு, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவேண்டும். பனை வளத்தை நம்பி தொழில் செய்வோருக்கு தேவையான உபகரணங்கள், கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை மூலம் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. சந்தை வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே உள்ளன. சந்தை வாய்ப்பை மேம்படுத்த நாம் அயராது பாடுபட வேண்டும். சந்தை வாய்ப்பால்தான் அடி மட்ட மக்களின் வருமானம் உயரும். சந்தை வாய்ப்பை ஏற்படுத்த வேண்டியதே எமது சிந்தனையாக இருக்கவேண்டும்- என்றார்.



இந்த நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் ஒவ்வொரு பிரிவினரின் திட்ட முகாமையாளர்கள், பணியாளர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி)

# யாழ். மாநகர சபைப் பணியாளர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம்

## 14 கோரிக்கைகளை முன்வைத்து

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ். மாநகர சபையில் பணியாற்றும் பணியாளர்கள் 14 கோரிக்கைகளை முன்வைத்து மாநகர சபை வளாகத்தில் நேற்று புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பணியாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிர்வாகம் உதாசீனம் செய்தமையால் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது என்று பணியாளர்கள் தெரிவித்தனர்.



2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் வழங்கப்பட்ட பதவி நிலைகளை, பதவி நிலை மாற்றம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு வழங்குதல். பணியாளர்கள் தரமுயர்த்துதல் உரிய காலத்தில் வழங்கப்பட வில்லை 9 மணித்தியாலங்கள் கடமை புரியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதை விலக்கிக் கொள்ளல் போன்ற 14 கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் நடத்தப்பட்டது. (ற-5-106)

# வலி. கிழக்கு செயலக பிரிவில் நூல் ஆவணக் காப்பகம்

வலி. கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் நூல் வடிவில் வெளிவந்த ஆக்கங்கள் கொள்வனவு செய்யப்பட்டு, நூல்ஆவணக்காப்பகம் நிறுவப்படவுள்ளது. வலி. கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள நூல் ஆசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியர்கள் தாம் வெளியிட்ட நூல்களில் ஒரு பிரதியை பிரதேச செயலக கலாசார அலுவலர்களிடம் கையளித்து, அதற்கான கொடுப்பனவை (விலையை) பெற்றுக் கொள்ளலாம் என வலி. கிழக்குப் பிரதேச செயலர் அறிவித்தார்.

"வலி. கிழக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள எழுத்தாளர்கள் மற்றும் நூல் ஆசிரியர்கள், பதிப்பாசிரியர்களிடம் இருந்து அவர்கள் வெளியிட்ட நூல்களில் ஒவ்வொரு பிரதி, பிரதேச செயலகத்தால் கொள்வனவு செய்யப்படுகின்றன.

நூல் ஆவணக்காப்பகத்தில் பேணுவதற்கான நூல்களின் பிரதிகளில் ஒன்றை பிரதேச செயலக கலாசார அலுவலரிடம் கையளித்து, அதற்கான பெறுமதியை பெற்றுக்கொள்ள முடியும்" என்று பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தெரிவித்தார். (ற-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருட்டியவேளை தவணைப் பணம் வாங்கச் சென்றோர் நையப்புடைப்பு

*திருடர்கள் என்று நினைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் மக்கள்*

தென்மராட்சி, ஓக.4

இருள் சூழ்ந்த பின்னர் தவணைப் பணம் கேட்கச் சென்ற நிதி நிறுவனம் ஒன்றின் பிரதிநிதிகள் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டனர். திருடர்கள் என்ற சந்தேகத்திலேயே மக்கள் அவர்களைத் தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை நுணாவிலில் நடந்தது.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் நிதி நிறுவனம் ஒன்றில் நுணாவிலைச் சேர்ந்த ஒருவர் கடன் பெற்றார். அவரிடம் மாதாந்தத் தவணைக் கட்டணத்தை அறவிட அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் மு.ப. 10.30 மணியளவில் சென்றனர். அப்போது வீட்டில் யாரும் இல்லை. மாலை 6.45 மணியளவில் அவர்கள் மீண்டும் அங்கு சென்றனர்.

இருள் சூழ்ந்திருந்த நிலையில் இருவர் வருவதைக் கண்ட வீட்டிலிருந்தோர் திருடர்கள் எனக் கருதிக் கூச்சலிட்டுள்ளனர். அங்குகூடிய அயலவர்கள் இருவரையும் சரமாரியாகத் தாக்கி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பொலிஸ் நிலையத்தில் நிதி நிறுவனப் பிரதிநிதிகள் என்ற விடயமும், தவணைக் கட்டணம் பெற வந்த விடயமும் தெரிவிக்கப்பட்டது. வீட்டுக்காரரும் அதனை ஏற்றுக்கொண்டார்.

தாக்கப்பட்ட இருவரையும் சாவகச்சேரி வைத்தியசாலையில் பொலிஸார் சேர்த்தனர். (ற-9)

# யாழ். மாவட்டத்தில் தற்போது 24 குளங்கள் சீரமைப்பு

## கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்ட உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 4

திணைக்களத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 40 மில்லியன் ரூபாவில் யாழ். மாவட்டதில் 24 குளங்கள் தற்போது சீரமைக்கப்படுகின்றன.

> குளங்களைச் சீரமைப்பதால் மாரி காலத்தில் கிடைக்கும் மழைவீழ்ச்சி மூலம் நீரைத் தேக்கி கோடை காலத்தில் விவசாயத்தினை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும். அத்துடன் குளங்களைச் சீரமைப்பதால் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதுடன் உவர் நீர் நிலங்களுக்குள் ஊடறுப்பதைத் தவிர்க்க முடியும்

இவ்வாறு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட உதவி ஆணையாளர் இ. நிசாந்தன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மாவட்டத்தில் உள்ள 17 கமநல சேவை நிலையங்கள் ஊடாக 24 குளங்கள் சீரமைக்கப்படுகின்றன.

சாவகச்சேரி கமநலசேவை நிலையப் பிரிவில் மாணற்கடற்குளம், மாவில்குளம், ஊவாலிக்குளமும், கைதடி சேவை நிலையத்தில் வண்ணாத்திகுளம், வளக்கடவைகுளம், நல்லூர் கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ள பூதவராயர்குளம் சீரமைக்கப்படுகின்றன. வேலணையில் புதுக்குளம், குமுழந்தனைக் குளம், புங்குடுதீவில் வடக்குறவழிக்குளம், நாச்சிமார்குளம் போன்றன சீரமைக்கப்படுகின்றன

தொல்புரம் பகுதியில் நளவறாயன்கும் மற்றும் தனுக்கோட்டைகுளம், காரைநகர் கமநலசேவை நிலையம் ஊடாக பெரியகுளமும், சண்டிலிப்பாயில் குடாக்கரைகுளம், கீரிமலையில் அலக்கோலை குளம், உடுவிலில் குண்டுக்குளம், புத்தூரில் வாதரவத்தை பெரியகுளம், உரும்பிராயில் அம்மன் குளம் அதனுடன் சேர்ந்த வாய்க்கால், கரவெட்டியில் புதுக்குளம் மற்றும் பெரியகுளம் போன்றனவும் உள்ளடக்கப்பட்டுச் சீரமைக்கப்படுகின்றன.

புலோலி கமநலசேவை நிலையத்தின் ஊடாக நெற்கொழுக் குளமும், அம்பன் கமநலசேவை நிலையத்தின் ஊடாக வட்டத் தாழ்வுகுளம், கீரிவில் குளம் என்பனவும் சீரமைக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் பல குளங்கள் சீரமைக்கபட்டன. இன்னும் பல்வேறு குளங்கள் சீரமைக்கப்படவேண்டிய தேவை யாழ். மாவட்டத்தில் உள்ளது. அந்தக் குளங்களையும் சீரமைக்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குளங்களைச் சீரமைப்பதால் மாரிகாலத்தில் கிடைக்கும் மழை மூலம் நீரை தேக்கி கோடை காலத்தில் விவசாயத்தினை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும். அத்துடன் குளங்களைச் சீரமைப்பதால் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதுடன் உவர் நீர் நிலங்களுக்குள் ஊடறுப்பதையும் தவிர்க்க முடியும் - என்றார். (ற-5-107)

# குளவிக்கூடு கலைந்ததால் வைத்தியசாலையில் களேபரம்

யாழ்ப்பாணம், ஓக.4

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் குளவிக்கூடு கலைந்ததால் பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு வந்தவர்களையும், வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்தவர்களையும் குளவிகள் கொட்டியதில் அவர்கள் செய்வதறியாது சிதறி ஓடினர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது.

வைத்தியசாலை வளாகத்தில் இருந்த குளவிக்கூடு ஒன்றில் இருந்து கலைந்த குளவிகள் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு வந்தவர்களையும் வைத்தியசாலை வளாகத்தில் நின்றவர்களையும் கலைத்துக் கலைத்துக் கொட்டின. வெளிநோயாளர் பிரிவில் இருந்து வைத்தியசாலை விடுதிகளுக்கு அனுமதிக்கச் சென்ற வைத்தியசாலைப் பணியாளர் களையும் அவைதுரத்திக் கொட்டின. இதனால் வைத்தியசாலை வளாகம் அல்லோலகல்லோலப்பட்டது.

வைத்தியசாலை நிர்வாகமும் இது தொடர்பில் நடவடிக்கைகள் எதையும் உடன் எடுக்க முடியாத சூழல் காணப்பட்டது.

குளவிகள் போதனா வைத்தியசாலை முன்பாக வீதியில் பயணித்தவர்களையும் கலைத்துக் கலைத்து கொட்டின. குளவிகள் கொட்டிய சிலர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சையும் பெற்றனர். (ற-109)

# நெல்சிப் திட்டத்தின் ஊடாக இதுவரை ரூ. 370 மில். செலவு

*வடமாகாண பிரதம செயலாளர் தகவல்*

யாழ்ப்பாணம், ஓக.4

நெல்சிப் திட்டத்தில் நடப்பாண்டில் வடக்குக்கு அனுமதிக்கப்பட்ட ஆயிரத்து 113 மில்லியன் ரூபாவில் 370 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது.


இவ்வாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் செ.பத்திநாதன் தெரிவித்தார்.

நெல்சிப் திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு தொடர்பில் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நெல்சிப் திட்டத்தில் நடப்பாண்டில் வடக்குக்கு அனுமதிக்கப்பட்ட தொகையில் 370 மில்லியன் ரூபாவுக்கான பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டது. எஞ்சிய 740 மில்லியன் ரூபாவுக்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் முழுமையாக்கப்படும்.

நெல்சிப் திட்டத்தின் ஊடாகக் கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்து 327 மில்லியன் ரூபாவுக்கான செயற்றிட்டங்கள் இடம்பெற்றன - என்றார். (ற-101)



பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த இருவர் இந்து கலாசார முறைப்படி திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமண பந்தத்தில் இணைந்தனர். (ற)

# ஏகாந்தம் வேடமுக நாடக ஆற்றுகை

யாழ்ப்பாணம், ஓக. 4

கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு, செயல்திறன் அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் ஈழத்தின் புகழ்பூத்த இயக்குநர் தே.தேவானந்தின் எழுத்துரு, நெறியாள்கையில் உருவான ஏகாந்தம் வேடமுக நாடக ஆற்றுகை நடைபெறும்.

தே. தேவானந்த், பு. றஜனி, மு.குமரசிவம், ப.பார்த்தீபன், பா.விலோத்தன் ஆகியோர் நடிக்கின்றனர். இசையமைப்பை க. சத்தியசீலன், அ.ஜெகதீஸ் ஆகியோரும், ஒளியமைப்பை வ. ரஜிந்தனும் மேற்கொள்வர். அரங்க ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற-5)

# பயனாளிகள் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாது பிரதேச செயலகம் திணறல்

தென்மராட்சி ஓக.4

வீட்டுத் திட்டப் பயனாளிகளின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாது தென்மராட்சி பிரதேச செயலகம் திணறி வருகின்றது. வீடமைப்பு வேலைகளை முடிப்பதற்கு வழங்கப்பட்ட காலக்கெடுவுக்கு ஒரு மாதத்துக்கு முன்னதாகவே அனைத்து வேலைகளும் முடிவுறும் நிலையை எட்டியுள்ளபோதும் அவற்றுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

மீள்குடியேற்ற அமைச்சால் எழுதுமட்டுவாழ், கரம்பகம், தனங்களப்பு, கோயிற்குடியிருப்பு உட்படப் பலகிராம அலுவலர் பிரிவுகளில் 308 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு எதிர்வரும் செப்ரெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் வீட்டுத் திட்ட வேலைகளை முடிவுறுத்தவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

கற்கள், மணல் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டபோதும் பயனாளிகள் தமக்குரிய வீடுகளை அமைப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

வீட்டுத் திட்டப் பயனாளிகளில் 25 சதவீதமானோர் கட்டட வேலைகள், கூரை வேலைகள் பூர்த்தி செய்து உள்ளக சிமெந்து பூச்சு வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

மாவட்டச் செயலகத்தால் விசேடமாக நியமிக்கப்பட்ட இரு தொழில்நுட்ப அலுவலர்கள் தினமும் நாவற்குழி தொடக்கம் எழுதுமட்டுவாழ் வரை மேற்கொள்ளப்படும் வீடமைப்பு வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டு பயனாளிகளை ஊக்குவிப்பதுடன் முடிந்த வேலைகளுக்கான அறிக்கைகளையும் வழங்குகின்றனர்.

கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்த 100 பேரின் மூன்றாம் கட்டக் கொடுப்பனவுக்கு மாவட்டச்செயலகத்துக்குப் பரிந்துரைக்கப்பட்டபோதும் அங்கிருந்து கட்டுநிதி கிடைக்காததால் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. [illegible] கொடுப்பனவுகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கடன்கள் பெற்று நான்காம் கட்டக் கொடுப்பனவுக்குரிய வேலைகளை பூர்த்தி செய்து ஐந்தாம் கட்டக் கொடுப்பனவுக்கான வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

தம்மால் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு பிரதேச செயலகம் உடனுக்குடன் கொடுப்பனவுகளை வழங்கும் பட்சத்தில் செப்ரெம்பர் மாதத்தில் புதிய வீட்டில் குடியமர முடியும் என்று பயனாளிகள் நம்பிக்கை தெரிவித்தனர்

கொடுப்பனவுகள் வழங்குவதில் ஏற்படும் தாமதம் குறித்து தென்மராட்சி பிரதேச செயலர் தெரிவித்ததாவது:

கடந்த வருடங்களைவிட இந்த வருடம் பயனாளிகள் வேகமாகச் செயற்பட்டு வருவது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. தொழில்நுட்ப அலுவலர்களின் அறிக்கைப் பிரகாரம் 100 பேரின் மூன்றாம் கட்டக் கொடுப்பனவுக்கான பரிந்துரையை மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பியுள்ளோம். நிதி கிடைத்ததும் அது பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் உடன் வைப்பிலிடப்படும்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளால் மேற்கொள்ளப்பட்ட வேலை முன்னேற்ற அறிக்கைகள் நாளாந்தம் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பப்படுகின்றன- என்றார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சியைப் பிடிப்பதற்கு இராணுவப் புரட்சியே ஒரே வழி

## மக்கள் அதற்கும் இடமளிக்கமாட்டார்கள் என்று அமைச்சர் டிலான் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 4
ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்கு இராணுவப் புரட்சியே மகிந்தவுக்கு இருக்கும் ஒரே வழி. ஆனால் அதற்கு மக்கள் இடமளிக்க மாட்டார்கள்.
இவ்வாறு இராஜாங்க அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.
கொழும்பில் உள்ள சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய ஒருவர் இரண்டு முறைக்கு மேற்பட்ட தடவைகள் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கமுடியாது. மகிந்தவோ, சந்திரிகாவோ மீண்டும் ஜனாதிபதியாக முடியாது. மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றப் போகின்றேன் என்று மகிந்த கூறியுள்ளார். அப்படியானால் இராணுவப் புரட்சிதான் மகிந்தவுக்கு இருக்கும் ஒரே வழி.
துருக்கியில் இராணுவப் புரட்சி ஏற்பட்டபோது என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். எமது மக்கள் இராணுவப் புரட்சிக்கு இடமளிக்க மாட்டார்கள். இராணுவத் தளபதி ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதையே மக்கள் விரும்பவில்லை.
முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது 18 இலட்சம் வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டார். அவர், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலூடாகத்தான் வந்துள்ளார். இராணுவப் புரட்சி ஒன்றுக்கு மக்கள் இடமளிக்க மாட்டார்கள். அப்படியிருக்கஎப்படி ஆட்சியைக் கைப்பற்றுவார் என்பதை மகிந்ததான் கூற வேண்டும்.
நடைபவனியின் போது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் பிரேக் டான்ஸை பார்க்க முடிந்தது. நன்றாக இருந்தது. அரசியலில் முடியாவிட்டாலும் பிரேக் டான்ஸ் போட்டியில் பங்கேற்றால் நாமலுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது – என்றார். (ற-5)

# போட் சிற்றி நிறுத்தப்பட்டமைக்கு இந்தியாவின் அழுத்தமே காரணம்

## இலங்கை அரசு ஒப்புக்கொண்டது

கொழும்பு, ஓக. 4
மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் சீனாவின் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத் திட்டம், இந்தியாவின் அழுத்தங்களால் இடைநிறுத்தப்பட்டது என்று அரசு முதல்முறையாக ஒப்புக் கொண்டுள்ளது.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன இந்தியாவின் அழுத்தங்களால் தான் துறைமுக் நகரத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது என்று குறிப்பிட்டார்.
மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் – 2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட துறைமுக நகரத் திட்டம் 2015ஆம் ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகைக்கு ஒரு வாரம் முன்னதாக மைத்திரிபால சிறிசேன அரசால் இடைநிறுத்தப்பட்டது.
வெளிநாட்டு அழுத்தங்களால் இந்தத் திட்டம் இடைநிறுத்தப்படவில்லை என்றும் உடன்பாட்டில் உள்ள குறைபாடுகள் மற்றும் சுற்றாடல் காரணிகளைக் கருத்திற் கொண்டே இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது என்றும் அப்போது அரசு கூறி வந்தது.
பாதுகாப்புச் செயலராகப் பதவியில் இருந்தபோது புதுடில்லிக்கு அழைக்கப்பட்ட தன்னிடம் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், சீனாவின் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை கைவிடுமாறு அழுத்தம் கொடுத்திருந்தார் என்று கோத்தபாய ராஜபக்சவும் கூறியி




# செஞ்சோலைப் படுகொலையின் நினைவேந்தல் ஜேர்மனியில்

யாழ்ப்பாணம், ஓக.4
செஞ்சோலைப் படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு ஜேர்மனியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.
2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி இலங்கை விமானப்படையின் தாக்குதலில், செஞ்சோலையில் தங்கியிருந்த 61 சிறுவர் – சிறுமியர் சாவடைந்தனர்.
இந்தச் சம்பவத்தின் பத்தாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பெரும் உணர்வெழுச்சியுடன் ஜேர்மனியில் முன்னெடுக்கப்படவுள்ளது. பன்னாட்டுச்சமூகத்துக்கு இலங்கை அரசின் கோர முகத்தை எடுத்துக்காட்டும் நோக்குடன் நினைவேந்தல் நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்று ஜேர்மன் தமிழ் இளையோர் அமைப்புத் தெரிவித்தது.
ஜேர்மனியில் நான்கு இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ற-5)

# இழுவைமடிப் படகு விவகாரம் ஜெயின் கருத்துக்கு வரவேற்பு

கொழும்பு, ஓக. 4
இந்தியாவிலிருந்து இலங்கை கடற்பரப்புக்குள் இழுவைமடிப் படகுகளை அனுப்புவதில்லை என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் இந்திய நடுவண் அரசுக்கு தெரிவித்துள்ளதை வரவேற்கின்றோம் என்று கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
கடற்றொழில் அமைச்சால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
சர்ச்சைச்குரிய இழுவைமடிப் படகு முறையை தடை செய்ய வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம், இந்திய நடுவண் அரசுக்கு கடிதம் எழுதியிருந்தார். இந்தக் கடிதத்துக்கு பாராட்டுத் தெரிவித்து, மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.
2015ஆம் ஆண்டு முதல் இன்று வரை 129 இழுவைமடிப் படகுகள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறியமையால் கடற்படையினரால் அவை கைப்பற்றப்பட்டன. சிலர் கைது செய்யப்பட்டனர்.
இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்படும்நிலையும்உருவாகியது. இந்தத் தருணத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் இவ்வாறான 'கருத்தை வெளியிட்டுள்ளமை கடற்பரப்பில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கக்கூடிய நிலையை உருவாக்கலாம் என்று நான் நம்புகின்றேன். இதன் மூலம் இரு நாட்டு உறவுகளில் வலு ஏற்படும் என்று ஜெயலலிதாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மகிந்த அமரவீர தெரிவித்தார்– என்று ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. (ற-5)

# இணைய குற்றங்களைத் தடுக்க புதிய பொலிஸ் பிரிவு விரைவில்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 4
இணையம் ஊடாக மேற்கொள்ளப்படும் குற்றங்களைத் தடுப்பதற்காகச் சிறப்பு பொலிஸ் பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளது என்று சட்டம் ஒழுங்கு மற்றும் தென் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.
பொலிஸ் திணைக்களத்தின் 150 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது:
இலங்கை பொலிஸ் திணைக்களம், இலங்கைப் பொலிஸ் என மாற்றம் செய்யப்பட வேண்டும். அரசியல்வாதிகள், செல்வந்தர்கள் ஆகியோருக்கு மாத்திரம் மரியாதை செலுத்தும் தரப்பாகவே பொலிஸாரை பார்க்கும் நிலை இருந்து வருகின்றது. இந்தநிலை மாற்றமடைய வேண்டும்.
மக்களின் நண்பனாகவே பொலிஸார் இருக்கவேண்டும். அந்த நிலையைப் பொலிஸார் உருவாக்க வேண்டும் – என்றார்.
1866ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பொலிஸ் திணைக்களத்தின் 150 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட விசேட இலட்சினையும் அறிமுகப்படுத்தப்பட்டது. (ற-5)

# திருவள்ளுவர் சிலை விவகாரத்தை கொச்சைப்படுத்துவது தவறானது

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 4
திருவள்ளுவருடைய சிலையை கொச்சைப்படுத்துகின்ற பத்திரிகைகளின் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள முடியாது.
இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.
கீரிமலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
எல்லோரும் ஏற்றுக் கொண்ட திருக்குறளை மொழிபெயர்த்த திருவள்ளுவரை கொச்சைப் படுத்துகின்ற செயல், தமிழர் களுக்குச் செய்கின்ற துரோகம். அண்மையில் 14 திருவள்ளுவர் சிலைகள் இந்தியாவிலிருந்து வழங்கப்பட்டன. அவை இலங்கையிலுள்ள எல்லா மாவட்டங்களுக்கும் பகிரப்பட்டன. பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.
சிங்களப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை திருவள்ளுவரின் சிலைகள் வழங்கப்பட்டமை குறித்து மிகவும் துவேசமாக எழுதப்பட்டிருந்தது.
இந்த நாட்டில் நல்லதைச் செய்தாலும் அதனைத்துவேசத்துடன் பார்ப்பதற்கே ஒரு கூட்டம் உள்ளது. இதனைக் களைந்து எடுக்கவேண்டும்.
மக்களுக்கு என்ன தேவை என்று யோசித்து செயற்பட வேண்டுமே தவிர, அதனை இழுத்தடிக்கலாம் என்ற யோசனைக்குக் கொண்டு செல்வது எந்தக் காரணத்திலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் அல்ல – என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு விடுக்கப்பட்டுள்ள முதல் எச்சரிக்கை நடைபவனி

## மகிந்தானந்த அளுத்கமகே எம்.பி. கருத்து

கொழும்பு, ஓக. 4
கண்டியிலிருந்து கொழும்பு வரை முன்னெடுக்கப்பட்ட நடைபவனி அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கான முதலாவது எச்சரிக்கை. நாட்டில் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருப்பது இதனூடாக உறுதியாகியுள்ளது.




இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நடைபவனியில் கவனிக் கத்தக்க விடயம் இடம்பெற்றது. நல்லாட்சிக்கு ஆதரவு வழங்கிய, வாக்களித்த பலர் பேரணியில் இணைந்து கொண்டனர். இந்த நடைபவனி ஏன் என்பதற்கான காரணத்தை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

அரசு நடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கின்றது என்று காட்டிக்கொள்ள முயன்று வருகின்றது. வரப் பிரசாதங்களையும், வாகனங்களையும், வேலை வாய்ப்புகளையும் மாத்திரமல்ல பெரிய தொகை பணத்தையும் வழங்கி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் காண்பித்துக்கொண்டு, அனைத்துக் கீழ்த் தரமான வேலைகளையும் செய்கின்றது.

தியவன்னா ஓயாவுக்கு வெளியே மூன்றில் இரண்டு பெரும்பான்மை மக்கள் அரசுக்கு எதிராக இந்த நடைபவனியில் இணைந்து கொண்டார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். நாட்டுக்கு எதிரான இந்த அரசமைப்பு உருவாக்கத்தை உடனடியாக நிறுத்தவேண்டும். இந்தியாவுடனான எட்கா உடன்படிக்கையை உடனடியாக மீளப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

வற் வரி விதிப்பை நீக்கவேண்டும். போர்க் குற்ற நீதிமன்றத்தினூடாக இராணுவத்தினரைத் தண்டிக்கும் திட்டத்தை உடனடியாக நிறுத்தவேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தி பொதுமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்குமாறு அரசுக்கு அறிவிக்கிறோம். நடைபவனி ஊடாக மக்கள் வழங்கிய தகவலை அரசு மறக்கக்கூடாது. முதலாவதாக நடைபவனி ஊடாக நாங்கள் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளோம். இரண்டாவது முறையாக நாம் கொழும்புக்கு வந்து எச்சரிக்கப்போவது இல்லை. அரசை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையை முன்னெடுப்போம் - என்றார். (ற-5)

## அனுரவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக. 4
பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை வழக்குத் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க மற்றும் நாரகேன்பிட்டி குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோரின் விளக்கமறியலில் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது. வழக்குத் தொடர்பான விசாரணை நேற்று இடம்பெற்றபோது கொழும்பு மேலதிக நீதிவான் நிசாந்த பீரிஸ் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ற-5)

## தங்கத்துடன் 3 இலங்கையர் கைது

கொழும்பு, ஓக. 4
ஒன்றரைக் கிலோ தங்கத்துடன் 3 இலங்கையர்கள் இந்தியாவின் திருவனந்தபுரம் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இந்திய மதிப்பில் அதன் பெறுமதி 46 லட்சம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து யு.எல்.161 என்ற விமானம் மூலம் நேற்று முன்தினம் காலை 8.45 மணியளவில் இவர்கள் இந்தியா சென்றனர். யோகேஸ்வரி செல்லத்தம்பி, சுசிகலா யோகேஸ்வரன், ராமக்கல் ராமசாமி ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களிடம் இருந்து 8 தங்க வளையல்கள், 4 தங்கச் சங்கிலிகள், பத்துப் பென்டன்கள் உள்ளிட்ட பல தங்க ஆபரணங்கள் மீட்கப்பட்டன என்று இந்திய விமான நிலைய தகவல்கள் தெரிவித்தன. (ற-5)

## சிறிகொத்த தாக்குதல் அறுவர் கைது

கொழும்பு, ஓக. 4
2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்த மீது கல்வீச்சு நடத்திய சம்பவம் தொடர்பில் 6 பேர் கொழும்புக் குற்றத்தடுப்பு பிரிவால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அரச பொறியியலாளர்கள் சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் உதவிப் பணிப்பாளர் ஒருவரும் அடங்குகின்றார் என்றும் பொலிஸார் கூறினர். (ற-5)

## இலங்கைக் குழு தென்னாபிரிக்கா பயணம்

### அரசமைப்பு குறித்து ஆராய்வு

கொழும்பு, ஓக. 4
தென்னாபிரிக்கா அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பில் ஆராய இலங்கையின் நாடாளுமன்றக் குழுவொன்று தென்னாபிரிக்காவுக்குச் செல்லவுள்ளது.

நாடாளுமன்ற உப குழுவின் உறுப்பினர்களான ஏ.அரவிந்தகுமார், சி.சிறிதரன் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, வைத்திய கலாநிதி துசித்த விஜயமான்ன, அதுரலியே ரத்தினத்தேரர் மற்றும் சல்மான் ஆகியோரே பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவுள்ள நிலையில், அடிப்படை உரிமைகளைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தும் நோக்கத்திலேயே பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவின் சட்ட மா அதிபர், நீதியரசர்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முன்னாள் போராளிகளின் மீதான விஷ ஊசி விவகாரம் புதைக்கப்படலாகாது

முன்னாள் (தமிழ்ப்) போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டதாகவும் அவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் உயிரிழந்தனர் என்றும் முன்னாள் போராளி ஒருவர் மக்கள் கருத்தறியும் செயலணியிடம் தெரிவித்த தகவல் மிகவும் பாரதூரமான ஒன்றாகும்.

அது தொடர்பில் உரிய முறையில் முறைப்பாடு எதுவும் செய்யப்படின் (உள்நாட்டில்) இங்கு அரச விசாரணை செய்யப்படும் என்று "பவ்வியமாகத்" தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் அவையின் இணைப் பேச்சாளர்களில் ஒருவரான சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனை நேற்றுமுன்தினம் வெளிப்படுத்தி இருக்கிறார்.

முன்னாள் போராளிகளின் உயிரிழப்புக்கள் தொடர்பில், முழுமையான விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் கருத்தறியும் செயலமர்வில் பூநகரி வாழ் மக்கள் அழுத்திக் கேட்டிருந்தமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

அரச தரப்பிடம் அதன் ஒவ்வாத, ஒற்றை றோட்டுப் பாங்கான செயற்பாடுகள் குறித்து வினா எழுப்பினால், மழுப்பிச் சுளிக்கும் போக்கு, தமிழ் மக்கள் கரைத்துக் குடித்த ஒன்றாகும்.

அதற்கு மாறான போக்கில், அரசின் பேச்சாளர்களில் ஒருவரான சுகாதார அமைச்சரின் தகவல், வற்றிய கிணற்றில் மேலெழும் நன்னீருடன் ஒப்பிடத்தக்கது.

எலிக்கு விளையாட்டு, சுண்டெலிக்குச் சீவ மோசம் (மரணபயம்) என்ற உவமானமும் இங்கு பொருத்தமானது.

உள்ளார்ந்து ஊடுருவிப்பார்த்தால், முன்னாள் போராளிகளின் உறவுகளின், அச்சத்தை வேரோடு பிடுங்கி எறிய வேண்டிய முழுப்பொறுப்பும் நல்லாட்சி என்று முழங்கும் தரப்புக்கே முழுக்க முழுக்க உண்டு.

அரசால் உருவாக்கப்பட்ட, நியமிக்கப்பட்ட செயலணி என்ற வகையில் மக்கள் தெரிவிக்கும் முறைப்பாடு குறித்து --

ஆழ்ந்து அகன்ற மட்டத்தில் ஒளிவு மறைவின்றிச் செயற்பட வேண்டும். தவறை அரசு செய்தாலும் கூட அது மிகத் தடிப்பான குற்றமே.

தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்ட பேரினவாதம் ஒழித்து ஒதுக்கப்பட வேண்டுமெனில், ஆட்சிக்கட்டிலில் அமரும் அரசு தார்மீகப் பொறுப்புடன் செயலாற்றும் ஓர்மம் அத்தியாவசியம்.

தமிழ்மக்களின் வாக்குகளைப் புன்சிரிப்புடன் பெற்று ஆட்சிக்கட்டிலில் ஏறியமைக்காக வேனும், அதனைக் கைக் கொள்ளக் கூடாதா?

தர்மிஷ்டத்தை வாயொழுகப் பேசிய அரசே! உன் ஆழ்மனத்தைத் தொட்டுப் பார்...!!



எம்.ஐ.முபாறக்

ஆட்சி அதிகாரத்தை இழந்த மகிந்த ராஜபக்ச, அதை மீளக் கைப்பற்றுவதற்கு இப்போது மிகவும் போராடுகின்றார். அரசுக்கு எதிரான பல போராட்டங்களை நடத்தி-சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இனவாதத்தைக் கிளப்பி, அரசைக் கவிழ்ப்பதற்கு சதி செய்கிறார். அதற்காக அவர் இப்போது நடையாய் நடக்கின்றார். மாவனெல்லையில் இருந்து கடந்த மாதம் 28ஆம் திகதி நடக்கத் தொடங்கியவர் கொழும்பில் அதை நிறைவு செய்தார்.

மிகவும் பலம் வாய்ந்த ஓர் ஆட்சியைக் கட்டி எழுப்பியிருந்த மகிந்த அதை இழந்து தவிப்பது ஏன்? அந்த ஆட்சி சரிவதற்குக் காரணம் என்ன? போன்ற பல கேள்விகளுக்கு ஒரே பதில் அக்கிரம ஆட்சியின் பெறுபேறு என்பது தான்.

நியாயமான விதத்தில் ஆட்சி நடத்தி இருந்தால், மகிந்த இப்படி கால் வலிக்க நடக்கத் தேவை இல்லை என்ற ஜனாதிபதி மைத்திரிபாலவின் கருத்து, இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் பொருத்தமானதொன்றே. இந்தக் கருத்து முற்றிலும் உண்மை.

மகிந்தவின் அரசு ஒரு கட்டத்தில் அசைக்கமுடியாத மிகவும் பலமான அரசாகத் திகழ்ந்தது.பல தசாப்தங்களுக்கு இவரது பரம்பரையே நாட்டை ஆளப் போகின்றது என்று நம்பப்பட்டது. ஆனால்,அநியாயத்தால் கட்டி எழுப்பப்படும் அரசு எவ்வளவு பலமானதாக இருந்தாலும், அது தற்காலிக பலமே என்பதற்கு மகிந்த அரசு சிறந்த உதாரணமாக அமைந்துவிட்டது.

போர் வெற்றி என்ற ஒரேயொரு காரணத்தால்தான் அவரது அரசு பலமடைந்து இருந்தது.ஆனால், அந்த போர் வெற்றிக்குள் புதைந்திருந்த மக்களின் கண்ணீர், அடக்குமுறை மற்றும் இனவாதம் போன்றவை அந்தப் போர் வெற்றியை சிதைத்துவிட்டன. அந்தச் சிதைவே மகிந்த அரசின் சிதைவாக மாறியது.

மகிந்த ஆட்சி எவ்வளவு கொடூரமானது-எவ்வளவு இனவாத மிக்கது-சிறுபான்மை இன மக்களுக்கு எவ்வளவு பாதகமானது என்பதை நாம் அறிவோம். மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இந்த நாட்டு மக்களின் ஒரு பகுதியினர் கண்ணீருடனும் கவலையுடனும்தான் காலத்தைத் தள்ளினர்.



இந்த நாட்டில் சிறுபான்மை இனம்,பெரும்பான்மை இனம் என்று எவருமில்லை. எல்லோருமே இலங்கையர்கள் என்று கூறிக்கொண்டே சிறுபான்மை இன மக்களை மிகவும் மோசமாக நடத்தத் தொடங்கினார் மகிந்த. ஆனால், அந்த மக்களின் கண்ணீரில் தான் மகிந்தவின் ஆட்சி மூழ்கியது.

போர் வெற்றியின் பெயரில் – அதன் மமதையில் சிறுபான்மை இன மக்களுக்கு மகிந்த செய்த அநியாயங்கள் அனைத்தும் ஒன்று திரண்டே மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்தன.மக்களின் கண்ணீரால் கட்டி எழுப்பப்படும் ஆட்சி நிலைக்காது என்பது இதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆட்சி கவிழ்க்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பட்ட மகிந்த பதவி மோகம் காரணமாக குறுகிய காலத்துக்குள்ளேயே அரசியலுக்குத் திரும்பி வந்துவிட்டார்.இன்று அவர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக படாதபாடு படுகின்றார், நடையாய் நடக்கின்றார்.

### பாத யாத்திரை வெற்றி கண்டதா?

ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் கடந்த மாதம் 28 ஆம் திகதி மாவனெல்லையில் வைத்து மகிந்தவால் தொடங்கப்பட்ட பாத யாத்திரை நேற்று கொழும்பில் முடிவடைந்தது. கொழுப்பு கரைந்து சீனி நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்ததைத் தவிர, வேறு எந்தப் பயனையும் இந்தப் பாத யாத்திரை மகிந்த தரப்புக்குப் பெற்றுக்கொடுக்க வில்லை.

10 லட்சம் பேரை இந்தப் போராட்டத்தில் இறக்குவோம் என்று கூறினர்.ஆனால்,வெறும் 10 ஆயிரம் பேரைக்கூட அவர் களால் இறக்க முடியவில்லை. 5 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே அதில் கலந்துகொண்டனர்.

பாத யாத்திரையில் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர் என்று காட்டுவதற்காக நீண்ட இடைவெளி விட்டு நீண்ட வரிசையில் நடந்துசென்ற அந்தக் கேவலமான தந்திரோபாயத்தையும் நாம் கண்டோம். தேவையா? இந்தப் பிழைப்பு என்று பார்வையாளர்கள் கேட்கும் அளவுக்கு அந்தக் காட்சி அமைந்திருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லது செய்திருந்தால் ஏன் இந்த நடை?

**நாமலின் வினோத நடனம்**

நாமலின் நடனத்தைக் காண்பதற்காக வீதியோரங்களில் ஒன்றுகூடிய மக்களையெல்லாம் பாத யாத்திரையில் கலந்துகொண்டவர்கள் பட்டியலில் சேர்த்து கணக்கு காட்டும் அளவுக்கு மகிந்தவின் அரசியல், வங்குரோத்து நிலைமையை அடைந்துவிட்டமை பரிதாபத்திலும்-பரிதாபம்.

உண்மையில், இது ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கிலான பாத யாத்திரையா அல்லது நாமலின் வினோத நடனத்தை பிரபல்யப்படுத்தும் வைபவமா என்று கேட்கும் அளவுக்குத்தான் அந்த நிகழ்வு அமைந்திருந்தது. நாமல் ஆடி வருகின்றார் என்று கேள்விப்பட்டே மக்கள் வீதிகளின் இரு மருங்கிலும் ஒன்று கூடினர். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வீதியில் நடனமாடி வந்தால், அது மக்களுக்கு கண்கொள்ளாக் காட்சிதானே? அந்தக் கண்றாவியைக் காண்பதற்கு மக்கள் குவியத்தானே செய்வார்கள். அவ்வாறு குவிந்தவர்கள் அனைவரையும் பாத யாத்திரையில் கலந்துகொண்டவர்கள் என்று கூறுவது கேவலத்திலும் கேவலம்.



மொத்தத்தில் இந்தப் பாத யாத்திரை கொழுப்பைக் குறைப்பதிலும் சீனி நோயைக் கட்டுப்படுத்துவதிலும் வெற்றி கண்டுள்ளதே தவிர, அரசியல் ரீதியாக எந்தவொரு நன்மையையும் மகிந்தவுக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை. இந்தப் போராட்டம் நாட்டில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஓரிரு நாள்களாக ஊடகங்களுக்கு செய்தியாகிப் போன தோடுசரி, அவ்வளவுதான்.

> “பாத யாத்திரையில் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர் என்று காட்டுவதற்காக நீண்ட இடைவெளி விட்டு நீண்ட வரிசையில் நடந்து சென்ற அந்தக் கேவலமான தந்திரோபாயத்தையும் நாம் கண்டோம். தேவையா இந்தப் பிழைப்பு என்று பார்வையாளர்கள் கேட்கும் அளவுக்கு அந்தக் காட்சி அமைந்திருந்தது.”



**இனவாதத்தைக் கக்கிய பாத யாத்திரை**

இந்தப் பாத யாத்திரையில் அதிகம் எழுப்பப்பட்டது சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான இனவாதக் கோசம்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த அரசு தமிழீழத்தை உருவாக்கப் போகின்றது என்றும்-புலிகள் மீண்டும் வரப் போகிறார்கள் என்றும்-பௌத்த மதம் அழியப் போகின்றது என்றும், ஐ.எஸ். பயங்கரவாதிகள் நாட்டுக்குள் நுழையப் போகின்றார்கள் என்றும்-பலதரப்பட்ட இனவாதக் கோசங்கள் அந்த யாத்திரையின்போது எழுப்பட்டதைக் கேட்கக்கூடியதாக இருந்தது.

மகிந்த தரப்பின் இனவாத சிந்தனைக்கு தீனி போடும் ஒரு நிகழ்வாகவும் இந்த யாத்திரை அமைந்திருந்தது என்றும்- சொல்லலாம். இனவாதம் அவர்களின் துருப்புச் சீட்டு என்பதை அவர்கள் மீண்டும் நிரூபித்தே வருகின்றனர். தோல்வி கண்ட இந்த இனவாதம் இனி ஒருபோதும் வெற்றிபெறா என்பதுதான் யதார்த்தம். ஆக, இந்தப் பாத யாத்திரை பிசுபிசித்தே போனது.

## ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

இன்று குடாநாடு முழுவதும் ஆலயங்களில் நடந்தேறிக் கொண்டு இருக்கும், திருவிழாக்கள் மனதுக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் தருகின்றன. ஆலய மணியின் ஓசையும், நாதஸ்வர இசையின் இனிமையும் கோயில் அர்ச்சகரது சாஸ்திர விதிப்படி நடந்தேறும் நித்திய பூஜைகள், வேத அனுஷ்டானங்கள் நிறைவான சாந்தியைத் தருவது மானிடப்பிறவியின் பூர்வ ஜென்ம புண்ணியம். இறைவன் திருவடிகளை நாடிச் செல்லும் பக்தர்களும், நேர்த்திக் கடன்களைச் செலுத்துவோரும், எனத் திருவிழாச்சூழல் கண்கொள்ளாக் காட்சிகள். கருணை உள்ளமும் உயர்ந்த நோக்கமும் கொண்ட பலர் தானதர்மம் செய்வது பாராட்டுக்குரியது. ஆனால், சில ஆலயங்களில் வசதி படைத்தோர், உறவுகள், நண்பர்கள், அன்னதான நிகழ்வுகளில் பங்குகேற்பதும், கொடுக்கும் உணவை தவிர்ப்பது பாவம் என்ற கொள்கையுடன் தட்டை நிரப்பி அதில் ஒருசிறு பகுதியை மட்டும் உண்ட பின்னர் குப்பைத் தொட்டியை நிரப்புவதும் பாவம் என்பதை சிந்திக்காமல் செயற்படுவது வேதனை. “பாத்திரமறிந்து பிச்சை போடு” என்பார்கள். அநாதைகள், சிறுவர், முதியோர் இல்லங்கள் நலிவுற்றோர் இவர்களுக்கு தானம் செய்வதை இறைவன் விரும்புவது நிதர்சன உண்மையே. அன்னை தெரேசா அம்மையார் கலந்துகொள்ளும் விருந்துகளில் அங்கே மீதமாகும் உணவை சேகரித்து வறுமையில் வாடும் ஏழைச் சிறார்களுக்கு பகிர்ந்தளித்தமை பற்றிக் கேள்விப்பட்டுள்ளோம். பசியின் கொடுமையை அறிந்திருந்த இவர்கள் கருணை வடிவங்கள்.

ஆலய தரிசனம் செய்பவர்களோடு வரும் சிறியவர்கள் ஓடி ஆடி விளையாடும் சத்தம் இடும் தங்கள் பிள்ளைகளின் நடத்தை பற்றி அசட்டையாக இருப்பது ஏற்புடைத்ததல்ல. சூழலுக்கு ஏற்ப பண்போடு நடந்து கொள்வது பற்றி குழந்தைப் பருவத்தில் இருந்தே வழிப்படுத்துவது பெற்றோரின் கடமை. தற்போது இளய சமூகத்தினரின் மத்தியில் பணிவும் நல்ல சிந்தனைகளும் காணாமற் போய்விட்ட நிலையில், ஆலயத்தின் புனிதம், விதிமுறைகள், சிறார்க்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதால் கலாசார சீரழிவுகளை ஓரளவு தடுக்கலாம். ஐந்து வயதில் கற்கும் நல்வழிகள் ஐம்பதிலும் துணைவர வாழ்த்துக்கள்.

**செல்வா.சாவகச்சேரி.**

## நீங்களும் சுத்தமாகலாம் காற்றைப்போல்

காற்று என்பது சுத்தமானது. அதை மாசுபடுத்துவது மனிதர்களே. பணம் உள்ளவன் ஏழையைப் பார்த்து ஏளனம் செய்வது பெரும்பாலும் அடிக்கடி நடக்கும் நிகழ்வு. ஏழை ஒருவன் தன்னுடைய துவிச்சக்கர வண்டியில் செல்லும்போது, காற்றைச் சுத்தமாக்கித் தனது மனசைப் பாரமாக்கி அன்றாடம் கூலி வேலைசெய்து, ஒருவேளை சோற்றுக்காக அலைந்து, தனது குடும்பத்தைச் சுகமான சுமைகளாய்த் தாங்கிச் செல்லும்போது அவனின் அருகில் தான் கடவுள் குடிகொள்வான்.

நெற்றி வியர்வை சிந்திப் பணம் என்பதன் பெறுமதியை உணர்வது வாழ்க்கை. ஏழையின் சிரிப்பில் தெய்வத்தைக் காணலாம்.

ஏழைச் சிறுவன் கடைக்குச் செல்கிறான். அங்கு பணம் படைத்தவர்கள் தமது பிள்ளைகளுக்கு தின்பண்டங்களை வாங்கிக் கொடுக்கும்போது, அந்தச் சிறுவனின் ஏக்கம் என்ன என்பதை எவராவது சிந்தித்துப் பார்க்கின்றார்களா? இல்லையே, ஏன்? தன் பிள்ளைகளைப்போல அவனுக்கும் ஏதேனும், வாங்கிக் கொடுக்கலாமே, அதில் நீங்களும் குறைந்து போவதும் இல்லை. மகாத்மா காந்தி ஏழைகளின் ஆடைகளை அணிந்தார். அவர் நினைத்திருந்தால் பணக்காரனாக வாழ்ந்திருக்கலாம்.

பணம் படைத்தவர்கள் கொஞ்சம் சிந்தியுங்கள். ஏழைகளுக்கும் கொஞ்சம் கொடுத்து உதவுங்கள். முல்லைத்தீவில் வறுமையில் வாழும் குடும்பங்கள் அதிகமாக வாழ்கிறார்கள் என்பது உண்மை, வசதி படைத்தவர்கள் கொஞ்சம் சிந்தித்து அவர்களுக்கு இயன்ற அளவில் உதவலாமே.

**எஸ். கேதீஸ்வரா**
**கல்வயல், சாவகச்சேரி.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரியோ டி ஜெனிரே
# நாளை கோலாகல

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நாளை ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகிறது. நவீன ஒலிம்பிக் தொடரின் வரலாற்றில் இது 31 ஆவது ஒலிம்பிக் தொடராகும். முதலாவது நவீன ஒலிம்பிக் தொடர் 1896 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கின் தாயகமான கிரீஸ் நாட்டின் தலைநகரான எதென்ஸில் நடைபெற்றது. ஆனால் ஒலிம்பிக் போட்டிகளின் வரலாறு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஆரம்பமாகிறது.
இதன்படி ஒலிம்பிக் தொடர் கி.மு. 776 ஆம் ஆண்டு கிரேக்க நாட்டின் ஒலிம்பியா நகரில் தொடங்கியது. ஒலிம்பிக் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வந்தது. கி.பி. 393 ஆம் ஆண்டு அப்போதைய கிரேக்க அரசர் தியோடிசியல் ஒலிம்பிக் தொடருக்கு தடை விதித்தார். பின்னர் 1896 ஆம் ஆண்டு மீண்டும் ஒலிம்பிக் தொடர்கள் தொடங்கப்பட்டன. 1896 ஆம் ஆண்டிலிருந்து 52 வருட காத்திருப்புக்குப் பின்னர் 1948 ஆம் ஆண்டே இலங்கைக்கு முதல் பதக்கம் கிடைத்தது. டங்கன் வைட் என்பவர் 400 மீற்றர் தடை தாண்டலில் பெற்ற வெள்ளிப் பதக்கமே ஒலிம்பிக் தொடரில் இலங்கையின் முதல் பதக்கமாகும்.

**1896 - முதலாவது மரதன்**
1986 ஆம் ஆண்டு நடைபெற்ற நவீன ஒலிம்பிக் தொடரில் முதல் முறையாக மரதன் சேர்க்கப்பட்டது. இதில் கிரீஸின் வீரரான ஸ்பைரிடன் லூயிஸ் தங்கம் வென்றார். இதில் தங்கம் வென்றதன் மூலம் கிரேக்கத்தின் நாயகனாக உயர்ந்தார் லூயிஸ். மிகவும் ஏழ்மையான குடும்பப் பின்னணியைக் கொண்டவர் லூயிஸ். ஒலிம்பிக் தொடரில் களமிறங்கும் முன்னர் லூயிஸ் குடி தண்ணீர் போத்தல்களை விற்பனை செய்து வந்தார்.

**1900 - பலியெடுக்கப்பட்ட புறாக்கள்**
பிரான்ஸின் தலைநகரான பரிஸில் 1900 ஆம் ஆண்டு ஒலிம்பிக் நடைபெற்றது. துப்பாக்கி சுடுதலில் இலக்காக தற்போது பொறியை பறக்க விட்டு அதைச் சுடுகிறார்கள். ஆனால் பரிஸ் ஒலிம்பிக்கில் புறாக்கள் பயன்படுத்தப்பட்டன. போட்டியின்போது புறாக்கள் பறக்கவிடப்பட்டன. அதில் அதிக புறாக்களை சுட்டுக் கொன்றவர் சம்பியனாகத் தேர்வு செய்யப்பட்டார். இந்தப் போட்டியின்போது 400 புறாக்கள் சுட்டுக் கொல்லப்பட்டன. ஒலிம்பிக் வரலாற்றில் பிராணிகள் கொல்லப்பட்ட ஒரே தொடர் பரிஸ் ஒலிம்பிக்கே.

**1904 - அமெரிக்காவின் கூட்டம்**
1904 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சென். லூயிஸ் நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. 12 நாடுகளிலிருந்து 651 வீரர், வீராங்கனைகள் இதில் பங்குபற்றினர். அவர்களில் 500 இற்கும் அதிகமானவர்கள் அமெரிக்கர்கள். இந்தத் தொடரில், புகையிரத விபத்தில் இடது காலை இழந்து, செயற்கைக் கால் (மரக் கட்டைக் கால்) பொருத்தியவரான அமெரிக்காவின் ஜிம்னாஸ்டிக்ஸ் வீரர் ஜார்ஜ் எய்சர் 3 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் என 6 பதக்கங்களை வென்று பிரமிக்க வைத்தார்.

**1908 தவறிய தங்கம்**
1908 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் மரதன் ஓட்டத்தில் சர்ச்சை ஏற்பட்டது. முதலில் வந்தவரான இத்தாலியின் டொரன்டோ பியட்ரி, இலக்கை நெருங்கியபோது கீழே விழுந்தார். இதையடுத்து அங்கிருந்த அதிகாரிகளின் உதவியுடன் இலக்கை எட்டினார் பியட்ரி. அதன் காரணமாக அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டு இரண்டாவது இடம்பிடித்தவரான அமெரிக்காவின் ஜொனி ஹேய்ஸ் முதலிடம் பிடித்ததாக அறிவிக்கப்பட்டது.

**1912 இறந்தபின் அங்கீகாரம்**
1912 ஆம் ஆண்டு சுவீடனின் தலைநகர் ஸ்ரொக்ஹோமில் நடைபெற்ற இந்த ஒலிம்பிக்கில் அமெரிக்க வீரர் ஜிம் தோர்ப் மல்யுத்தப் போட்டிகளில் தங்கம் வென்றார். ஆனால் அவர் விதிகளை மீறியதாகக் கூறி சில நாள்களிலேயே தோர்ப்பிடம் இருந்து பதக்கங்கள் பறிக்கப்பட்டன.
ஆனால், அவர் இறந்து 30 வருடங்களுக்குப் பிறகு அவர்தான் வெற்றியாளர் என அறிவிக்கப்பட்டு அவருடைய வாரிசுகளிடம் 1983 ஆம் ஆண்டு பதக்கம் ஒப்படைக்கப்பட்டது.

**1920 - அறிமுக அசத்தல்**
முதலாவது உலகப்போர் காரணமாக 1916 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடர் நடைபெறவில்லை. 1920 ஆம் ஆண்டு பெல்ஜியத்தின் ஆன்ட்வெர்ப் நகரில் நடைபெற்றது. இந்த ஒலிம்பிக்கில் பின்லாந்தின் தடகள வீரரான பாவோ நர்மி 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம், 8 ஆயிரம் மீற்றர் ஓட்டம், 5 ஆயிரம் மீற்றர் ஓட்டம், 1500 மீற்றர் ஓட்டம் ஆகியவற்றில் தங்கம் வென்றார். இதன் மூலம் அறிமுக ஒலிம்பிக்கில் தான் பங்கேற்ற 4 பிரிவுகளிலும் வெற்றி கண்டவர் என்ற சாதனையைப் படைத்தார். நெடுந்தூர ஓட்டத்தில் இன்று வரை இதுவே சாதனையாக உள்ளது.

**1924 - ஒலிம்பிக் கிராமம்**
1924 ஆம் ஆண்டு பிரான்ஸின் தலைநகர் பரிஸில் நடைபெற்ற இந்த ஒலிம்பிக்தான், ஒலிம்பிக் கிராமம் அமைக்கும் பழக்கத்துக்கு வித்திட்டது. மட்டுமல்லாமல் நிறைவு விழாவை நடத்தும் முறையையும் அறிமுகம் செய்தது.



சூரியக் கதிரிலிருந்து ஒலிம்பிக் சுடர் ஏற்றப்ப

**1928 - சாவுக்கு உதவிய சாதனை**
நெதர்லாந்தின் ஆம்ஸ்டெர்டாம் நகரில் இந்த ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. கனடாவின் பேர்ஸி வில்லியம்ஸ் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டங்களில் தங்கம் வென்றார். அப்போது அவருக்கு 20 வயது மட்டுமே. இந்த வெற்றிகளால் கனடாவின் கதாநாயகனாக உருவெடுத்த அவர் தனது 69 ஆவது வயதில் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்தார். இந்தத் துப்பாக்கி 1928 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரில் பதக்கம் வென்றமைக்காக அவருக்குப் பரிசளிக்கப்பட்டது.



இலங்கைக்கு முதல் பதக்கம் கொடுத்த டங்கன் வைட்

**1932 - பொசுங்கிய ஜாம்பவான்கள்**
அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 1932 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. கிடமுரா என்ற 15 வயது ஜப்பான் வீரர் 1,500 மீற்றர் நீச்சலில் தங்கம் வென்றார்.
இதன்மூலம் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற இளம் வீரர் என்ற பெயர் அவருக்குக் கிடைத்தது.



சுடரேற்றிய ஆஸ்திரேலியப் பழங்குடிப் பெண் கெத்

**1936 - அடிபணிந்த ஹிட்லர்**
ஜேர்மனின் தலைநகர் பேர்லினில் 1936 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. எகிப்தைச் சேர்ந்த 20 வயதேயான பளுதூக்குதல் வீரரான காதர் சையது எல் டூனி என்பவர் ஜெர்மனியைச் சேர்ந்த அக் கால உலக சம்பியன்களான ரூடால்ப், அடால்ப் ஆகியோரை வீழ்த்தி சாதனைகளைப் படைத்தார். அந்தக் காலத்தில் ஜேர்மனின் ஜனாதிபதியாக இருந்த அடல்ப் ஹிட்லர் பதக்க மேடைக்குச் சென்று டூனியைப் பாராட்டினார்.


**1948 - பறக்கும் குடும்பப் பெண்**
இரண்டாவது உலகப்போர் காரணமாக 1940, 1944 ஆம் ஆண்டுகளில் ஒலிம்பிக் தொடர்கள் நடை பெறவில்லை.
1948 ஆண்டு லண்டனில் நடைபெற்றது. 2 குழந்தைகளின் தாயான நெதர்லாந்தின் 30 வயது தடகள வீராங்கனை பேனி பிளாங்கர்ஸ் கோயன்
100 மீற்றர், 200 மீற்றர், ...
80 மீற்றர் தடை தாண்...
வற்றில் தங்கம் வென்...
சாதனை மற்றும் குடும்ப...
யின் காரணமாக இவ...
குடும் பப் பெண் என்று...
பட்டார்.

**1952 - புறக்கணிக்கப்...**
பின்லாந்தின் ஹேல்சி...
நடைபெற்ற இந்த ஒலி...
ரில், இரண்டாம் உலகப்...
ரம் காட்டிய நாடுகளான ...
பான் ஆகியவை சேர்க்க...

**1956 - பெண்ணுக்கான...**
மெல்பேர்ண் நகரில் ...
இந்த ஒலிம்பிக் தொட...
ரேலிய தடகள வீராங்க...
குர்பேர்த் மூன்று தங்...
கைப்பற்றினார். இந்த...
யைக் கௌரவிக்கும் வி...
பிக் முடிவடைந்த ஒரு...
அவருக்கு சிலை வடிக்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரா ஒலிம்பிக்
# கல ஆரம்பம்


க் சுடர் ஏற்றப்படுகிறது.


ப் பெண் கெத்ரி பிறீமன்

ர், 200 மீற்றர், 400 மீற்றர்,
ர் தடை தாண்டுதல் ஆகிய
தங்கம் வென்றார். இவரது
மற்றும் குடும்பப் பின் னணி
ரணமாக இவர் பறக் கும்
பெண் என்று அழைக்கப்

**றக்கணிக்கப்பட்ட போர்**
ந்தின் ஹேல்சிங்கி நகரில்
ற்ற இந்த ஒலிம்பிக் தொட
ண்டாம் உலகப் போரில் தீவி
ப நாடுகளான ஜேர்மனி, ஜப்
கியவை சேர்க்கப்படவில்லை.

**பண்ணுக்கான அங்கீகாரம்**
ர்ண் நகரில் நடைபெற்ற
லிம்பிக் தொடரில் ஆஸ்தி
டகள வீராங்கனை பெட்டி
மூன்று தங்கங்களைக்
றினார். இந்தச் சாதனை
ளரவிக்கும் விதமாக ஒலிம்
வடைந்த ஒரு வாரத்தில்
த சிலை வடிக் கப்பட்டது.

**1960 - முதல் களச் சாவு**
உரோம் நகரில் நடைபெற்ற இந்த ஒலிம்பிக் தொடரில் டென்மார்க்கின் சைக்கிள் பந்தய வீரர் நிமார்க் ஜென்ஸன் போட்டியின்போது சுருண்டு விழுந்து சாவடைந்தார். ஒலிம்பிக் தொடரில் சாவடைந்த முதல் சைக்கிள் பந்தய வீரர் ஜென்சன் ஆவார்.

**1964 - பரிகாரம்**
ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் 1964 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. யோசினோரி சஹாய் என்ற 19 வயது மாணவர், ஒலிம்பிக் தீபத்தை ஏற்றினார். 1945 ஆம் ஆண்டு ஜப்பானின் ஹிரோசிமா நகர் மீது அமெரிக்கா அணுகுண்டை வீசிப் பேரழிவை ஏற்படுத்தியபோது அங்கு சஹாய் பிறந்தார். அதன் காரணமாகவே அமைதியை வலியுறுத்தும் வகையில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றும் வாய்ப்பு சஹாய்க்கு வழங்கப்பட்டது.

**1968 - முதல் குற்றம்**
1968 ஆம் ஆண்டு மெக்சிக்கோவில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. சுவீடன் நாட்டின் வீரரான ஹன்ஸ், ஊக்கமருந்தைப் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டது. ஊக்கமருந்தைப் பயன்படுத்தி தடைபெற்ற முதல் வீரர் ஹன்ஸ்.

**1972 - துப்பாக்கி முனையில் ஒலிம்பிக்**
1972 ஆம் ஆண்டு ஜேர்மனியின் மூனிச் நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. ஒலிம்பிக் தொடரின் நிறைவு விழாவில் ஒலிம்பிக் கிராமத்துக்குள் புகுந்த பலஸ்தீன பயங்கரவாதிகள் எட்டுப் பேர், இஸ்ரேலைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், அதிகாரிகள் ஏன 9 பேரை பிணைக் கைதிகளாகப் பிடித்தனர். இஸ்ரேல் சிறையில் உள்ள பலஸ்தீன கைதிகளை விடுவிக்க வேண்டுமென்று அவர்கள் கோரினர். பயங்கரவாதிகளின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டுக்கொண்டிருந்தநிலையில்வீரர், வீராங்கனைகள், பயிற்சியாளர்கள் ஆகியோரைச் சுட்டுக்கொன்றனர். இந்தச் சம்பவம் கறுப்பு செப்ரெம்பர் என்று வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

**1976 - அனுபவத்தை வீழ்த்திய திறமை**
1976 ஆம் ஆண்டு கனடாவின் மொன்றியேல் நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. 14 வயது ருமேனியா வீராங்கனை நாடியா கொமன்சி ஜிம்னாஸ்டிக் போட்டியில் 3 தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றினார். சிறுமி என்ற போதிலும் அவர் எந்தவொரு சிறிய தவறும் செய்யாதமை பலரையும் ஆச்சரியப்படுத்தியது.

**1980 - ஆப்கானுக்கு உதவிய அமெ.**
1980 ஆம் ஆண்டு ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் இந்த ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் தலையீட்டைக் கண்டித்து அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் உள்ளிட்ட 65 மேற்கத்தேய நாடுகள் இந்த ஒலிம்பிக் தொடரைப் புறக்கணித்தன.

**1984 - இஸ்லாமிய அடையாளம்**
அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 1984 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. நவால் இல் மவுதாவா கெல் என்ற இஸ்லாம் வீராங்கனை 400 மீற்றர் தடை தாண்டும் ஓட்டத்தில் தங்கம் வென்றார்.

**1988 - பதறிய மனசாட்சி**
தென்கொரியாவின் சியோல் நகரில் இந்த ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. படகுப் போட்டியில் இரண்டாவது இடத்தில் வந்துகொண்டிருந்தார் கனடாவின் லோரன்ஸ் லீமியெக்ஸ். அப்போது கடுமையான காற்று வீசியதால் சக போட்டியாளர் ஒருவர் படகில் இருந்து தூக்கி வீசப்பட்டார். அதைப் பார்த்த லோரன்ஸ், போட்டியைக் கைவிட்டுவிட்டு அவரைக் காப்பாற்றி, ரோந்துப் படகில் வந்தவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, மீண்டும் போட்டியில் கலந்துகொண்டார். இதனால் அவரால் 21ஆவது இடத் தையே பிடிக்க முடிந்தது. லோரன்ஸின் துணிவையும், தியாகத்தையும் பாராட்டி, அவருக்கு சிறப்பு விருது வழங்கியதோடு, வெள்ளிப்பதக்கத்தையும் வழங்கிக் கௌரவித்தது சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம்.

**1992 - அங்கீகரிக்கப்பட்ட கறுப்பினம்**
ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில் 1992 ஆம் ஆண்டு ஒலிம் பிக் நடைபெற்றது. நிறவெறிக் கொள்கையால் ஒலிம்பிக் தொடரில் தடை விதிக்கப்பட்ட தென்னாபிரிக்கா 32 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் களமிறங்க அனுமதி வழங்கப்பட்டது.

**1996 - பியாண்டியின் பொற்காலம்**
அமெரிக்காவின் அட்லான்டா நகரில் 1996 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. அமெரிக்காவின் நீச்சல் ஜாம்பவானான பியான்டி இந் தத் தொடரில் பெரும் ஆதிக்கம் செலுத்தி ஐந்து தங்கங்களைக் கைப்பற்றினார். இக்காலமே பியாண்டியின் பொற்காலம்.

**2000 - கைகொடுத்தலும் கவிழ்த்தலும்**
ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இந்த ஒலிம்பிக் தொடர் நடைபெற் றது. ஆஸ்திரேலியப் பழங்குடி இனத் தைச் சேர்ந்த தடகள வீராங்கனை யான கெத்ரி பிறீமன் ஒலிம்பிக் தீபத்தை ஏந்த அழைக்கப்பட்டார். ஆஸ்திரே லியாவில் நிகழும் பழங்குடியினச் சர்ச்சைகளை இவரின் நியமனம் நீக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதி லும் தீபத்தை ஏந்திச் சென்றபொழுது இவர் அணிந்திருந்த கௌரவ உடை அன்று மாலை திருடப்பட்டது.

**2004 - தலைதூக்கிய கேத்லின்**
நிகழ்கால தடகள உலகில் உசைன் போல்டடின் போட்டியாளராக கருதப்படும் அமெரிக்காவின் ஜஸ்டின் கேத்லின், இந்த ஒலிம்பிக் தொடரில் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றார். இதுவே சர்வதேசத் தொடரில் இவர் வென்ற கடைசித் தங்கமாகும். பின்னர் உசைன் போல்ட் இவரது இடத்தைப் பிடித்துக்கொண்டார்.


படகுப் போட்டியில் சக வீரரைக் காப்பாற்றிய லோறன்ஸ்


ருமேனிய ஜிம்னாஸ்டிக் வீராங்கனை கொமன்சி

**2008 - ஒரே கனவு, ஒரே உலகம்**
சீனாவின் தலைநகர் பீஜிங்கில் 2008ஆம் ஆண்டு ஒலிம் பிக் தொடர் நடைபெற்றது. உலகில் பெருகிவரும் பயங்கரவாதத்துக்கு எதிரான விழிப்புணர்வாக அமையும் விதத்தில் ஒரே கனவு, ஒரே உலகம் என்ற தொனிப் பொருளின் கீழ் இந்த ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது.

**2012 - மின்னல் வேகம்**
2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடர் லண்டனில் நடைபெற்றது. மின்னல் வேக மனிதர் என்று அழைக்கப்படும் உசைன் போல்ட் கோலோச்சிய காலமாக இக்காலம் குறிப்பிடப்படுகிறது. 100 மீற்றர் ஓட்டத்தில் 9.58 செக்கன்களிலும், 200 மீற்றர் ஓட்டத்தில் 19.19 செக்கன்களிலும் இலக்கை அடைந்து சாதனை படைத்தார்.

**2016 - அகதிகளுக்கு அணி**
ஈராக், சிரியா நாடுகளில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரின் காரணமாகப் புலம்பெயர்ந்து வேறுநாடுகளில் வசிக்கும் வீரர், வீராங்கனைகள் பங்கேற்பதற்காக அகதிகள் அணி உருவாக்கப்பட்டுள்ளது.
கடந்த ஒலிம்பிக் தொடரைப் போன்று இந்த ஒலிம்பிக் தொடரிலும் உசைன் போல்ட்டின் ஆதிக்கம் மிகுந்திருக்கும் என்று கணிக்கப்படுகிறது.


பறக்கும் குடும்பப் பெண் என்று அழைக்கப்பட்ட பேனி பிளாங்கர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? மிதுனம்

குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.



### மிருகசீருடம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 பாதங்கள் வரை

குரு, சந்திர சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை): எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும். புண்ணிய காரியங்களுக்கு கொடுத்து உதவுவீர்கள். புதிய நண்பர்களின் ஒத்துழைப்போடு பொருளாதார நிலை உயரும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு உறுதுணையாக விளங்குவர். நிகழ்காலத் தேவைகள் முழுமையாகும். தகராறு செய்தவர்கள் தானே விலகுவர். தனவரவு திருப்திகரமாக இருக்கும்.

குரு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.6.2017 முதல் 1.9.2017 வரை): எதிலும் விழிப்புணர்ச்சி தேவை. எதிர்பாராத விரயங்களைச் சந்திக்க நேரிடும். சொத்துக்கள் கையை விட்டுப் போகலாம். சொந்தங்களின் பகை உருவாகும். உத்தியோகத்தில் நீண்ட தூரத்துக்கு மாறுதல் கிடைக்கும். சக ஊழியர்கள் ரகசியத்தைக் காப்பாற்றமாட்டார்கள். சலுகைகள் கிடைப்பதில் கூட தாமதம் ஏற்படும். அங்காரகனையும், குருவையும் வழிபடுவதன் மூலம் அல்லல்கள் தீரும். விரயங்கள் அதிகரிக்கும் நேரம் இது.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

மிதுன ராசியில் பிறந்த பெண்களுக்கு பொருளாதாரப் பிரச்சினை அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும். கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். அர்த்தாஷ்டம குரு ஆதிக்கத்தால், அடிக்கடி உடல்நிலை தொல்லை உருவாகலாம். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்ளுங்கள். கணவன்–மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. அதுமட்டுமல்ல குடும்பத்தினர்களின் ஆலோசனைகளைக் கேட்டுச் செயற்பட்டால் பிரச்சினை ஏற்படாது. குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தி யோகத்தில் உள்ளவர்கள் உயரதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவர்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்கிரக காலம்!**

குரு வக்கிரம் பெறும் நேரத்தில், வளர்ச்சி கூடுதலாக இருக்கும். உங்கள் ராசிக்கு 7, 10 ஆகிய இடங்களின் அதிபதியாக குரு விளங்குவதால், வாழ்க்கை துணையிடம் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். வருமானம் திருப்தியாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கலாம். கேந்திராதிபத்திய தோசம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறும் பொழுது, நன்மைகளையே அதிகம் வழங்கும். பிள்ளைகள் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இழப்புகளை ஈடு செய்ய, புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை மட்டுமன்றி வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை எல்லாம் வாங்கி மகிழ்வீர்கள். குரு அதிகாரமாக செல்லும்பொழுது வீடு கட்டும் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

ராசிநாதன் புதன் என்பதால் புதன்கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. யோகபலம் பெற்ற நாளில் பழனிக்குச் சென்று முருகப்பெருமானை வழிபட்டு வந்தால், நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

---

இராசையா ஸ்ரீதரன்

# வண்ணை வாலாம்பிகை தையல்நாயகியம்மை இன்று தேரேறி வருகின்றாள்!

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான அம்பிகை யாழ்ப்பாணம் வண்ணையம்பதியிலே வாலாம்பிகா 'தையல்நாயகி' என்றதிருநாமத்துடன் வழிபடும் அடியார்க்கு அருள் புரிந்து வருகின்றாள். அப்பேர்ப்பட்ட அருள்மிகு அம்பிகைக்கு இன்று தேர்த்திருவிழா.

> வருடாந்த மகோற்சவத்திலே இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். ஆகவே இன்று அநியாயங்களையும் ஆணவத்தையும் அகங்காரத்தையும் அழித்தொழிப்பதற்காக அம்பிகை ஆக்ரோசத்துடன் அற்புதமான சித்திரத் தேரிலே சிங்காரப் பவனி வருகின்றாள்.

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான அன்னை தையல்நாயகி இன்று தேரேறி வரும் தேவியாக அருட்காட்சி தருகின்றாள். தாய்க்குத் தாயாகவும் அன்னைக்கு அன்னையாகவும் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அம்பிகையானவள் இன்று அலங்கார பூஜிதையாக அழகிய சித்திரத் தேரிலே அழகே உருவாக ஆரோகணித்து அற்புதலீலை புரிகின்றாள்.

வருடாந்த மகோற்சவத்திலே இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். ஆகவே இன்று அநியாயங்களையும்–ஆணவத்தையும்–அகங்காரத்தையும் அழித்தொழிப்பதற்காக அம்பிகை ஆக்ரோசத்துடன் அற்புதமான சித்திரத்தேரிலே சிங்காரப் பவனி வருகின்றாள். அவளுடைய அற்புத சக்தியானது எமது நாட்டில் நடக்கின்ற கூடாத வன்முறைச் செயல்களையெல்லாம் அறவே அழித்து–அறமும்–தர்மமும்–ஆனந்தமும் கிடைக்கச் செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

மேலும்,

இந்தத் தையல்நாயகி ஆலயத்திலே வீற்றிருக்கும் பாங்கு அற்புத நிலையாகும். தீர்த்தக் கேணியாகிய சித்தாமிர்தபுஷ்கரணியை எப்போதும் பார்த்த வண்ணம் வீற்றிருக்கின்றாள். அதன் தாற்பரியம் என்னவென்றால் ஜலம் குளிர்மையானது, அதேபோல் அம்பிகையின் கடைக்கண் பார்வையும் அருள்மயமான இரக்கத்தையுடைய குளிருந்தண்மை அதாவது தண் என்றால் குளர்ச்சி நிறைந்ததாகும்.



அந்தவகையில் இன்று தேரிலே பவனி வந்து அடியார்களுக்கு நேரிலே காட்சிதரும் அருள்மயமான திருவிழாவைக் கண்டு தரிசிப்பதற்கு அடியார்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். வீதியெங்கும் வாழைகளும் மாவிலைத் தோரணங்களும் கட்டி அலங்காகரமாக்கி பூரண நிறைகும்பம் வைத்து, அவல், கடலை, சுண்டல், பொங்கல், வடை, மோதகம் என்பவற்றை நிவேதனமாக்கி படையல் வைத்து வரவேற்கும் [illegible] அம்பிகையின் அருட்கடாட்சத்தைப் பெற்று மகிழுங்கள்! "அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத்திறனாளிகளுடன் கைகோர்த்து நடவுங்கள்

த.சுமித்தி

வழக்கத்துக்கு மாறான வடிவத்தில் இருக்கிறது அந்தச் சக்கரநாற்காலி. கனமான, நீளமான இரும்பு அடிச்சட்டத்துடன் சுருங்கி விரியக் கூடிய வகையில் அதன் மூன்றாவது கால் வித்தியாசமானது, மற்றைய சக்கர நாற்காலிகளில் இருந்து மாறுபட்டது. அதில் அமர்ந்திருக்கும் வேலு குமுதினியைப் போலவே!



குமுதினியும் மற்றையவர்களைப் போல சாதாரண மானவராகத்தான் தெரிகிறார். ஆனால், அவரது சக்கர நாற்காலியின் நீண்ட மூன்றாவது காலைப்போன்றே அவருக்கும் ஒரு நீண்ட மறைந்த பக்கம் இருக்கிறது. அவரால் தனது கடந்த காலத்தை இப்போதும் உணரமுடிந்தாலும், நிகழ் காலத்தை அவ்வளவு இயல்பாக உணர முடியவில்லை. நடந்து முடிந்த கொடூரப் போர் அவரது கழுத்துக்குக் கீழான பகுதியின் இயக்கத்தை நிறுத்திவிட்டது.

"மணலாறு சண்டையில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் மாட்டிக்கொண்டேன். வலது தோள்பட்டையிலும் முதுகிலும் பலத்த காயம். சாகக் கிடந்த என்னை ஏனைய புலிகள்தான் எப்படியோ தூக்கி வந்து உயிர் மீட்டார்கள். அதற்குப் பிறகு இப்படித்தான்'', தனது சக்கர நாற்காலியை சோகத்தோடு தொட்டுக் காட்டுகிறார். அவர் இப்போது முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட ஒரு முன்னாள் போராளி. புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்படும் வரைக்கும் அவர்கள்தான் குமுதினியை "நன்றாகப் பராமரித்து" வந்தார்கள். இப்போது நிலமை அப்படிச் சொல்லிக்கொள்ளும்படி இல்லை. எல்லாமும் மாறிவிட்டது, வாழ்க்கையைப்போலவே கவனிப்பும்.

> *"நான் சாதிக்கிறேனா என்பதைவிட மாற்றுத்திறனாளிகள் வெளியில் வந்து சாதிக்க முடியுமென்று உணர்த்த வேண்டும். வீட்டுக்குள் முடங்கி இருக்கக்கூடாது".*

குமுதினியைப் போலப் பல நூற்றுக்கணக்கானவர்கள் வடக்கில் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களைப் பராமரிப்பது சிக்கலானதும் அதிக செலவுமிக்கதுமான காரியம். வடக்கு மாகாண சபை இவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான சிறப்பு சிகிச்சை மையம் ஒன்றை வடக்கில் உருவாக்கியது. எனினும் அங்கு சில வாரங்கள் மட்டுமே குமுதினி போன்றவர்களைத் தங்க வைத்துச் சிகிச்சை வழங்க முடிகிறது. தொடர்ந்து அவர்களைத் தங்க வைத்துப் பராமரிப்பதற்கு நிதியும் வசதிகளும் போதாது.

"எங்களுக்கு சாகும் வரைக்கும் சிகிச்சையும் – பராமரிப்பும் தேவை. வெளிநாடுகளில் வாழ்கிற தமிழர்கள் ஒரு சிலர் உதவி செய்தார்கள். ஆனால் ஒரே ஆளுக்குத் திரும்பத் திரும்ப உதவி செய்ய யோசிக்கிறார்கள். ஒருவரிடம் உதவி பெற்றால் அதையே காரணமாகச் சொல்லி மற்றவர் உதவி செய்ய மாட்டார். ஒருவர் 20 ஆயிரம் ரூபா உதவி செய்தால், ஒரு மாத மருத்துவ செலவுக்கே அது போதாது. 'பம்பர்ஸ்' மற்றும் மருத்துவச் செலவுகளை ஓரிருவர் செய்யும் உதவிகளால் மட்டும் சமாளிக்க முடியாது. அரசிடம் இருந்தும் உதவிகள் கிடைப்பதில்லை.

மூன்றரை லட்சம் ரூபா வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. ஆனால், அதை முழுமைப்படுத்த முடியவில்லை. சிவனருள் நிறுவனம் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் மலசல கூடம் அமைப்பதற்கு உதவி செய்தார்கள். ஆனால், அதுகூட முழுமைப்படுத்தப்படாமலேயே இருக்கின்றது. 3 ஆயிரம் ரூபா பணம் உதவி அரசு கொடுக்கிறது என்று அறிந்து கிராம சேவையாளரிடம் கேட்டால், குடும்பத் தலைவர்கள் காயமடைந்தால் மாத்திரமே அந்த உதவியைப் பெறமுடியும் என்று சொல்லிவிட்டார்கள். உயிரிழை அரசசார்பற்ற நிறுவனத்தினால் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வழங்குகின்றார்கள். அது சிறு பகுதிக்கும் போதாது'' என்று குமுதினி தனது மனக் குமுறல்களைக் கொட்டித் தீர்க்கிறார்.

அவரது அப்பா ஒரு கூலித் தொழிலாளி. அவருக்கு 5 பெண் பிள்ளைகள். குமுதினி 2ஆவது. 'பட்ட காலிலேயேபடும் கெட்டகுடியே கெடும்' என்பதுபோல, குமுதினியின் அம்மாவுக்கும் என்ன நடந்தது என்று இன்று வரையில் தெரியவரவில்லை. வன்னியில் நடந்த இறுதிப் போரில் எறிகணை வீச்சுக்குள் சிக்கிக் காயமடைந்த குமுதியின் அம்மா, முள்ளிவாய்க்காலில் இருந்து சிகிச்சைக்காக செஞ்சிலுவைப் பன்னாட்டுச் சங்கத்தின் கப்பலில் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டார். அதன் பின்னர் அவருடன் எந்தத் தொடர்பும் இல்லை. "அவர் இறந்துபோனாரா? வேறு எங்காவது வாழ்கிறாரா? என்று எந்தத் தகவலும் இன்றுவரை தெரியாது"

முள்ளிவாய்க்காலில் மீண்டும் காயமடைந்த குமுதினியும், கப்பல் மூலமாகத் திருகோணமலைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டார். அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய ஏற்பட்டதால் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்படார்.

ஆனால், அங்கு அறுவை சிகிச்சையளிக்க முடியாத கட்டத்தை அவர் தாண்டிவிட்டார் என்றுகூறித் திருப்பி அனுப்பி விட்டார்கள்.

கண்டியிலிருந்து கொண்டுசென்று பதவியா வைத்தியசாலையில் சேர்த்தார்கள். அங்கிருந்து 2009ஆம் இறுதியில் வவுனியா சுமதிபுரம் இராணுவ முகா முக்கு அனுப்பி வைக்கப்பட்டேன். ஆனால் அங்கு இராணுவத்தினரால் பிரச்சினைகள் ஏற்பட்டன. விடு தலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த காரணத்தினால் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். அப்பா தான் எப்படியோ போராடி என்னை வெளியே கொண்டுவந்து விட்டார்" தங்களைத் துரத்தும் – துயரம் குறித்துச் சொல்வதற்கு குமுதினியிடம் ஏராளமான கதைகள் உள்ளன.

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டபோது இது போன்ற ஒரு நிலையை குமுதினி போன்றவர்கள் கனவிலும் நினைத்த தில்லை. அழகான, நேர் மையான, ஊழல் அற்ற முழுச் சுதந்திரமான உலகம் ஒன்றை கட்டியெழுப்ப வேண்டும் என்று அதற்காக அவர்கள் தங்களை அர்ப்பணிக்கத் துணிந்தார்கள். ஆனால், இன்று அவர்களின் நிலமை அதற்கு நேர் எதிர்மாறானது. அவர்கள் குறித்துக் கவலைப்பட இந்தச் சமூகத்தில் எவருமேயில்லை.

மாற்றுத் திறனாளி ஆகிவிட்டதனால் முடங்கிப் போய்விடக் கூடாது என்பதில் குமுதினி தீவிரமாக இருக்கிறார். ஆசிரியராவதற்கான கல்வியை 2014ஆம் ஆண்டில் முழுமை செய்திருக்கிறார். எப்படியாவது ஒரு அரச வேலையைப் பெற்று, தன் தேவைகளைத்தானே நிறைவேற்றிக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். "நான் சாதிக்கிறேனோ என்பதைவிட மாற்றுத்திறனாளிகள் வெளியில் வந்து சாதிக்க முடியுமென்று உணர்த்த வேண்டும். வீட்டுக்குள் முடங்கி இருக்கக் கூடாது."

குமுதியின் கண்கள் உறுதியால் மின்னுகின்றன. ஆனாலும், இந்தச் சமூகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய மதிப்பும் மரியாதையும் கவனிப்பும் கிடைப்பதில்லை என்று அவர் ஆதங்கப்படுகிறார்.

அதற்குக் காரணம் இருக்கின்றது. மாற்றுத்திறனாளிகள் படிப்பதற்கான வசதிகள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஓரளவுக்கு இருந்தாலும், யாழ்ப்பாணத்தில் அறவே இல்லை.

மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்துவதற்கான பாதைகள் இல்லை. அரச மற்றும் பொதுக் கட்டடங்களிலும் சேவை மையங்களும்கூட மாற்றுத்திறனாளிகளையும் கவனத்தில் கொண்டு கட்டப்பட்டவையல்ல. புதிய கட்டடங்களில் ஓரிரு வசதிகள் இருந்தாலும், பழைய அலுவலகங்களில் அவை அறவே இல்லை. "எங்களுக்கான வசதிகள் இல்லாமையாலேயே மாற்றுத் திறனாளிகள் பெரிதும் முடக்கப்பட்டுவிடுகிறோம்" என்கிறார் குமுதினி. "மாற்றுத் திறனாளிகள் ஏன் முடங்கிக் கிடக்கவேண்டும்? ஆனாலும், இந்தச் சமூகம் அவர்கள் வெளியில் வருவதற்கு அனுமதிக்கிறது இல்லை. உறவினர் வீடுகளில் நன்மை – தீமைக்குச் சென்றால்கூட ஒதுக்கி வைத்துத்தான் நடக்கிறார்கள். கோயிலுக்கு சென்றால்,வேடிக்கைப் பொருளாகப் பார்க்கின்றார்கள். மாற்றுத்திறனாளிகளை புரிந்து கொண்டு தம்முள் ஒருவர் என ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால்,

> *"மாற்றுத் திறனாளிகள் ஏன் முடங்கிக் கிடக்கவேண்டும்? ஆனாலும், இந்தச் சமூகம் அவர்கள் வெளியில் வருவதற்கு அனுமதிக்கிறது இல்லை. உறவினர் வீடுகளில் நன்மை தீமைக்கு சென்றால்கூட ஒதுக்கி வைத்துத்தான் நடக்கிறார்கள். கோயிலுக்குச் சென்றால், வேடிக்கைப் பொருளாகப் பார்க்கின்றார்கள். மாற்றுத்திறனாளிகளைப் புரிந்து கொண்டு தம்முள் ஒருவர் என ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், இந்தச் சமூகம் அதற்குத் தயாராக இல்லை".*

இந்தச் சமூகம் அதற்குத் தயாராக இல்லை."

இப்படிப்பட்ட சமூகத்திடம் முன்வைப்பதற்கு குமுதினியிடம் ஒரு கோரிக்கை இருக்கிறது. அது, "மாற்றுத்திறனாளிகளையும் உங்களைப் போன்ற உணர்வுள்ளவர்களாக மதியுங்கள். மனிதாபிமானத்துடன் நடத்துங்கள். மாற்றுத்திறனாளிகளுடன் கைகோர்த்து நடவுங்கள்." *(நன்றி: www.thecatamaran.org)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1783 - ஜப்பான் அசாமா எரிமலை வெடித்து 1400 பேர் வரை சாவு; இதனால் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தில், மேலும் 20,000 பேர் சாவடைந்தனர்.

1821 - த சற்றடே ஈவினிங் போஸ்ட் வாராந்த புதினப் பத்திரிகையாக முதன்முதலாக வெளியிடப்பட்டது.

1902 - தேம்ஸ் நதியின் கீழான கிறீன்விச் பூச் சுரங்கம் திறக்கப்பட்டது.

1906 - சிட்னி மத்திய புகையிரத நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

1914 - முதலாவது உலகப்போர்: பெல்ஜியமும் ஐக்கிய ராச்சியமும் ஜேர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்ததையடுத்து ஜேர்மனி பெல்ஜியத்தை ஆக்கிரமித்தது. தனது நடு நிலையை அமெரிக்கா பிரகடனப்படுத்தியது.

1924 - மெக்ஸிகோ மற்றும் சோவியத் யூனியனிடையேயான இராஜரீக உறவு ஸ்தாபிக்கப்பட்டது.

1947 - ஜப்பானின் உச்ச நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது.

1965 - நியூசிலாந்தினுள் சுயாட்சி கொண்டதாக, குக் தீவுகளது அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.

1974 - இத்தாலி இட்டாலிகஸ் எக்ஸ்பிரஸ் புகையிரதத்தில் குண்டு வெடித்து, 12 பேர் சாவு; 22 பேருக்குக் காயம்.

1977 - அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் அமெரிக்கச் சக்தி திணைக்களத்தை உருவாக்கும் சட்டவரைவில் ஒப்பமிட்டார்.

1992 - ஐக்கிய இலங்கை கட்டமைப்பில் இணைந்து செயற்படவேண்டும் என்பதே இலங்கைப் பிரச்சினையில் தமது கருத்தென பிரதமர் ராவ் கூறியதாக இந்தியத் தூதுவர் தெரிவிப்பு.

1994 - பிரான்ஸ் நாட்டு அரசினால் கலை, இலக்கியத் துறைக்காக செவாலியே-மாவீரன் விருது பெறுபவராக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அறிவிக்கப்பட்டார்.

1995 - சுன்னாகம் வரை முன்னேற முயன்ற படையினருடன் புலிகள் கடும் சமர். 8 மணிநேர மோதலின்பின் படையினர் பின்வாங்கினர்.
- போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் உயிர் வாழ உடன் உணவு அனுப்புமாறு யாழ்.ஆயர் ஜனாதிபதியிடம் கோரிக்கை.

2002 - பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அடியோடு நீக்க இதுவே தருணம் என செய்தியாளர் மாநாட்டில், மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான தலைவர், ஈ.டபிள்யூ. அபயக்கோன் தெரிவிப்பு.
- விடுதலைப் புலிகளின் தடுப்பிலுள்ள போர்க் கைதிகளான 7 படையினரை செய்தியாளர் குழு சந்தித்தது.
- பலஸ்தீன தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் மத்தியிலும் 10 யூதர்கள் உயிரிழந்தனர். 40 பேர் வரை படுகாயம்.

2006 - இலங்கைப் படைத் தரப்பால் பிரான்ஸ் அரச சார்பற்ற பட்டினிக்கெதிரான நடவடிக்கை (ACM) நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டனர்.
- காணாமற் போன ஹாட்லி மாணவர் பாதுகாப்பாக இருக்கிறார் எனத் தகவல். மனித உரிமைக் குழு விசாரணையில் தெரிவிப்பு.

# விடுகதைகளும் விடைகளும்

1) உடலோ வெள்ளை நிறம். உள்ளமோ தங்க நிறம் அது என்ன?
2) சிவப்பு தொட்டியில் மலரும் பூ, சிடு சிடுத்தால் மறையும் பூ அது என்ன?
3) என் உடம்பெல்லாம் முள். ஆனால் உள்ளமோ தேன் சுவை நான் யார்?
4) மீன் பிடிக்க தெரியாது. ஆனால் வலை பின்னுவான் அவன் யார்?
5) சுற்றிக் கொண்டேயிருப்பேன். ஆனால் எனக்கு தலை வலிக்காது நான் யார்?
6) இரவு ராணி அவள். தினமும் விழித்திருப்பாள் மாதம் ஒரு முறை உறங்கிடுவாள். அவள் யார்?
7) சட்டை மேல் சட்டையாய், பல சட்டை போட்டவன். சட்டைகளை கழற்றிப் பார்த்தால், உடம்பை மட்டும் காணோம். அவன் யார்?
8) வீட்டிற்குள் இருப்பான். உலகத்தை காட்டுவான். அவன் யார்?
9) சூரிய ஒளியில் உணவைச் சமைப்பேன். சுற்றுச் சூழலைப் பேணிக்காப்பேன். நான் யார்?
10) பல் துலக்க மாட்டான். ஆனால் இவன் பல் எப்பொழும் வெள்ளை. இவன் யார்?

**விடைகள்** 1)முட்டை 2) சிரிப்பு 3) பலாப்பழம் 4) சிலந்தி 5) காற்றாடி 6) நிலா 7) வெங்காயம் 8) கணினி, தொலைக்காட்சி 9) மரம் 10) வெள்ளைப் பூண்டு

# வர்ணம் தீட்டுவோம் வாங்க...



# பெயர் மாற்றம்

கிராமத்திலிருந்த ஒரு செட்டியார் வீட்டுக்கு வேலைக்காக வேறு ஓர் ஊரிலிருந்து பரிந்துரைக் கடிதம் வாங்கிக் கொண்டு வந்தான் ஒருவன்.

வந்ததும், உடனே வீட்டு வேலைகளைப் பார்க்கத் தொடங்கி விட்டான். அதனால் செட்டியாருக்கு அதிகம் திருப்தி.

மாலை நேரம் ஓய்வாக இருக்கும்போது வேலையாளைக் கூப்பிட்டு "உன் பெயர் என்ன?" என்று விசாரித்தார் செட்டியார்.

அவன் "பெருமாள்" என்றான்.

செட்டியாருக்கு முகம் சுருங்கியது. அவர் பரம்பரையாக சிவபக்தர். அத்தகையவர் பெருமாள் என்ற வைஷ்ணவப் பெயரை வைத்துக் கொண்டிருக்கும் வேலையாளை எவ்வாறு வைத்துக் கொள்வார்? ஆனால் வேலையாளோ யோக்கியன்; சுறுசுறுப்பானவன். அவனை அனுப்பிவிடவும் சம்மதம் இல்லை.

அவனைக் கூப்பிட்டு "உன் பெயரை மாற்றி வேறு பெயர் வைத்துக் கொள்ளலாமா?" என்று விசாரித்தார்.

"அது அதிக கஷ்டம்!" என்றான் அவன்.

" என்ன கஷ்டம்" என்று கேட்டார்.

" எங்கள் ஊர் குலதெய்வத்துக்குப் பூசை போட்டு ஊர் மக்களுக்கு சோறு போட்டு பூசாரியிடம் வேண்டிக் கொண்டு. வேறு பெயர் வைத்துக் கொள்ள வேண்டும். நிறையச் செலவாகும்" என்றான்.

"எவ்வளவு செலவானாலும் தருகிறேன்" என்று கூறி இருபது படி அரிசி, ஐந்து படி பருப்பு இவற்றோடு புதுவேட்டி, புதுத் துண்டு, நூறு ரூபாய் ஆகியவற்றையும் கொடுத்து அவனை அனுப்பி வைத்தார் செட்டியார்.

ஊருக்குப் போன பெருமாள் கோடி உடை உடுத்தி குலதெய்வத்துக்குப் பூசை போட்டான். முக்கியமான சிலரை அழைத்து விருந்து வைத்தான். 'பெருமாள் பணக்காரனாகி விட்டான்" என்று கூறி அவனுக்கு மரியாதைகள் செய்து அவனை 'பெரிய பெருமாள்' என்று கூறத்தொடங்கினார்கள் ஊர்க்காரர்கள்.

செட்டியார் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் அவன்.

"பெயரை மாற்றி வைத்துக் கொண்டாயா? என்ன பெயர்?" என்று விசாரித்தார் ஆவலோடு.

அவன் "பெரிய பெருமாள்" என்று வைத்துக் கொண்டேன்" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா இல்லாத ரியோ ஒலிம்பிக்

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நாளை ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகிறது. பன்னாட்டுத் தடகளத் தொடர் என்று அழைக்கப்படும் ஒலிம்பிக் தொடர், இம்முறை ரஷ்யா தடை செய்யப்பட்ட நிலையில் அரங்கேறவுள்ளது. 2008ஆம் ஆண்டு நடைபெற்ற பீஜிங் ஒலிம்பிக் தொடரிலும், 2012ஆம் ஆண்டு நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக் தொடரிலும், 2012ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரை நடைபெற்ற பன்னாட்டுத்தடகளத் தொடர்களிலும் ரஷ்யாவைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய வீர, வீராங்கனைகளில் 70 சதவீதமானவர்கள் ஊக்கமருந்தைப் பயன்படுத்தினர் எனக் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியிலும் இந்த வருடத்தின் ஆரம்பத்திலும் கண்டறியப்பட்டது. பதக்கங்களைக் கைப்பற்றியவர்களைப் பொறுத்தவரை ஊக்கமருந்து பயன்பாடு 60 சதவீதமாக உள்ளதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

அரசின் ஆதரவு அல்லாமல் இத்தகைய பெரும் தொகையானவர்கள் ஊக்கமருந்தை உபயோகிக்க வாய்ப்பில்லை என்பதால், குறித்த விவகாரத்தில் ரஷ்ய அரசும், ரஷ்ய ஊக்க மருந்து தடுப்புச் சம்மேளனமும் உடந்தை எனக் குற்றஞ்சாட்டப்பட்டு அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ரஷ்ய அரசின் தில்லுமுல்லுகளும் அம்பலமாகின. எனவே நாளை ஆரம்பமாகவுள்ள ரியோ ஒலிம்பிக் தொடரில் ரஷ்ய தடகள அணிக்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டது. தடையை எதிர்த்து ரஷ்யா மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்த நிலையில் ரஷ்யக் கொடி இல்லாமல் அரங்கேறவுள்ளது ரியோ ஒலிம்பிக். அவ்வாறு ரஷ்ய வீரர்கள் களமிறங்க வேண்டுமாயின் அவர்கள் ஏகப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் ரஷ்யக் கொடியின் கீழ் அல்லாமல் ஒலிம்பிக் கொடியின் கீழ் அகதிகளைப்போல பங்கெடுக்க வேண்டும்.

ரஷ்யா இல்லாமல் ஒலிம்பிக் தொடரா? இது ஒலிம்பிக்கின் தரத்தை இழக்கச் செய்யும் செயற்பாடு என்று தெரிவித்துள்ளார் அந்த நாட்டு ஜனாதிபதியான விளாடிமிர் புடின். ஒரு விதத்தில் அவரது கருத்து நியாயமானதுதான். பன்னாட்டு அரங்கில் மட்டுமல்ல ஒலிம்பிக் அரங்கிலும் ரஷ்யாவுக்கு போட்டியாளர் அமெரிக்கா. அமெரிக்காவுக்கு போட்டியாளர் ரஷ்யா. இந்த இருநாடுகளின் பதக்கப் பட்டியலில் பெரும் போட்டி நிலவும். இதன் அடிப்படையில் புடின் சொன்னதைப்போல் ரஷ்யா இல்லாமல் ஒலிம்பிக் தொடரா? என்ற சலிப்புத்தன்மையுடன் கூடிய கேள்வி உலகில் பாதிப் பேரிடையே ஏற்பட்டுள்ளது.

கடந்த கால ஒலிம்பிக் தொடர்களில் இருந்த விறுவிறுப்புத் தன்மை நிச்சயம் இவ்வருடம் இருக்கப்போவதில்லை. தனிக்காட்டு ராஜா என்ற கணக்கில் அமெரிக்காவின் ஆதிக்கம் ரியோவில் மேலோங்கியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்றும் செய்ய இயலாது உப்பை உண்டவர் தண்ணீர் குடித்துத்தான் ஆக வேண்டும் என ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

ரஷ்யாவின் தடையின் பின்னால் சில சாதனை வீரர், வீராங்கனைகளின் பயணங்கள் ஸ்தம்பிதமாகியுள்ளன என்பதுதான் வருத்தத்துக்குரிய விடயம். இதற்கு ஆகச்சிறந்த எடுத்துக்காட்டாக இருவரைக் குறிப்பிடலாம். கோலூன்றிப் பாய்தலில் உலகச் சாதனையை தன்னிடத்தில் வைத்துள்ள வீராங்கனையான இசின் பயேவா. 100 மீற்றர் தடைதாண்டலில் உலகச் சாதனையைத் தன்னிடத்தில் வைத்துள்ள வீரரான செர்ஜி சுபென்கோவ். குறிப்பாக இவர்கள் இருவரையும் ரியோ ஒலிம்பிக் தொடரில் தவறவிடுகின்றமை வேதனைக்குரியதே.




# பாடறிந்து ஒழுகும் பண்பாடு

நா.நல்லதம்பி

மனம் உள்ளவன் மனிதன். மனிதன் ஆறறிவு படைத்தவன். மனிதன் தன் மெய், வாய், மூக்கு, கண், செவி என ஐம்பொறிகள் வாயிலாக வரும் புலன்கள் மூலம் அறிவைப் பெறுகின்றான். ஆயினும் மனிதனை வழிநடத்துகின்ற மனதுக்கு ஐம்பொறிகளுக்கு இல்லாத ஐம்புலன் களுக்கு இல்லாத ஆற்றல் இருக்கிறது. அந்த மனந் தானே மனிதனை வழிநடத்துகின்றது.

மனிதனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு போவதும் தாழ்ந்த நிலைக்கு கொண்டு போவதும் நடுநிலையில் வைத்திருப்பதும் எல்லாம் மனத்தின் ஆற்றலில் தங்கியுள்ளது.

ஆனபடியால் இந்த மனதை நல்வழிப் படுத்துவதற்கு வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு நமக்கு கல்வி கேள்வி அறிவு நல்லோர் இணக்கமும் அவசியமாகிறது. உலக நடைமுறைக்கேற்ப வாழ நாம் எமது மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். அந்த வாழ்வுதான் பாடறிந்து ஒழுகும் பண்பாட்டு வாழ்க்கை



யாகும்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்" எனத் திருவள்ளுவர் கூறுவது இந்தப் பாடறிந்து ஒழுகும் பண்பாட்டினையேயாகும்.

மனம் அங்கும் இங்கும் பாயும் குரங்கு போன்றது. போகும் வழி நல்லதாயும் இருக்கலாம், தீயதாயும் இருக்கலாம். எல்லா வழியிலும் மனம் போக விடக் கூடாது, மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம் என்கிறார் உலகநாதப் புலவர்.

கம்பராமாயணக் கதையிலே இராமனும் இலக்குமணனும் விசுவாமித்திர முனிவருடைய தவவேள்விக்கு இடையூறு வராமல் காக்கின்ற வேலைக்குப் போனார்கள். தவவேள்வி நல்லபடியாக முடிந்தது. அடுத்த கட்டமாக அவர்களுக்கு உபகாரம் செய்ய நினைத்த முனிவர் அவர்களை அழைத்துக்கொண்டு மிதிலை நகரத்துக்குப் போகிறார். சீதைக்கு ஏற்ற கணவன் இராமன் என்பது முக்காலமும் உணர்ந்த முனிவருக்குத் தெரியுந்தானே.

முனிவர் முன்னே செல்ல இலக்குமணன் பின்னே வர இராமன் நடுவில் போய்க்கொண்டிருந்தான், மிதிலை நகரம் வந்துவிட்டது. இராமன் அங்குள்ள காட்சிகளைப் பார்த்துக்கொண்டு போனான், தனது தோழியர்களோடு அரசமாளிகை மேல் மாடியில் நின்ற சீதையை இராமன் காண நேர்ந்தது.!

அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் என்பது கம்பர் கூற்று. இந்த இடத்திலே இராமன் யோசிக்கிறான் அந்த மங்கை ஒரு கன்னிப் பெண்ணாக இருந்தால் தவறு இல்லை. இன்னொருவர் மனைவியாக இருந்தால் என்மீது தவறு வந்துவிடும். ஆனால் இது வரை எனது வழி தவறியது கிடையாது. இப்போதும் தவறு இருக்காது என்று தன்னைச் செம்மையாக்கிக் கொண்டு தொடர்ந்து சென்றான் இராமன், இச்செயல் பாடறிந்து ஒழுகும் பண்பாடு ஆகிறது.

மேலும் கண்ணகியை மணம் முடித்த கோவலன் மாதவியின் ஆடல்பாடலில் மயங்கி மனதைப் பறிகொடுத்து அவளோடு சிலகாலம் வாழ்ந்து கைப்பொருள் இழந்து போனான். இந்தப் பட்டறிவோடு திரும்பி வந்து கண்ணகியிடம் கூறி வேதனைப்பட்டான். கண்ணகி தன் காற்சிலம்பைக் கொடுத்து அதனை விற்றுப் பொருள் தேடலாம் என்று கூறிக் கோவலனைத் தேற்றுகிறாள். இதுவும் பாடறிந்து ஒழுகும் பண்பாடு, வாழ்வைச் சீர் செய்யும் பண்பாடு ஆகும். மக்கட் பண்போடு வாழ்வது தான் இன்றைய தேவை ஆகும்.

அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர் என்பதும்
பண்புடையார்ப் பட்டுண்டுலகம் அது வின்றேல்
மண்புக்கு மாய்வது மன் என்பதுவும் குறள் நெறியாகும்.

பாண்டி நாட்டிலிருந்து பிசிராந்தையார் என்ற புலவர் ஒருவர் தனது நண்பனான கோப்பெருஞ் சோழனைக் காண வருகிறார் என்ற செய்தி கேட்டு அவரைக் காண்பதற்கு பலர் வந்து சென்றபிலே இருந்தார்களாம். அப்பொழுது வயது முதிர்ந்தவரான பிசிராந்தையாரைக் கண்டதும் எல்லோரும் மிகுந்த ஆச்சரியப்பட்டார்களாம். இத்தனை வயதிலும் தங்களுக்கு தலையில் ஒரு மயிர் கூட நரைக்கவில்லையே இது எப்படிச் சாத்தியம் ஆகும் என்று ஒருவர் கேட்டாராம், அதற்குப் புலவர் சொல்லுகிறார்:

யாண்டு பலவாக நரையிலவாகுதல்
யாங்கு ஆகியர் என வினவுதிர் ஆயின்
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்,
யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும், அதன் தலை
ஆன்றவித் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே

என பதில் கூறினாராம். என் மனைவி நல்லவள், நாம் பெற்றெடுத்த பிள்ளைகளும் நல்லவர்கள், எனக்கு இளையவரும் என சொற்படி நடப்பார்கள். எமது அரசனோ என்றால் எந்த இடையூறுமில்லாமல் எம்மைக் காப்பான், எல்லாவற்றுக்கு மேலாகப் பண்புள்ள பெரியோர் பலர் எனது ஊரில் இருக்கிறார்கள். அதனால் நான் எவ்வித கவலையுமின்றி வாழ்கிறேன். அதனால் என் தலை நரைக்கவில்லை என்றாராம். ஆம், இவர்கள் எல்லோரும் பாடறிந்து ஒழுகும் பண்பினர் ஆக இருப்பதையே இந்தப் புறநானூற்றுப் புலவர் நமக்குக் காட்டுகிறார்.

ஓர் அஃறிணை உயிருக்காகத் தனது மகனைக் கொன்ற மனுநீதிச் சோழனின் பண்பாட்டைப் பார்ப்போம். கண்ணகி தன்னை அறிமுகப்படுத்துவதற்குத் தனது அரசனின் செங்கோன்மை பற்றிச் சொல்லுகிறாள்.

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவிற் கருமணி உகுநீர் நெஞ்சு
சுடர் தான் தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியில்
மடித்தோன்
பெரும் பெயர் புகார் என்பதியே

என்கிறாள்.

சோழ அரசன் தனது அரண்மனைவாசலிலே கட்டிய ஆராய்ச்சி மணி என்றுமே அடித்ததில்லை. இன்று ஏன் மணி ஒலிக்கிறது என்று அரசன் ஒரு நாள் திடுக்குற்றான். அந்த மணியைத் தலையால் முட்டி ஒலிக்கச்செய்தது ஒரு பசு. பசுவின் கன்றைக் கொன்றது அந்த அரசனது மகன் செலுத்திய தேர். அதனால் நீதியை நிலைநாட்டுவதற்காகத் தனது மகனை அந்தத் தேர்க்காலில் கிடத்திக் கொல்லுகின்றான். ஏன்? அந்தப் பசு படும் துன்பம் போலத் தானும் தனது மகனை இழந்து துன்பப்படுவதே நீதி என்பது அவனது பண்பாடு ஆகிறது.

இப்படி அன்றைய முடியாட்சிக் காலத்தில் இருந்த பண்பாடு பற்றி அறிகிறோம் ஆனால் இன்றைய மக்களாட்சியில் இந்தப் பண்பாட்டைக் காண முடியவில்லையே! சர்வ வல்லமையுங் கொண்ட முடியாட்சிக் காலத்தில் மன்னுயிர் எல்லாம் தன்னுயிர் என வாழ்ந்த பண்பாட்டினைக் கண்டோம். இன்று மன்னுயிர் தொலைந்தாலும் தன்னுயிருக்குப் பாதுகாப்புத் தேடும் மக்களாட்சியைக் காண்கிறோம்!

மேலும் புகார் நகரிலிருந்து பாண்டிநாட்டுக்கு வந்து தனது காற்சிலம்பு ஒன்றை விற்க முயன்ற தனது கணவன் கோவலனை, விசாரணையின்றிக் கொலை செய்வித்த பாண்டிய மன்னனோடு நீதி கேட்டு வாதாடினாள் கண்ணகி. அப்பொழுது தனது தவறை உணர்ந்தான் பாண்டியன் ஆம், பொன் செய் கொல்லன் தன்

சொல் கேட்ட யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல
என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள் என்கிறான்

முதலில், மெய்யிற் பொடியும் விரித்தகருங்குழதலும் கையிற் தனிச்சிலம்பும் கண்ணீரும் வையக்கோன் கண்டளவே தோற்றான், அக்காரிகை தன் சொல் செவியில் உண்டளவே தோற்றான் உயிர்

எனத் தான் நீதி தவறியமையைக் கண்ணகி சுட்டிக் காட்டியபோது அவனது உயிர் ஊசலாடியது. அவளது உண்மைத் தன்மையை அறிந்தவுடனே அவனது உயிர் பிரிந்தது.

இவ்வாறு அவனது பாடறிந்து ஒழுகிய பண்பாட்டை எமக்கு இளங்கோவடிகள் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இன்னும் தன் மகன் பரதனுக்கு இராச்சிய பதவியைக் கொடுக்க வேண்டும். அதற்கு இடையூறு வராமலிருக்க இராமன் பதினான்கு ஆண்டு வனவாசஞ் செய்ய வேண்டுமெனத் தசரத மன்னனிடம் கேட்ட கைகேயிக்கு சத்தியந்தவறாத தசரதன் ஆம் என்று சொல்லுகிறான். இராமன் தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று வனவாசம் போகிறான். ஆனால் கேகய நாட்டிலிருந்து திரும்பி வந்த பரதனுக்கு இது அநீதியாகப் பட்டது. அதனால் தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினை யென்ன நீத்து, இராமனைத் தேடி வனம் போகிறான் பரதன். இங்கே இராமன், பரதன் ஆகிய இருவரதும் பாடறிந்தொழுகும் பண்பாட்டைக் கம்பர் காட்டுவது காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனமாக செலவு செய்வர். வாகன பயணத்தால் இனிமை காண்பீர்கள்.

**இடபம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பெண்கள் முக்கிய வீட்டு உபயோகப் பொருளை வாங்குவர். ஆரோக்கியம் பலம் பெறும்.

**மிதுனம்:** முன்யோசனையுடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில், மிதமான லாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் விடாமுயற்சி தேவை.

**கடகம்:** நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் உயரும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**சிங்கம்:** எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறை, சரி செய்ய முயல்வீர்கள். மிதமான லாபம் கிடைக்கும். மின்சார உபகரணங்களைக் கவனமாகக் கையாளவும்.

**கன்னி:** குடும்பத்தினரின் ஆதரவு கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய சாதனை உருவாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருளை வாங்குவர்.

**துலாம்:** பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள், பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.

**விருச்சிகம்:** லட்சிய நோக்குடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், கூடுதல் உழைப்பால் ஆதாயம் அடைவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். பெண்கள், விலை மதிப்புள்ள பொருள்களை கவனத்துடன் பயன்படுத்தவும்.

**தனுசு:** சிலர், சுயலாபத்திற்காக உங்களுக்கு உதவ முன்வருவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண்களுக்கு, தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும்.

**மகரம்:** புதிய விடயங்களை அறியும் ஆர்வம் உண்டாகும். வாகனப் பயணத்தில் இனிமை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**கும்பம்:** உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள், பாராட்டு, வெகுமதி பெறுவர்.

**மீனம்:** செயலில் தடுமாற்றம் ஏற்படலாம் கவனம். தொழிலில் இலக்கு நிறைவேற, கூடுதல் அவகாசம் தேவைப்படும். லாபம் சுமார். திடீர் செலவால், கடன் வாங்க நேரிடலாம். மனைவி உதவிகரமாக நடந்து கொள்வார்.

அழகி Retweeted
**பத்மஸ்ரீ Dr.கிங்** @rajaa_
நிம்மதியா உக்காரப் போகும் போது பின்னாடி இருந்து நாற்காலிய இழுத்து விழ வச்சுட்டு கெக்க பெக்கன்னு சிரிக்கிறது வாழ்க்கை... உஸ்ஸ்ஸ்
17

மனைவி நேரதாமதமாக வீட்டுக்கு வந்தாள்.. நேராகப் படுக்கை அறைக்குச் சென்றாள்... அங்கே,

போர்வைக்கு வெளியே 4 பாதங்கள் தெரிந்தன. உடனே ஆத்திரத்துடன் கிரிக்கெட் மட்டையை எடுத்து தனது ஆத்திரமும், அலறல் சத்தமும் தீரும் வரை அடித்தாள்.



அடித்துவிட்டு சமையலறைப் பக்கம் போனாள்...

அங்கே... காப்பி குடித்தபடி கணவர் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார்... மனைவியைக் கண்டதும்...

உங்க அப்பா அம்மா வந்திருந்தாங்க... நான் எமது படுக்கை அறையை அவர்களுக்கு கொடுத்து விட்டேன் என்றார்.


## உங்கள் வியாழ மாற்றம் எப்படி?

மேட ராசி



நண்பன் எண்டு ஒரு பயலையும் சேர்க்காத, இப்படி கொண்டு வந்து நிக்க வைப்பாங்க

இடப ராசி



ஜீன்சுக்கு மேல ஜட்டி போட்டா தான் ஜெயிக்க முடியும்னா நீ போட்டு தான் ஆகனும் அந்த அளவுக்கு உனக்கு இருக்கு

கடக ராசி



சொந்தகாரனை வீட்டு பக்கம் சேர்க்காத

மிதுன ராசி



பிரச்சினை ஆட்டோல போனா கூட வரும், அதுனால எஸ்கேப் ஆகி ஓடிடு

# சினிமாவுக்கு வரும் வாரிசு நடிகை லவ்லின்



தமிழ் சினிமா உலகத்துக்கு புதிதாக ஒரு வாரிசு நடிகை வரப்போகிறார். அவர் வேறு யாருமல்ல 'தில்லுமுல்லு' படத்தில் அறிமுகமான விஜி சந்திரசேகரின் மகள் லவ்லின்.

சகோதரி நடிகைகள் சரிதாவும் விஜியும் பல எண்ணற்ற படங்களில் நடித்து அனைவரின் அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்ற இவர்களின் குடும்பத்திலிருந்து மேலும் ஒரு புதிய இளமை ததும்பும் கதாநாயகி அறிமுகமாகவுள்ளார். அவர் பெயர் லவ்லின்

லவ்லின் ஒரு பைலட் ஆக வேண்டும் என்பது தந்தையின் விருப்பம். சந்திரசேகர் பைலட் என்பதால் அந்த ஆசை இருந்தது. ஆனால் சிறு வயது முதலே நடிப்பின் மேல் உள்ள ஈர்ப்பால் கதாநாயகியாக உருவாகவேண்டும் என்ற ஆசை ஏற்பட குடும்பத்தினரின் சம்மதத்துடன் தற்போது தமிழ் சினிமாவில் அறிமுகமாகிறார் லவ்லின்.

லவ்லின் விரைவில் பெயரிடப்படாத ஒரு புதிய படத்தில் கதாநாயகியாக நடிக்கவுள்ளார். லவ்லின் கதாநாயகியாக நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு ஒக்டோபர் மாதம் தொடங்கவுள்ளது. இந்தப் படத்தின் மற்ற நடிகர் நடிகையர் உள்ளிட்ட இதர தகவல்கள் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளிவரும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | 6 | | |
| | | | | 8 | 5 | 7 | | |
| | 8 | | | | | | | |
| 1 | | 5 | | 9 | | 3 | | 8 |
| 6 | | | 1 | | | | | 7 |
| 8 | | | 2 | | | 9 | | |
| | | | | 7 | | 8 | 5 | |
| | 4 | | | | | | | |
| | 9 | | | | | | | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 1 | 4 | 3 | 8 | 5 | 2 | 9 |
| 3 | 5 | 4 | 6 | 9 | 2 | 8 | 1 | 7 |
| 9 | 8 | 2 | 5 | 7 | 1 | 3 | 4 | 6 |
| 4 | 6 | 3 | 9 | 8 | 5 | 1 | 7 | 2 |
| 2 | 1 | 5 | 7 | 6 | 3 | 9 | 8 | 4 |
| 7 | 9 | 8 | 1 | 2 | 4 | 6 | 5 | 3 |
| 1 | 3 | 7 | 8 | 4 | 6 | 2 | 9 | 5 |
| 5 | 2 | 9 | 3 | 1 | 7 | 4 | 6 | 8 |
| 8 | 4 | 6 | 2 | 5 | 9 | 7 | 3 | 1 |

## சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் [illegible]. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 150 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 1000 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 600 | 450 |
| சுறா | 500 | 800 | 600 | 800 | 1000 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 600 | 400 | – | 400 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 500 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 200 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 300 | – | – | 400 | 200 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 300 | – | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 150 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | – | 200 |
| மதனம் | 150 | 200 | 180 | 400 | 350 | – | 350 |
| கொய் | 100 | 200 | 60 | 70 | 80 | – | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 500 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 400 | – | – |




## இது புதுசு

ஆண்களுக்கான பக்கிள் சப்பாத்துகள் அறிமுகமாகியுள்ளன. பழையகால வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள தோல் சப்பாத்துக்களில், பக்கிள் இணைத்து, உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை ஆயிரத்து 800 ரூபாவில் இருந்து, 2 ஆயிரத்து 300 ரூபா வரை.

## நாளை

ஆடி-21
வெள்ளிக்கிழமை
-05.08.2016
திதி: திருதியை
பி.இ.03.39 வரை
நட்சத்திரம்: பூரம்
பி.இ.06.03
ராகுகாலம்:
10.34-12.04 வரை
சுபநேரம்:
06.04-07.34 வரை
ஆடிப்பூரம்

## பாட்டி வைத்தியம்

- பச்சைக் கர்ப்பூரத்துடன் புதினா (பூட் சிட்டியில் கிடைக்கும்) இலைச் சாறைக் கலந்து மூட்டுவலி உள்ள இடத்தில் தடவி வர மூட்டுவலி குணமாகும்.
- தோலில் உள்ள கரும்புள்ளிகளின் மேல் தக்காளிப் பழத்தைத் துண்டாக்கிக் தேயுங்கள். அதில் உள்ள அமிலம் கரும்புள்ளிகளைக் கரைத்துவிடும்.
- கருவுற்ற மகளிர் நெல்லிக்காய், முருங்கைக் கீரை, முள்ளங்கி ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொண்டால் கை, கால், முகம், பாதம் வீக்கம் வராது. குழந்தைப் பேறு எளிதாக அமையும்.
- தக்காளி, கோஸ், கரட் ஆகியவற்றைச் சாப்பிட்டால் முகச் சுருக்கம் நீங்கும்.
- கசகசாவை நைசாக அரைத்து குழந்தையின் தொப்புளைச் சுற்றித் தடவினால் குழந்தையின் அழுகை நின்றுவிடும்.

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 80 | 120 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 100 | 100 | 70 | 100 | 80 | 80 | 90 | 80 |
| கரட் | 150 | 160 | 160 | 180 | 140 | 180 | 110 | 100 |
| மரவள்ளி | 100 | 90 | 80 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 150 | 180 | 100 | 120 | 200 | 140 | 200 | 100 |
| பாகல் | 200 | 220 | 320 | 240 | 200 | 160 | 240 | 200 |
| கருணைக்கிழங்கு | 180 | 120 | 160 | 180 | 100 | – | 75 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 200 | 80 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 60 | 100 | 90 | 70 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 | 80 | 100 | 70 | 100 |
| தக்காளி | 100 | 100 | 80 | 100 | 80 | 150 | 120 | 70 |
| வாழைக்காய் | 100 | 120 | 60 | 120 | 80 | 80 | 70 | 50 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 30 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 400 | 500 | 400 | 400 | 600 | 400 | 400 |
| புடோல் | 70 | 80 | 70 | 60 | 60 | 80 | 70 | 60 |
| கோவா | 150 | 40 | 130 | 140 | 120 | 80 | 90 | 120 |
| வெண்டி | 60 | 60 | 40 | 80 | 60 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 180 | 200 | 160 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 80 | 160 | 100 | 200 | 90 | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 20–30 | 40 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 80–100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 140 | 100 | 120 | 100 | 200 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 200 | 350 | 240 | 200 | 200 | 200 | 170 |
| இராசவள்ளி | 160 | – | – | 250 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 400 | 150 | 100 | 200 | 100–120 | 400 | 200 | 120 |

## காரசாரமான நண்டுக் குழம்பு



**தேவையான பொருள்கள் :**
கடல் நண்டு 3 (சுத்தம் செய்தது 10 துண்டுகள்)
வெங்காயம் 2 பெரியது (பொடியாக அரிந்தது)
தக்காளி 3 பெரியது (பொடியாக அரிந்தது)
இஞ்சி-பூண்டு விழுது 1 மேசைக்கரண்டி
பச்சை மிளகாய் - 4
மஞ்சள்தூள் - 1/2 தேக்கரண்டி
மிளகாய்த்தூள் - 2 மேசைக்கரண்டி
மல்லித்தூள் - 1 மேசைக்கரண்டி
கரம்மசாலா தூள் - 1 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - 4 மேசைக்கரண்டி

**மசாலா அரைக்க**
தேங்காய்த் துருவல் - 1/2 கப்
கசகசா - 1 மேசைக்கரண்டி
மிளகு - 1 மேசைக்கரண்டி
சோம்பு - 1 தேக்கரண்டி

**செய்முறை**
நண்டை நன்றாகச் சுத்தம் செய்து கழுவி வைக்கவும். மிக்சியில் வெங்காயம், தக்காளி, பச்சைமிளகாய் ஆகியவற்றைச் சேர்த்து அரைத்துவைக்கவும். சட்டியில் எண்ணெய் ஊற்றி கொதித்ததும் அரைத்து வைத்துள்ள விழுதை சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். அந்தக் கலவையில் இஞ்சி-உள்ளி விழுதை சேர்த்து மிளகாய்த் தூள், மல்லித் தூள் மற்றும் கரம்மசாலா தூளைச் சேர்த்து அதை நன்றாக எண்ணெய் பிரியும் வரை தேவையான அளவு உப்பையும் சேர்த்து 30 நிமிடம் வரை மீண்டும் வதக்கவும்.

அதன் பின் அந்த வதக்கலில் சுத்தம் செய்யப்பட்ட நண்டுத் துண்டங்களையும் மசாலாக் கலவையையும் சேர்த்து ஒன்றாக கலக்கி வதக்கவும்.
மிக்சியில் தேங்காய் துருவ[illegible] கசகசா, மிளகு மற்றும் சோம்[illegible] சேர்த்து தண்ணீர் விட்டு [illegible] அரைத்துக் கொள்ளவும்.
அரைத்த இந்த கலவையை ந[illegible] மசாலாவில் சேர்க்கவும். நன்[illegible] கலக்கி மூடி வைத்து சிறு தீயில் [illegible] விடவும் அதன் பின்னர் கொ[illegible] மல்லி இலைகளை தூவவும். வெந்ததும் இறக்கி விட்டு சாதத்து[illegible] பரிமாறலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கொமர்ஷல் வங்கியின் நெல்லியடி கிளையினரின் ஏற்பாட்டில், அருணலு சேமிப்புக்கணக்கைப் பேணும் மாணவர்களிடைய நடத்தப்பட்ட போட்டியில், வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நிகழ்வின் பதிவுகள். நிகழ்வின் விருந்தினர்களாக கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.யோகநாதன், கொமர்ஷல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ஜோய் நிக்கிலஸ் மற்றும் நெல்லியடி கிளை முகாமையாளர் அ.ஜெயபாலன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.
(ரி - 2, 109)

# பசுமை பேணுதல் மூலம் சூழலைக்காக்க வேண்டும்

சாவகச்சேரி ஓக.04
'பசுமையை நிறைவாகப் பேணும் சூழலை சிறந்த முறையிலே பாதுகாக்கவும், நாட்டில் காகித உற்பத்திக்கென வெட்டப்படும் மரங்களின் எண்ணிக்கையை நாங்கள் குறைவடையச் செய்ய வேண்டும்' என வலியுறுத்தியுள்ளார் சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் திருமதி சுஜாதா நேதானந்தன்.

இலங்கை வங்கியின் 77 ஆவது ஆண்டு கால சேவை நயப்பின் நிறைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டு, தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு இலங்கை வங்கியானது தனது காகிதப் பயன்பாட்டின் தேவைகளை கணிசமான அளவு குறைத்து, வாடிக்கையாளர்களின் தேவைகளை விரைந்து முழுமை செய்யக்கூடிய இலத்திரனியல் சாதனங்களைப் பொருத்தவுள்ளது.

இந்த நடைமுறைகளின் அறிமுகப்படுத்தல் என்பது வாடிக்கையாளர்களின் கடுதாசியினாலான படிவங்களின் பாவனையை இல்லாமல் செய்து, மக்கள் தாமாக பணத்தை வைப்பிலிடவும் மீளப் பெற்றுக்கொள்ளவும் வசதிகளை ஏற்படுத்தும்.

இதற்கு ஏதுவாக வங்கியானது மேற்றரக் கிளையாக விரைவில் மாற்றமுறவுள்ளதுடன், பிரதேச மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கவுள்ளது. மக்கள் கருமபீடங்களில் காத்திருக்காமல் உடனுக்குடன் தமது தேவைகளை முழுமை செய்து கொள்ளமுடியும். வாடிக்கையாளர்கள் தமது வங்கிப் புத்தகத்துடன் வருகை தந்து, தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

இலங்கை வங்கியானது இலாபத்தை மட்டும் கருத்தில் கொள்ளாது, நாட்டின் அபிவிருத்திக்கும் முழுமையான பங்களிப்பை வழங்கி வருகிறது. அபிவிருத்தி சார்ந்த கடன்களை வழங்கி சமூகப் பொறுப்புடன் செயற்பட்டு வருகிறது. 2009ஆம் ஆண்டு தொடக்கம் புனர்வாழ்வு பெற்ற போராளிகளுக்கு கடன்களை வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சேவை வழங்கலிலும் வெற்றியும் பெற்றுள்ளது.

கடந்த 77 வருட காலத்தில் 11 மில்லியன் வாடிக்கையாளர்களைக் கொண்டு, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சிறப்பான சேவைகளை மேற்கொண்டு, பெருமையுடன் திகழ்ந்து வருகிறது. சாவகச்சேரி கிளையானது 37 வருடங்களுக்கு முன்னர் முதலாவது வங்கிக் கிளையாக இங்கு உருவாக்கம் பெற்று, பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் தன்னாலான முழுமையான பங்களிப்பை, பிரதேச மக்களுக்கு வழங்கியுள்ளது என்பதை தினமும் வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்களைக் கொண்டு கணிப்பிடமுடிகிறது. இதற்கு முன்னர் இந்தப் பிரத்தியேகக் கிளையில் பணியாற்றிய முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பிரதேச மக்களின் வாழ்வாதார செயற்பாடுகளை மேம்படுத்த வழங்கிய சேவைகளால் முன்னிலையில் உள்ளது - என்றார்.
(ரி - 2)

# முறிகள் தொடர்பான பதிலறிக்கை ஒப்படைப்பு கணக்காளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவிப்பு

**வணிகம்**

இலங்கை மத்திய வங்கியின் முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கணக்காளர் நாயகம் மேற்கொண்ட விசாரணை குறித்து, மத்திய வங்கியின் பதில் அறிக்கை கணக்காய்வாளர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது கடந்த மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மத்திய வங்கி அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்டதாக கணக்காளர் நாயகம் காமினி விஜே சிங்க தெரிவித்தார்.

இந்த பதிலறிக்கை தொடர்பிலான முதற் பிரதி கோப் குழுவிடவும் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அறிக்கையை விரிவான ஆய்வுக்கு உட்படுத்தவுள்ளதாகவும், அது தொடர்பில் கண்டு கொள்ளப்படும் உண்மைகளின் அடிப்படையிலே அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.
(ரி - 2)



CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

3/8/2016
www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | ↑ 8.28 | 6,511.58 | 6,503.30 |
| S&P SL20 | ↑ 4.45 | 3,534.12 | 3,529.67 |
| வியாபாரப்புரள்வு | | 1,410,032,128 | 1,001,844,736 |
| உள்நாட்டு - கொள்வனவு | | 922,875,264 | 655,845,312 |
| விற்பனை | | 946,980,288 | 799,139,840 |
| வெளிநாட்டு - கொள்வனவு | | 487,156,832 | 345,999,392 |
| விற்பனை | | 463,051,808 | 202,704,864 |



| அதிகூடிய பங்குப்புரள்வு | [illegible] | இறுதி விலை | [illegible] | [illegible] (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 145 | 2,557,171 | 371,038,611 |
| ஷெவ்ரோன் லூப்ரிக்கன்ட்ஸ் | LLUB.N | 164.9 | 1,462,514 | 241,348,749 |
| டிஸ்டிலரிஸ் | DIST.N | 271.1 | 337,158 | 94,859,439 |
| அலுமெக்ஸ் | ALUM.N | 19 | 2,898,983 | 54,770,491 |
| சம்பத் வங்கி | SAMP.N | 245 | 191,062 | 46,779,766 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 217 | 206,829 | 44,859,643 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 85 | 488,663 | 41,108,278 |
| லாஃப்ஸ் கிஸ் | LGL.N | 39.4 | 921,900 | 36,399,865 |
| செலான் வங்கி | SEYB.X | 66.5 | 540,477 | 35,968,621 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 139.1 | 240,238 | 33,351,234 |

அறிவித்தல்கள் - பங்குலாபம்
ஈ பி கிரேஸ் & கம்பெனி - பங்கு ஒன்றிற்கு Rs. 30.00
களனி டயர் (TYRE) - பங்கு ஒன்றிற்கு Rs. 2.50
ஏசில் கேபில் (ACL) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.50
ஷெவ்ரோன் லூப்ரிக்கன்ட்ஸ் (LLUB) - பங்கு ஒன்றிற்கு Rs. 3.00

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தல் | 218 |
| [illegible] | 13.3 |
| [illegible] | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

## நுட்பம்

### விலை குறைந்த கைபேசிகளை வெளியிடவுள்ளது ரிங்கிங் பெல்

கைத்தொலைபேசி தயாரிப்பு நிறுவனமான ரிங்கிங் பெல், விரைவில் 65 ஆயிரம் விலை குறைந்த அறிதிறன் கைபேசிகளை வடிவமைத்து வெளியிடவுள்ளது என்று அறிவித்துள்ளது. தமது தொழில்நுட்ப தயாரிப்பு மீதான ஆவல் மக்களிடம் அதிகரித்துள்ளதால் புதிய தயாரிப்புக்கள் வெளியிடவுள்ளன என்று ரிங்கிங் பெல் தெரிவித்தது.

இதுவரை சிறந்து விளங்கும் பிரிடம் 2512 தொடுதிரைக் கைபேசிகளை அதிகமாகத் தயாரிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.



இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர், இணையத்தில் முன்பதிவின் மூலமாக பணம் கட்டிய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் கைபேசியை வழங்க முடிவு செய்துள்ளோம். நாம் அடுத்தக்கட்டமாக 65 ஆயிரம் கைபேசிகளை வழங்க முடிவு செய்துள்ளோம்.

இதற்காக தீவிர முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். பிரிடம் 2512 கைபேசி குறித்து இதுவரை எந்த குறைபாடுகளையும் வாடிக்கையாளர்கள் தெரிவிக்கவில்லை. இதன் அடுத்த விற்பனைக்கான முன்பதிவு விரைவில் ஆரம்பமாகும் – என்றார்.

### பால்வீதி உருவானதை கண்டுபிடிப்பதில் சிக்கல்

அண்டவெளியில் எமது பால்வீதி எப்படி உருவானது என்பதை கண்டுபிடிப்பதில் சிக்கல் நீடிக்கின்றது என்று டோக்கியோ பல்கலைக் கழகத்தின் விண்வெளி ஆராய்ச்சி துறை விஞ்ஞானிகள் தெரிவித்தனர். பால்வீதியின் மையத்தை சுற்றியுள்ள அகண்ட உள் பகுதிகளில் இளம் நட்சத்திர சுவட்டங்கள் இல்லாத காரணத்தாலேயே இந்த சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அண்டவெளியில் உள்ள பால்வீதி சுழல் வடிவில் அமைந்துள்ளது. அதில் சூரியனை மையமாகக் கொண்டு 26 ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. இந்த நட்சத்திரங்கள் அனைத்தும் நமது சூரியனைவிட இளமையானவை. குறிப்பிட்ட கால அளவில் இவை ஏறி இறங்கி மின்னும் தன்மை கொண்டவை. அதை வைத்து அதன் தூரத்தை விஞ்ஞானிகள் கணக்கிடுகின்றனர்.

ஆனால் பால்வீதியின் உள் இருக்கும் நட்சத்திரங்களைக் கண்டுபிடிப்பதில் தொடர்ந்து சிக்கல் நீடிக்கிறது. அண்டவெளியில் இருக்கும் தூசுகள், அந்த நட்சத்திரங்களின் மின்னும் ஒளியை மறைத்து விடுவதுதான் இதற்குக் காரணம்.

அந்த நட்சத்திரங்களைக் கண்காணிப்பதற்காக அகச்சிவப்பு தொலைநோக்கி ஒன்று தென்னாபிரிக்காவில் நிறுவப்பட்டது. இந்த தொலைநோக்கி மூலம் ஆராய்ந்த போதும் பால் வீதியின் உள்ளேஇளம் நட்சத்திரங்கள் எதுவும் தென்படவில்லை என கூறப்படுகிறது.



"நமது பால்வெளியின் உள்ளே இளம் நட்சத்திரங்கள் ஏதும் இல்லாமல் இருண்டு கிடக்கிறது. கோடிக்கணக்கான ஆண்டுகளாக அங்கு எந்தவொரு நட்சத்திரமும் உருவாகவில்லை – என்றார் டோக்கியோ பல்கலைக்கழகத்தின் விண்வெளி ஆராய்ச்சிதுறை விஞ்ஞானிநோரியூகி மட்சுனகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றம்

களம் வழக்குத் தாக்கல் செய்திருப்பது, அது ஓர் இனத்துக்குச் சார்பாக மட்டுமே செயற்படுகின்றதைக் காட்டுகின்றது என்று தமிழ் மீனவர்கள் தரப்பில் நீதிமன்றில் முற்பட்ட மூத்த சட்டத்தரணிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பேப்பாரைப்பிட்டி தொடக்கம் கொக்கிளாய் வரை சட்டத்தை மீறி பலர் வாடி அமைத்துள்ள போதும், அவர்களை விட்டு, அனுமதி பெற்று வாடி அமைத்தவர்களுக்கு எதிராக கடற்றொழில் திணைக்களம் முறைகேடாக வழக்குத் தாக்கல் செய்துள்ளது என்று சட்டத்தரணிகள் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து, பிரதேச செயலருடன் கலந்துரையாடி குறித்த பகுதி முறையாக யாருக்கு வழங்கப்பட்டது என்று மன்றுக்குத் தெரிவிக்குமாறு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

கொக்கிளாய் சென். அன்ரனி கடற்றொழிலாளர் சங்கம் அனுமதியற்ற வகையில் வேறு ஒருவரின் கரைவலைப் பாடு எல்லைக்குள் வாடி அமைத்துள்ளதாக அந்தச் சங்கத்தின் 11 பேருக்கு எதிராகவே மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தினால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கு நேற்று மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சங்கத்தின் 11 பேர் சார்பில் சட்டத்தரணிகள் சாரங்கி, ராதிகா, கனேஸ்வரன், சுதர்சன் ஆகியோருடன் மூத்த சட்டத்தரணிகளான பரஞ்சோதி மற்றும் அன்ரன் புனிதநாயகம் ஆகியோர் முன்னிலையாகினர்.

"பிறருக்கு வழங்கிய கரைவலைப் பாட்டு எல்லைக்குள் குறித்த சங்கம் வாடி அமைத்து படகுக் கட்டுமானத்தை ஏற்படுத்தவில்லை. பிரதேச செயலாளரினால் எல்லைகள் குறிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட நிலத்திலேயே மேற்படி சங்கத்தினர் வாடி அமைத்துள்ளனர். சங்கமானது கரைவலைத் தொழிலில் ஈடுபடவில்லை'' என்று சட்டத்தரணிகள் மன்றுக்குச் சுட்டிக்காட்டினர்.

திணைக்களத்தினால் கூறப்படும் கரைவலைப்பாடு யாருடையது என்பதனை உறுதி செய்யுமாறு மன்று கோரிய வேளையில், திணைக்களம் சார்பில் அதற்கான சான்று முன்வைக்கப்படவில்லை. பிரதேச செயலாளர் வழங்கிய இடத்தில் மீனவ சங்கம் தனது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு என்ன தடையாகவுள்ளது எனவும் மன்று கோரியது. அது தொடர்பில் ஆராய்ந்து பதில் அளிப்பதாக திணைக்களத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

"முல்லைத்தீவு மாவட்டத்தின் பேப்பாரைப்பிட்டி முதல் கொக்குளாய் வரைக்கும் சட்டத்தை மீறிய வகையில் பலர் வாடி அமைத்துத் தொழில் புரிகின்றனர். அவர்கள் கட்டடங்களும் கட்டியுள்ளனர். அங்கு சட்டத்தை மீறியவர்களை விட்டு, அனுமதி பெற்ற மீனவர்களுக்கு எதிராகக் கடற்றொழில் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இது பாரபட்சமாக ஓர் இன மக்களுக்கு மட்டும் சார்பாக திணைக்களத்தினர் நடக்கின்றனர் என மன்றின் கவனத்திற்கு தெரியப்படுத்தினோம்'' என்று சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தெரிவித்தார்.

திணைக்களத்தினால் கூறப்படும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருடன் இது தொடர்பில் ஆராய்ந்து, குறித்த பிரதேசம் முறையாக யாருக்கு வழங்கப்பட்டது என்ற விவரத்தினை பெறுமாறு திணைக்களத்தினருக்கு மன்று அறிவுறுத்தியது. வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(உ-வ-4,10)

## ஒளிப்பட

ரட்ணம், கடந்த 3 தசாப்தங்களாக ஒளிப்படத்துறைக்கு தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர். கடந்த 6 வருடங்களுக்கு மேலாக உதயனின் ஒளிப்பட ஊடகவியலாளராகக் கடமையாற்றிவந்தார். அவரது இறுதிக்கிரியைகள் கச்சேரியடியிலுள்ள அவரது வீட்டில் இன்று வியாழக்கிழமை காலை இடம்பெறும். தகனக்கிரியைக்காக அவரது உடல் முற்பகல் 10 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

யாழ். கச்சேரியடியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் அவர் படுகாயமடைந்தார். அவர் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிளும் எதிரே பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸும் மோதியதனால் விபத்து ஏற் பட்டது. உடனடியாக அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவினால் அவர் உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. அவரது பிடரியில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இடதுபுற விலா எலும்பும் முறிந்தது. விபத்தில் சிக்கிய பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(உ-4)

## தாஜுதீன்

இவற்றில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து சில அழைப்புகள் வந்துள்ளமை உறுதிசெய்யப்பட்டதாகவும், இது குறித்து தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தாஜுதீன் கொலை வழக்கில் முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் முன்னாள் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வசீம் தாஜுதீனின் சர்ச்சைக்குரிய உயிரிழப்புத் தொடர்பில் சாட்சிகளை மறைக்க முற்பட்டதாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. அவர்களின் மறியல் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

இதேவேளை, தாஜுதீன் கொலை வழக்குடன் தொடர்புடையதாக கூறப்படும் சீ.சீ.ரி.வி. காணொளிக் காட்சிகளைப் பரிசீலனை செய்வதற்கு புலனாய்வுத்துறை அதிகாரிகள் இருவர் கனடாவுக்கு செல்லவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம்நேற்று நீதிமன்றத்திடம் அறிவித்தது.

(வ-4)

## மரண அறிவித்தல்

### கந்தையா திருச்செல்வம்



தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருச்செல்வம் 01.08.2016 திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அம்மாக்குட்டி தம்பதியரின் மகனும் வள்ளிநாயகியின் கணவரும் துசியந்தி, துஸாந்தி, துசியந்தன் ஆகியோரின் தந்தையும் சச்சிதானந்தம், சிவஞானம், நேசமணி, வசந்தாதேவி, ராசாம்பாள்(வீசி), ராசாத்தியம்மா, கௌரிதேவி, அருமை நாயகம் ஆகியோரின் சகோதரரும் சந்திரமதி, கந்தசாமி, சிவசுப்பிரமணியம் (குஞ்சர்), மனோன்மணி, அரசரத்தினம் ,காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், மகேந்திரம் மற்றும் கனகராணி ஆகியோரின் மைத்துனரும் கிருபாகரன், கல்பனா ஆகியோரின் அன்பு மாமனாரும் துகிர்தா, பிரகலாதன், தமிழேந்தி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2016) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். அன்றைய தினம் தச்சன்தோப்பு சகோதரி வீட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி.

தகவல்:
செ. சிவசுப்பிரமணியம் (குஞ்சர்)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா தருமலிங்கம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தருமலிங்கம் 01.08.2016 திங்கட்கிழமை கால மானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இரத்தின பூபதியின் பாசமிகு கணவரும் ஜெகதீஸ்வரன் (கனடா), ஜெகதா, ஜங்கரன் (சுவிஸ்), ஜெகதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நிசாந்தினி (கனடா), பாலச்சந்திரன் (பாலன் சேவிஸ் ஸ்ரேசன்),ரஜிதா(சுவிஸ்), சதீஸ்குமார் (றிக்கோ ஐஸ்கிறீம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வரதராசா, பாலசிங்கம், கனகேஸ்வரி , தில்லைச்சிவம், தனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விஜயலக்சுமி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற தேவராசா மற்றும் வசந்தகுமாரி, ஸ்ரீஸ்கந்தராசா அன்னலட்சுமி, நவரத்தினம், விஜயலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜானுசா, ஜனுயன், கிசான்(கனடா), டிலக்சனா, பிரவிந், லஜந்தன், சஜிதன், கஸ்விகா (சுவிஸ்), இசானிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை சின்னராசா

பிறப்பு 24 . 04 . 1930



இறப்பு 01 . 08 . 2016

உடுவில், சங்குவேலியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை சின்னராசா (01.08.2016) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நாகநாதர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி முருகேசு தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, பத்தினிப்பிள்ளை, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி (இலங்கை), காலஞ்சென்ற பரமானந்தன் மற்றும் நடேசபுரன்(நோர்வே), சகுந்தலா(நோர்வே), இராஜேஸ்வரி(நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகேஸ்வரன் (இலங்கை),மலர் (இலங்கை), மீரா (நோர்வே), ஜோர்ஜ்ஜெயராஜா (நோர்வே), பிரகாஷ்(நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியும் மைதிலி (லண்டன்),ஜனன்(லண்டன்), பிரியந்தி(ஆஸ்திரேலியா), மதுஷன்(அபுதாபி), யசோதரன்(இலங்கை), மிதுன்(நோர்வே), அரவிந்(நோர்வே), ரம்யா(நோர்வே), பென்ஜோ (நோர்வே), அனோஜன்(நோர்வே), அனுக்ஷி (நோர்வே), காலஞ்சென்ற கிரிஷான்(நோர்வே) ஆகியோரின் ஆருயிர் பேர்த்தியும் கேஷவி, ராகவி, அக்ஷவி, யொகன்சா, சஞ்சய், ஆரஜன், அபிநயா, அகரன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.08.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கம்புலவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"மிதிலை", டச்சுவீதி, உடுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
நாகேஸ்வரி-மகேஸ்வரன்: 021 224 0857
நடேசபுரன்: 004 792 245 318, சகுந்தலா: 004 796 876 551,
ராஜி: 004 748 654 420

### திருமதி செல்வராணி பஞ்சாட்சரம்

பிறப்பு 06 . 05 . 1941



இறப்பு 03 . 08 . 2016

நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி பஞ்சாட்சரம் நேற்று (03.08.2016) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கந்தையாச் செட்டியார் பஞ்சாட்சரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ் சென்றவர்களான கந்தையா வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் சிறிகுமார் (லண்டன்), வசந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயராணி, பகிரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஷோபனா, பாரதி, சதுர்சன், ஜனார்த்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம், யோகராசா, தனலட்சுமி, காலஞ்சென்ற தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆறுமுகம் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05.08.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் இல. 628/5, நாச்சிமார் கோயிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

628/5, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(N/98)
(12,18)

தகவல்:
சிறிகுமார் (மகன்)
வசந்தி (மகள்)

**0766887322, 0213218574**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

அரைக்கும் ஆலை வேலையில் அனுபவம் உள்ளவர், பழக விரும்புபவர், பில்கிளார்க், பொதி செய்பவர், உதவியாளர் (பெண்கள்) தேவை. **தொடர்பு:- 179, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் - 077 1746101**

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகர சபை

01. யாழ்ப்பாணம் மாநகர சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காணப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலை நாள்களில் காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை 18.08.2016 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை பூரணப்படுத்தி ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து 05.08.2016 ஆம் திகதியில் இருந்து 18.08.2016 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 + வற் இனைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

04. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர் மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 19.08.2016 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக சமர்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| துரையப்பா விளையாட்டரங்குப் பராமரிப்புச் சேவைத் தேவைப்பாடுகள் | தேவைப்படும் மனித வலு | மனித வலு ஒன்றிற்கான கூலி | மொத்தம் |
|---|---|---|---|
| * பிரதான மைதான புற்கள் வெட்டுதல், துப்புரவு செய்தல், பசளையிடல், கிருமிநாசினி விசுறுதல் மற்றும் நீர் விசுறுதல்(02 தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுவர், இவர்களிற்கு புல்லு வெட்டும் இயந்திரம் இயக்கக்கூடிய அனுபவம் மற்றும் பசளை கிருமிநாசினி விசிறும் அனுபவம் இருத்தல் வேண்டும்.)<br>* பிரதான அரங்கில் உள்ள இருக்கைகள் முக்கிய பிரமுகர்களுக்குரிய கண்ணாடி அறையின் கண்ணாடி, தளப்புரப்பு, அறைகள் என்பன ஒவ்வொரு நாளும் துப்பரவு செய்தல்.<br>* மேற்குப்புற அரங்கில் உள்ள இருக்கைகள், தளப்பரப்பு மற்றும் அமைப்புக்களைத் துப்புரவு செய்தல்.<br>* உள்ளக விளையாட்டரங்கு தளப்பரப்பு, அமைப்புக்கள் மற்றும் விளையாட்டரங்கில் உள்ள மலசலகூடங்களைத் துப்புரவு செய்தல்.<br>* பிரதான மைதானம் (வெளிப்புற வடிகாலுக்குள்) தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள புற்களை வெட்டல் மற்றும் நீர் விசுறுதல். | 6 (பிரதான மைதான புற்கள் வெட்டுதல், துப்புரவு செய்தல், பசளையிடல், கிருமிநாசினி விசுறுதல் மற்றும் நீர் விசுறுதல் என்பவற்றிற்கு ஒதுக்கப்பட்ட 02 தொழிலாளர் தவிர) | | |
| * மேற்பார்வை உத்தியோகத்தர். | 1 | | |

தலைவர்/ஆணையாளர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
04.08.2016

## SHARMILA TRAVELS & TOURS (Pvt) LTD.

**எமது நிறுவனத்திற்கு கீழ்க் காணும் பதவிகளுக்கு ஊழியர்கள் தேவை.**

1. Ticketing Staff (3வருட அனுபவமுள்ளவர்கள்)
2. Administrative officer
3. Cashier (Female)

அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்கள், திகதிமாற்றம், பல்வேறு நாடுகளுக்கான விசா சேவைகள் மற்றும் பயணக் காப்புறுதிகள் என்பவற்றை ஒரே இடத்தில் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்

**'சர்மிளா ரவல்ஸ்'**

எமது நிறுவனத்தில் சர்வதேச விமானகற்கை நெறியினை தொடர விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். இக்கற்கை நெறி 3 மாதங்களை உள்ளடக்கியதாகும். கற்கைநெறி கட்டணம் 30,000/- மட்டுமே உங்களது சுயவிவரக்கோவையினை pettah@sharmilatravels.com என்ற மின்னஞ்சல் முகவரியினூடாக அனுப்பி வைக்க முடியும். மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ள 077 7881656 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**கீழ்க்காணும் நாடுகளுக்கான விசா விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து தரப்படும்.**

LONDON
GERMANY
ROME
PARIS
AUSTRALIYA
CANADA
SWISS
NEWZELAND
NORWAY

* புலம்பெயர்ந்து இருக்கும் இலங்கையருக்கு இரட்டை விசா பெறுவதற்கான குடியுரிமை ஆலோசனைகள் வழங்கப்படும்.

**மேலதிக விவரங்களுக்கு**

**077 7881656**

**VISA Services**

INDIA
THAILAND
MALAYSIA
INDONESIA
CHINA
VIETNAM
QATAR
UAE
AND
MANY MORE

**மேலதிக தகவல்களுக்கு**
[illegible], ஸ்[illegible]லி வீதி, யாழ்ப்ப[illegible]
[illegible]2220266, 077 7[illegible]

## அறிவித்தல்

### பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வடக்கு மாகாணம்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு - 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (தமிழ் மொழி மூலம்) - 2016 (II)

தமிழ் / சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 31.08.2016 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk ⟶ Recruitment and Exam ⟶ Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆள்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**ரு.வரதலிங்கம்**
**செயலாளர்,** (சி.24512) (13.17.18)
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.**

**ஒக்டோபரில்** என்றும் அவர் குறிப்பிட்டார்.

"கூகுள்பலூன்ஊடாக வைபை இணைய சேவையைவழங்கும் நடவடிக்கையை நாம் முன்னெடுத்து வருகின்றோம். பலூன்களை நிலை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. வலையமைப்புகளில் இருக்கின்ற பிரச்சினைகளால்தான் தற்போது இந்த வைபை திட்டத்தில் தாமதம் ஏற்படுகின்றது என சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அமைச்சர் தெரிவித்தார். (வ-4)

## அசத்தலான , ஆடிமாத ஆடைத்தள்ளுபடி

## த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தின்

ஒரு முறை விஜயம் செய்யுங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்



- சாறி (பட்டு கல்லுவைத்தது) 2500/=
- நெற்சாறிகள் 1000/=
- சாறிகள் 1500/=
- ஸ்கேட் வகைகள் 500/=
- பிளவுஸ் வகைகள் 250/=
- T. சேட் வகைகள் 250/=
- பஞ்சாபி வகைகள் 500/=
- ஜீன்ஸ்வகைகள் 500/=
- சேட் வகைகள் 500/=
- கொட்டன் சாறிவகைகள் 500/=
- 01 M சலஞ்சர்துணி 44" 100/=

மற்றும் அனைத்து ஆடை தினுசுகளுக்கும் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.

ஆடி மாதம் முடியும் வரை என்றும் எங்கும் இல்லாதவாறு புதுப்புது டிசைன்களில்

**44, 42, பெரியகடை , யாழ்ப்பாணம்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
07 . 07 . 1974



மறைவு
05 . 07 . 2016

## அமரர் பண்டா இராசவேல்

கடந்த 05.07.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (04.08.2016) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 26/37, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொன்று

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் தீர்ப்பு மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரனால் நேற்று வழங்கப்பட்டது. 6ஆம் எதிரிக்குக் கொலையிலும் கொள்ளையிலும் உள்ள தொடர்பு வழக்குத் தொடருநர் தரப்பினரால் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்படாததால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

4 மற்றும் 5ஆம் எதிரிகள் களவாடப்பட்ட பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இருவருக்கும் 3 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் 5 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது, பாதிக்கப்பட்ட குடும்பத்துக்குத் தலா ஒரு லட்சம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் அவர்களுக்கு மன்று உத்தரவிட்டது.

முதலாம் இரண்டாம் மூன்றாம் எதிரிகள் கொலை செய்து வாகனத்தைக் கொள்ளையடித்தனர் என்பது நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதனால் அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்தது நீதிமன்றம். அதுமட்டுமன்றி இந்த 3பேரும் கொள்ளையடித்த குற்றச்சாட்டும் நிரூபிக்கப்பட்டதனால் 3 பேருக்கும் தலா 3 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

தீர்ப்பு அறிவிக்கப்பட்டபோது திறந்த நீதிமன்றத்தில் நின்ற அனைவரும் எழுந்து நிற்க, மின் குமிழ்கள் அணைக்கப்பட்டு, மின்விசிறிகள் நிறுத்தப்பட்டு மூன்று எதிரிகளுக்கும் தூக்குத் தண்டனைத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. (உ-வ-4)

## மாந்தை

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கொள்ளப்பட்டது. அதன் ஆழம் 434 சென்ரி மீற்றர் என்றும் தெரிவிக்கப்பட்டது.கிணற்றில் 3 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது எலும்புத் துண்டுகள், பல், பயன்படுத்தாத துப்பாக்கி ரவை, முள்ளுக்கம்பிகள், 1994ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 25 சத நாணயக்குற்றி ஒன்று, 2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் காலாவதித் திகதியிடப்பட்ட 145 ரூபாய் பெறுமதி அச்சிடப்பட்ட பியர் டின் ஒன்று, வீதி அபிவிருத்திக்கான பெரியளவிலான கற்கள், வாகனங்களுக்கு பயன்படுத்தும் ஒயில் சீல், எலும்பு ஓட்டு எச்சங்கள் ஒரு தொகுதி, யூ வடிவிலான கம்பி, சில்வர் கரண்டியின் கைபிடி போன்றவை தடயப்பொருள்களாக மீட்கப்பட்டன. அவற்றைப் பகுப்பாய்வுக்கு உற்படுத்தி நீதிமன்றத்தில் அறிக்கையை முன்வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வழக்கு செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கிணற்றைப் பொறுப்பேற்று திருத்தப்பணிகளை மேற்கொண்டு மக்களின் பாவனைக்கு விட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் பிரதேச சபைக்கு நீதிவான் கட்டளையிட்டார். மன்னார் பிரதேச சபை பொறுப்பேற்கும் வரை மன்னார் பொலிஸாரைக் குறித்த கிணற்றுக்குப் பாதுகாப்பு வழங்குமாறும் நீதிவான் பணித்தார். (உ-வ-4,56)

## எங்கும்

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன அங்கு இதனைத் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் பிரதேசத்தில் கடற்படை முகாம் அமைப்பதற்காக 617 ஏக்கர் காணியை சுவீகரிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"இது குறித்து தகவல் எமக்கு வந்தது. அந்த இடத்தில் மக்களின் எதிர்ப்பு உருவாகியுள்ளது. மாவட்டச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று நிலமைகளை அவதானித்துள்ளனர். மாவட்டச் செயலரின் அறிக்கை கிடைத்த பின்னர் தான் இது குறித்து முடிவெடுக்க முடியும்.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு எந்தவொரு இடத்திலும் முகாமை நிறுவும் உரிமை எமக்கு உள்ளது. கடற்படை முகாம் அமைக்கவே அந்தக் காணி சுவீகரிக்கப்படுகிறது" - என்றார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர். (வ-5)

### திருமதி யோகம்மா செல்வராசா



நீர்வேலி தெற்கு நீர்வேலியைச் சேர்ந்த திருமதி யோகம்மா செல்வராசா நேற்று (03.08.2016) புதன்கிழமை காலமானார்.


அன்னார் சந்திரா தேவி, இந்திராதேவி காலஞ்சென்ற அருந்தவராசா ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (04.08.2016) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுரேஸ் கடை, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
சுரேஸ் (பேரன்)
077 5361313

# மரண அறிவித்தல்

## கந்தையா ரட்ணம்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கிழக்கு ஒழுங்கை கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ரட்ணம் அவர்கள் நேற்று (03.08.2016) புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், ரமேஸ், லக்கிராஜ் (இலங்கை வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்கயற்கரசியின் பாசமிகு அண்ணனும், R. சந்திராவின் அன்பு மாமனும், கிசோவர்மா, சபிசனா ஆகியோரின் பாசமிகு பேரனும், கந்தையா-செல்லமுத்து, செல்லத்துரை -செல்லம்மா, சின்ராசா-பவளம் ஆகியோரின் பெறாமகனும், சிவராசா, தவமணிதேவி, நாகே ஸ்வரி, ஜெயம், ரவி, சுரேஸ், லோகேஸ்வரி, ஸ்ரீவாணி,பத்மஸ்ரீ, ஸ்ரீதரன் ஸ்ரீகரன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், மோகன், பிறேமா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2016) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு: 077 0785103 (மகன் ரமேஸ்)

# மரண அறிவித்தல்

## இலங்கைநாதன் பாலசுந்தரம்

(அரச கட்டட ஒப்பந்தக்காரர் பாமினி என்ஜினியர்ஸ், கோப்பாய் லயன்ஸ் கழக உறுப் பினர், ஆசிமட அரசடி விநாயகர் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவரும், அகில இலங்கை சமாதான நீதி வானும், தேசிய நிர் மாணிகள், வட மாகாண கிளை முன்னாள் உப தலை வரும் )



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட த. இ. பாலசுந்தரம் நேற்று (03.08. 2016) புதன்கிழமை காலை இயற்கை எய்தினார்.

அன்னார் கமலாம்பாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இலங்கைநாதன்- மதியாபரணம் தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், பாமினி, சாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜகுலசிங்கம், சத்தியகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், ஆதர்ஸ், அபிலாஸ், அபிராம், ஹரிராம், அனிசா ஆகியோரின் பேரனாரும், கமலாதேவி, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் மகேந்திரநாதன், சறோஜினிதேவி, காலஞ்சென்ற சிறீபாமா மற்றும் வசந்தாதேவி, இராஜகோபால், இராசமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பரஞ்சோதி, காலஞ் சென்ற கமலாதேவி மற்றும் ஞானவேணி, காலஞ்சென்ற பால்சண்முகம், மதுசோதனன், நாகேஸ்வரி, காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் இரஞ்சி, ரமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சிவநாதன், சந்திரகுமார் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.08. 2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரதேவி கணேசலிங்கம்



இளவாலை வடக்கு, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரதேவி கணேசலிங்கம் 03.08.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், Dr. கணேசலிங்கத்தின் (ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி - பிரதேச வைத்தியசாலை - இளவாலை) அன்பு மனைவியும், ரமேஸ் (கணினிப் பொறியியலாளர் - கனடா), பிரகதீஸ் (ஆசிரியர் - யா/சில்லாலை றோ.க.த.க. பாடசாலை), Dr. சசிகேஷ் (சிரேஷ்ட விரிவுரையாளர் - இரசாயனவியற்துறை - யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் நாகேஸ்வரன், கமலாதேவி, சந்திராதேவி, சிவசுந்தரம், ருக்குமணிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவாஜினி (மருந்தளார் - கனடா), சைலஜா (ஆசிரியர் - யா/ உயரப் புலம் குணபாலன் வித்தியாலயம்), Dr. சசிகலா (வைத்தியர் - போதன வைத் திய சாலை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமி யும், கணதீபன், பிரியதர்சினி, கானுஜன், மதுஷாயினி, ஹவிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்

(Ex.3491) (13.18.17) 021 221 1904

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸியுடன் தொடர்கிறார் டெரன் லீமன்

ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளரான டெரன் லீமன், 2019ஆம் ஆண்டு வரை அந்த அணியின் பயிற்சியாளராகத் தொடர ஒப்பந்தம் செய்யப்பட்டார்.
லீமனின் பயிற்சிக் காலம் இந்த மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. இவரின் பயிற்சிக் காலத்திலேயே ஆஸ்திரேலிய அணி பெரும் பெறுபேற்றை வெளிப்படுத்தியது. இதனால் லீமனுடனான ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவர ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை விரும்பவில்லை. எனவே 2019 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரைக் கருத்தில் கொண்டு, அடுத்த மூன்று வருடங்கள்வரை அவரது ஒப்பந்தத்தை புதுப்பித்துள்ளது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை. (ம)





# றொயேர்ஸ் கிண்ணத்தை சொந்தமாக்கினார் கேலப்

றொயேர்ஸ் கிண்ணத் தொடரில் (கனடா) பெண்கள் ஒற்றையர் பிரிவில் சிமோனா கேலப் கிண்ணம் வென்றார்.
நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் மூன்றாம் நிலை வீராங்கனையான சிமோனா கேலெப்பை எதிர்த்து, 9 ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் மடிசன் கீய்ஸ் மோதினார். முதல் செற் கேலப்புக்கு போராட்டமாக அமைந்தது. இதனால் அந்த செற்றை அவர் 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் போராடிக் கைப்பற்ற வேண்டியதாகவே அமைந்தது. ஆனால், இரண்டாவது செற்றில் கேலெப்பின் ஆதிக்கம் மிகுந்திருந்தது. 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்றிய அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானார். (ம)

## இரண்டாவது டெஸ்ட்டில் நுவான் பிரதீப் சந்தேகம்


இன்று நடைபெறவுள்ள ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளரான நுவான் பிரதீப் களமிறங்குவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராக நுவான் பிரதீப் திகழ்ந்து வருகிறார். பல்லேகலேயில் நடைபெற்ற ஆஸ்திரேலியா அணிக்கெதிரான முதல் டெஸ்ட்டில் இவர் மட்டும்தான் இலங்கை அணியில் விளையாடிய வேகப்பந்து வீச்சாளராக இருந்தார். ஆனால், இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் பிரதீப் பங்குபற்றுவதில் சந்தேகம் ஏற்பட்டது.
காலியில் இன்று ஆரம்பமாகவுள்ள இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்காக வலைப் பயிற்சியில் ஈடுபட்டபொழுது, நுவான் பிரதீப்பின் தொடையில் காயம் ஏற்பட்டது. இன்று ஆட்டத்துக்கு முன்பாக நடைபெறும் உடற்தகுதிப் பரீட்சையில் சித்திபெற்றால் மட்டுமே பிரதீப் இரண்டாவது டெஸ்ட்டில் களமிறங்கலாம். இல்லையெனின் அவர் அணியிலிருந்து நீக்கப்படுவார். இலங்கை அணியின் ஏனைய வேகப்பந்து வீச்சாளர்களான பிரசாத், சமீர, லக்மல், வண்டர்சே ஆகியோரும் காயத்தால் அவதிப்பட்டு வருகின்றனர். (ம)



## ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுகிறார் பிலே?

ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிவைக்க பிரேஸில் ஒலிம்பிக் சம்மேளனத்தினால் பீலேவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.
பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நாளைமறுதினம் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. ஆரம்ப நிகழ்வில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிவைக்க பிரேஸிலின் 'தங்கமகன்' என்று அழைக்கப்படும் கால்பந்து ஜாம்பவான் பிலேவுக்கு அந்த நாட்டின் ஒலிம்பிக் சம்மேளனத்தால் அழைப்பு விடுக்கப்பட்டது.
ரியோ ஒலிம்பிக் தொடரில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைக்க எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், குறித்த திகதியில் வேறுசில நிறுவனங்களுடனும் ஒப்பந்தங்கள் உள்ளன.
எனவே ஏனைய நிறுவனங்களுடன் கலந்தாலோசித்த பின்னரே குறித்த விடயம் தொடர்பாக முடிவு எடுக்கவேண்டியுள்ளது என்று பிலே தெரிவித்தார். பிலே இன்று மதியத்துக்குள் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும். (ம)





ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீசிய பலத்த காற்றினால் ஒலிம்பிக் கட்டுமானங்கள் சேதமடைந்தன. (ம-ரி4)

## ஸ்டோக்ஸின் விலகல் பாதிப்பை ஏற்படுத்தாது

### அன்டர்சன் தெரிவிப்பு

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணியிலிருந்து சகலதுறை வீரரான ஸ்டோக்ஸ் விலகியுள்ளமை அந்த அணிக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என சக வீரரான அன்டர்சன் தெரிவித்தார்.
இங்கிலாந்து – பாகிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட், நேற்று ஆரம்பமாகியது. முதல் இரு ஆட்டங்களின் முடிவில் இரு அணிகளும் 1:1 என்று சம நிலையில் உள்ளன.
எனவே நடைபெற்றுவரும் ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரில் ஆதிக்கம் செலுத்தும் என்பதால் இரு அணிகளுக்கும் மிக முக்கியமான ஆட்டமாக கருதப்படுகிறது.
இந்த இக்கட்டான நிலையில், இங்கிலாந்து அணியிலிருந்து ஸ்டோக்ஸ் விலகியமை அந்த அணிக்கு பாதிப்பை உண்டுபண்ணும் என்று கருதப்படும் நிலையில், ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அன்டர்சன் இங்கிலாந்தின் வெற்றிவாய்ப்பு குறித்து பேசியுள்ளார்.



ஸ்டோக்ஸின் இழப்பு மிகப் பெரியது. இது அனைவரும் அறிந்ததே. என்னிடத்திலும் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் அவர் இலாதமையால் அணியில் சமநிலைத் தன்மை பாதிக்கப்படும் என்ற கருத்துக்களை ஏற்க முடியாது. ஏனைய வீரர்களும், ஸ்டோக்ஸின் இடத்தை நிரப்பும் வீரரும் இங்கிலாந்தை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்வர் என்பதில் ஐயமில்லை என அன்டர்சன் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் வெற்றிக்கு வருணபகவான் இடையூறு

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா வெற்றியின் விளிம்பில் உள்ள போதிலும் மழை இந்தியாவின் வெற்றியைச் சந்தேகமாக்கியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 196 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக பிளக்வூட் 62 ஓட்டங்களையும், சாமுவேல்ஸ் 37 ஓட்டங்களையும், கும்மின்ஸ் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்தியாவின் சார்பில் அஸ்வின் 5 இலக்குகளையும், இசாந் சர்மா, மொகமட் சமி இருவரும் தலா இரு இலக்குகளையும், மிஸ்ரா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா 500-9 என்ற நிலையிலிருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக லோகேஸ் ராகுல் 158 ஓட்டங்களையும், ரகானே ஆட்டமிழக்காமல் 108 ஓட்டங்களையும், சஹா 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 304 ஓட்டங்களைக் கட்டாயம் பெறவேண்டும் என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் நான்காம் நாள் முடிவில் 48-4 என்ற நிலையிலுள்ளது. ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்று முன்தினம் மழை காரணமாக 15 பந்துப்பரிமாற்றங்களே வீசப்பட்டன. எனவே இந்திய அணி மழை, மேற்கிந்தியத் தீவுகள் என இரு முனைப் போராட்டத்தில் ஈடுபடவேண்டியுள்ளது. (ம)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 4

*எவரெஸ்ட் வி.க. தொடர்*

பொன் விழாவை முன்னிட்டு புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து திருக்குமரன் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மயில்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது.

*வொலிகிங்ஸ் வி.க. தொடர்*

கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில், இரவு 7 மணிக்கு சீமா அணியை எதிர்த்து பளை மத்திய அணியும், இரவு 7.45 மணிக்கு வழக்கம்பரை அம்பாள் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணியும், இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதவுள்ளன.

*பாரதி வி.க. தொடர்*

பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் வரணி 'யுத்' அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் அணியும் மோதவுள்ளன. (ம-23-108)

## சம்பியனானது வீனஸ் அணி

யாழ்ப்பாணம், ஓக. 4

சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் பருத்தித்துறை வீனஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. பருத்தித்துறை வீனஸ் அணியை எதிர்த்து சங்கானை கிங்ஸ்ரார் அணி மோதியது. 8 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை கிங்ஸ்ரார் அணி 4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து, 37 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை வீனஸ் அணி 4.2 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து, இலக்கை அடைந்து, 7 இலக்குகளால் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422-108)



*காலில் காயமடைந்து பாகிஸ்தானுக்கு எதிராக நேற்று ஆரம்பமான டெஸ்ட் ஆட்டத்தில் இடம்பெறாமல் ஓய்விலிருக்கும் இங்கிலாந்தின் சகலதுறை வீரரான ஸ்டோக்ஸ், ஆட்டம் ஆரம்பமாகும் முன்பாக மைதானத்துக்கு வருகை தந்ததுடன் நின்றுவிடாது சக வீரர்களின் பயிற்சிக்கும் உதவினார். (ம)*

## நவஜீவன்ஸ் - கலைமதி அணிகள் இறுதியில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 4

அரியாலை திருமகள் சன சமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ், புத்தூர் கலைமதி அணிகள் இன்று மோதவுள்ளன.

திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் அணியும், மட்டுவில் மோகனதாஸ் அணி யும் மோதின.

ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் 25:18, 25:21, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய நவஜீவன்ஸ் அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனா னது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் புத்தூர் கலை மதி அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி மோதியது.

முதல் மூன்று செற்களையும் முறையே 25:23, 25:16, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கலைமதி அணி, 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இறுதியாட்டம் அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும்.

நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் கலந்துகொள்கிறார். (ம-23)

## குறிஞ்சிக்குமரன், கரவைச்சுடர் அணிகளுக்கு முன்னேற்றம்

கரணவாய், ஓக. 4

பொலிகை பாரதியின் கால்பந்தாட்டத் தொடரில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் மற்றும் கரவைச்சுடர் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

பாரதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் திக்கம் இளைஞர் அணியும் மோதின. ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் குறிஞ்சிக்குமரன் அணியின் குருபரன் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 30 நிமிடத்தில் கஜந்தன் மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று முன்னிலை வகித்தது குறிஞ்சிக்குமரன். பதிலடி கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது திக் கம் இளைஞர் அணி. 43 ஆவது நிமிடத்தில் அரிகரன், 48 ஆவது நிமிடத்தில் அகிலரூபன் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய, நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவு செய்தன. சம நிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட, முடிவில் 5:4 என்ற



கோல் கணக் கில் வெற்றி பெற்றது குறிஞ்சிக்குமரன். தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தில் முழுமையாக ஏக ஆதிக்கம் செலுத்திய கரவைச்சுடர் அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-108)

## வென்றது ஐயனார்

யாழ்ப்பாணம், ஓக. 4


மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஐயனார் அணி வெற்றிபெற்றது.

இருதயராஜாவின் மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தல் துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து நாரந்தனை அண்ணா அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது துறையூர் ஐயனார் அணி. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

**அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை (சின்னத்தம்பி)**



பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை (சின்னத்தம்பி) 02.08.2016 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின்-பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் மேரி ஜெனோவாவின் அன்புக் கணவரும் ஜேன் ஜெமினா (லண்டன்), ஜெகரூபன்(டோஹா), ஜெகதீபன் (விரிவுரையாளர்-தொழிநுட்ப கல்லூரி, மன்னார்), ஜெபநேசன் (முன்னாள் தவிசாளர் மானிப்பாய் பிரதேசசபை,அபிவிருத்தி உத்தியோகத்தர்-நீர் வழங்கல் திணைக்களம்) , காலஞ்சென்ற ஜெகஜீவன், ஜெனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்ற அன்சலம், லூட்ஸ்மேரி (கனடா), ஞானரத்தினம் (ஜேர்மன்), காலஞ்சென்ற சூசைநாதன், ஞானப்பிரகாசம் ஆகியோரின் சகோதரரும் மனோகரன், ரேணுகா, நிவித்திகா ஆகியோரின் மாமனாரும் கதிரவன், எழில், விஸ்னு, ஜீவன், ஹரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.08.2016) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் மானிப்பாய் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் பெரியவிளான் புனித யுவாணியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பெரியவிளான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் வீதி,**
**மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 3496085, 077 3400950**

# தேசியமட்ட கூடைப்பந்தாட்டம் யாழில் நடைபெற வாய்ப்புண்டு

யாழ்ப்பாணம், ஓக. 4

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்கள் யாழ். மாவட்டத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அறியவருகிறது.

செப்டெம்பர் மாதம் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளிலேயே மேற்படி தொடரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தொடரை நடத்துவதுக்கு யாழில் உள்ள ஐந்து கூடைப்பந்தாட்டத் திடல்களை வடமாகாண உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் தெரிவுசெய்து கொடுத்துள்ளபோதிலும், அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரவுள்ள பிரத்தியேகக் குழு திடல்களை ஆராய்ந்து தொடரை நடத்துவது தொடர்பான இறுதி முடிவெடுக்கும்.

(ம-23)

**SPOKEN ENGLISH**

**IELTS**



இலகுவழி கற்பித்தல் முறை மூலமான ஷாம்சனின் IELTS பரீட்சைக்கான புதிய ஆங்கில பயிற்சி பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

வாரநாள் வகுப்புகள்
திங்கள் தொடக்கம் வியாழன் வரை
காலை 8.30 - 11.00

IELTS

பயிற்சியில் இணைபவர் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஒருபிரிவில் 16 பேர் மட்டும்.

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**External Degree**

பேராதனை பல்கலைக் கழகம்
[BA]1ஆம் வருடம்

2016 ஆம் ஆண்டு பொதுக்கலைமாணி பட்டத்துக்கான அனுமதிகள் கோரப்பட்டுள்ளன.

Note: பதிவுகளை எமது அலுவலகத்தில் 20.08.2016 இற்கு முன்னர் மேற்கொள்ளவும்.

**aat** (SRILANKA)
AA 1, AA 2, AA3
Qualification:- G.C.E. O/L 06 Pass
Medium :- Tamil & English

Further Details:-
Jaffna College
Undergraduate Dept
464, Hospital Road, Jaffna,
021 222 3382, 021 222 9149

**Clerk தேவை**

**தகைமை**: A/L வயது எல்லை: 23-30.
5km க்கு உட்பட்டோர் நாளை (05.08.16) CV உடன் 3.30 pm இற்கு நேரில் வரவும்.
**French Language Centre.**
**No. 40, Palaly Road, Aariyakulam, Jaffna,**
**077 9789456**

**PERSONAL CLASS**
**PHYSICS A/L-2018**

* பொறியியல்
* அலைகளும் அதிர்வுகளும்

ஆரம்பம்: 06.08.2016 சனி மாலை 5.30 pm
* ஆசிரியர் திரு ம.ஸ்பெல்மன் (Bsc.PGDE)

இடம்: 10/10 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (பெரிய கோயில், கரித்தாஸ் அருகில்)
**077 6116724**



**யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் ஏற்பாட்டில்**
**தென்மராட்சி பிரதேச மாணவர்களுக்கான**

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட இலவச வழிகாட்டல் கருத்தரங்கு**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தென்மராட்சி பிரதேச மாணவர்களின் பரீட்சை பெறுபேற்றை அதிகரிக்கும் நோக்கில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கௌரவ ஈ. சரவணபவன் அவர்களது வழிப்படுத்தலில் சரவணபவன் அறக்கட்டளை நடாத்தும் விசேட இலவச வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

**சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபம்**
**06.08.2016**
**சனி மு.ப.8.30 - பி.ப. 3.30**

**இக்கருத்தரங்கில்**

யாழ். மாவட்ட முன்னணி ஆசிரியர் திரு.வே. அன்பழகன்
(கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)
வவுனியா யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர் திரு. என்.எஸ். தீபன்
(மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)
யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர் திரு. S. பத்மநேசன்
(ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயம்)

**அனைத்து மாணவர்களும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது ஆசிரியர்களுடன் வருகைதரவும்.**

சரவணபவன் அறக்கட்டளை
கருத்தரங்கு ஏற்பாட்டுக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறு[illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.